பக்கங்கள்: இருபது

# உதயன்


விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 07 ஞாயிற்றுக்கிழமை (21.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 207

# 'வணங்காமண்' ஏற்றிவந்த பொருள்கள் தமிழருக்குக் கிடைக்க இந்தியா உதவும்

## உறுதியளிக்கிறார் வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா





புதுடில்லி, ஜூன் 21

இலங்கையில், வன்னிப் பிரதேசத்தில் நடைபெற்ற போரினால் பாதிகப்பட்டு இடம் பெயர்ந்து, வவுனியா அகதி முகாம்களில் தங்கியுள்ள தமிழர்களுக்கு வழங்குவதற்கென, ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலம் பெயர் மக்களிடம் சேகரிக்கப்பட்ட உதவிப் பொருள்கள், உரியவர்களுக்குக் கிடைக்க இந்தியா உதவும்.

இவ்வாறு உறுதி அளித்திருக்கிறார் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா.

இது தொடர்பாகத் தமிழக முதல்வர் மு.கருணாநிதி எழுதிய கடிதத்தை மாநில அமைச்சர் பொன்முடி நேற்று நேரில் கையளித்த போதே எஸ்.எம்.கிருஷ்ணா இந்த உறுதி மொழியை வழங்கினார்.

உணவு மற்றும் மருந்துப் பொருள்களுடன் ''கப்டன் அலி'' (வணங்கா மண்) கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு அப்பால் நின்று அனுமதி கேட்டபோது உள்ளே செல்ல அனுமதி மறுக்கப்பட்டதால் அந்தக் கப்பல் அங்கிருந்து வந்து சென்னைத்துறை

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அதிகாரிகள் இருவர் தடுத்து வைப்பு

கொழும்பு, ஜூன் 21

வவுனியாவில் உள்ள நலன்புரி முகாமில் பணியாற்றி வந்த இரு ஐ.நா.அதிகாரிகள் இலங்கை அரசாங்கத்தால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகம் இத் தகவலைத் தெரிவித்துள்ளது. தடுத்து வைக்கப்பட்டுள்ள இருவரும் தமிழர்கள் ஆவர்.

ஊழியர்கள் காணமல் போனதாகத் தகவல் வந்து சில நாள்கள் கழிந்த பின்னரே அவர்கள் அதிகாரிகளால் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளதாக

(20 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை**

ஜி.சி.ஈ உயர்தர மாணவர்களுக்கான 2 பக்கங்கள் கொண்ட மாதிரிவினாத்தாள்கள்

## வடக்கின் தொலைபேசிச் சேவையைச் சீராக்க கொக்காவிலில் 172 மீற்றர் உயரக் கோபுரம்

கொழும்பு,ஜூன் 21

வடமாகாணத்தில் தொலைபேசிச் சேவையை சீராக்கும் இலக்குடன் வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் மத்திய இடமாக விளங்கும் கொக்காவிலில் 172 மீற்றர் உயரமான தொலைத் தொடர்பு கோபுரம் ஒன்று அமைக்கப்படும்.

இந்தக் கோபுரம் அமைக்கும் பணிக்கு 150 மில்லியன் ரூபா ஒதுக்கப்படவிருக்கின்றது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## வெங்காயம், கடலுணவு, புகையிலை 31 லொறிகளில் நேற்றுத் தெற்குக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணத்தில் இருந்து 217 மெற்றிக்தொன் வெங்காயம் ஏ-9 பாதையூடாக லொறிகளில் நேற்று எடுத்துச்செல்லப்பட்டது.

கொழும்பில் இருந்து தனியார் வர்த்தகர்கள் பொருள்களை ஏற்றிவந்த 34 லொறிகளும் நேற்றுக் கொழும்பு திரும்பின.

அந்த லொறிகளில் 28 லொறிகளில் 217,000 கிலோ (217 மெற்றிக்தொன்) வெங்காயம், 10,500 கிலோ நண்டு மற்றும் இறால், 8,500 கிலோ புகையிலை ஆகியன அனுப்பப்பட்டுள்ளன அத்துடன் குளிர்பானங்கள் அடைக்கப்படும் வெற்றுப் போத்தல்களும் எடுத்துச் செல்லப்பட்டதாக அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

பொருள்கள் இல்லாமல் வெறுமையாக ஆறு லொறிகள் செல்வதாகவும் அவர் மேலும் கூறினார்.

மின் உற்பத்திக்கென 4 பவுஸர்களில் எடுத்துவரப்பட்ட எரிபொருள்கள் காங்கேசன் துறைக் களஞ்சியத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (அ-1)

## குடாநாட்டில் இரவு நேர ஊரடங்கு 2½ மணி நேரம் குறைக்கப்படும்; விரைவில் முற்றாக நீக்க இணக்கம்

### அமைச்சர் டக்ளஸ் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம்,ஜூன் 21

குடாநாட்டில் இப்போது இரவு 9 மணி தொடக்கம் அதிகாலை 4.30 மணிவரை நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டம் இன்னும் இரண்டொரு நாள்களில் இரவு 11 மணி தொடக்கம் 4 மணி வரையாகக் குறைக்கப்படும்.

அத்தோடு யாழ். நகரில் உள்ள முக்கிய வீதிகளை மக்கள் போக்குவரத்துக்கு திறந்து விடுவதற்கும் முடிவாகி உள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று அவரது அலுவலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போது

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியினூடாக பொதுமக்கள் பஸ் சேவை எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பம்?

கொழும்பு,ஜூன் 21

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு ஏ-9 வீதி ஊடான பொதுமக்கள் போக்குவரத்து எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகவிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

முதலில் போக்குவரத்துச் சபையின் ஐந்து பஸ்களில் பொதுமக்கள் பயணம் செய்ய வசதி செய்யப்படும். இந்தத் தொடரணி

(20 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகரசபையில் போட்டியிடுவதற்கு ஐ.தே.கட்சி நாளை வேட்புமனுத் தாக்கல்

### முகவர் டாக்டர் ஜயலத் வருகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஐ.தே. கட்சி நாளை தாக்கல் செய்யவிருக்கிறது.

கட்சியின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா

(20 ஆம் பக்கம் பார்க்க)



டயலொக் CDMA இப்போது!
யாழ்ப்பாணத்தில்

டயலொக் CDMA முற்கொடுப்பனவு இணைப்பு ரூ. 5999/- மட்டுமே

- இலவச IDD இணைப்பு
- செக்கன் அடிப்படையிலான கட்டணங்கள்
- ஆரம்பக் கட்டணம் எதுவுமில்லை
- ரீலோட் செய்யும் வசதி

Dialog

வாடிக்கையாளர் சேவை இலக்கம் 011 7 100 100

Fixed Line

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

இன்று (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை பொன்விழாக் காணும் நீர்வேலி ஸ்ரீமுருகன் மாதர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கமும் நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் மென்மேலும் வளர்ச்சியடைய எல்லாம் வல்ல நீர்வைக் கந்தனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

★ நீர்வேலி சிவசங்கர நூல் நிலையம்.
★ ஸ்ரீ சுப்பிரமணியம் நூல் நிலையம்.
★ நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான பரிபாலன சபையினர்.
★ கோப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்.
★ நீர்வேலி தெற்கு விவசாய சம்மேளனம்.
★ நீர்வேலி திருமுருகன் அறநெறிப் பாடசாலை.
★ நீர்வேலி தெற்கு இந்து இளைஞர் மன்றம்.

## விவசாயிகளே! வியாபாரிகளே! உங்களின் கவனத்திற்கு

மீண்டும் விவசாய உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் (வெங்காயம், பீற்றூட்) உங்கள் இடத்தில் வந்து ஏற்றப்பட்டு தம்புள்ளை, கொழும்பு மார்க்கட்டில் (நீங்கள் விரும்பும் கடையில்) அவை கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: E.தர்மகுலசிங்கம்,
கிரிசா ராஸ்ஸ்போட், ஊரெழு.
தொ.பே: 0777 537374, 077 1908702

## கட்டடம் உடன்தேவை

யாழ்.நகர் மத்தியிலிருந்து 3 கிலோ மீற்றருக்குள் 1000 சதுர அடிக்கு மேற்பட்ட, குறைந்தது மூன்று வாகனங்கள் தரித்து நிற்கக் கூடிய இடவசதியுள்ள, சுற்றுமதிலுடன் கூடிய வீடு/ கட்டடம் பிரபல நிறுவனமொன்றுக்கு உடன்தேவை.

தொடர்புகளுக்கு: 0777389696

## மரண அறிவித்தல்கள்

### அம்பலவாணர் முருகேசு

காரைநகர், மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும் பண்டாரவளையை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் முருகேசு (குகன் ஸ்ரோர்ஸ், பண்டாரவளை) நேற்று (20.06.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அம்பலவாணர் - பொன்னுப்பிள்ளையின் அன்பு மகனும் தம்பிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலத்தின் அன்புக் கணவரும் சாந்தி, சிவபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் வரதராசாவின் அன்பு மாமனாரும் அபிராமியின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, கிருஸ்ணபிள்ளை, பாக்கியம் மற்றும் மனோன்மணி, கமலம்மா, பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை பண்டாரவளையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அல்வின் வீதி,
காரைநகர்.

தகவல்:
அ.பேரம்பலம் (தம்பி).

### மோசஸ் ஜெயசீலன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மோசஸ் ஜெயசீலன் நேற்று (20.06.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மோசஸ்-மரியம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வரும். அலன்றோஸின் கணவரும், யெலோ, மதி ஆகியோரின் தந்தையும், கில்டா, மெற்றில், மாஜி,காலஞ்சென்ற யுலியானா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இம்மானுவேல் - மாகிறேற் (பொன்னம்மா) ஆகியோரின் பெறாமகனும் மொனிக்கா, யேசுதாசன், கிறிஸ்ரி, ஸ்ரெலா ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (22.06.2009) திங்கட் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத் திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்ததன் பின் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.214, இரண்டாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
T.P. 0212224174

தகவல்:
யோ.பாலசிங்கம் (மச்சான்).

## திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உண்டு. சகல மதத்தவரும் தொடர்பு கொள்ளவும். பதிவுக் கட்டணங்கள் அறவிடப்பட மாட்டாது.

துர்க்கா திருமண சேவை,
இல.9, சங்கிலியன் வீதி, நல்லூர்.
(86389) T.P: 0602211814, 0214591417

## தேவை

கணனியில் தட்டச்சு செய்யக் கூடிய பெண்பிள்ளை தேவை.

தொடர்பு: 0775383545,0602216295,0776612113

## கார் விற்பனைக்கு

13 SRI XXXX லான்சர் வெள்ளை நிறம் விற்பனைக் குண்டு.

தொடர்பு: R.ரஞ்சிதன்
0776280153. (86365)

## காசாளர், சமையற்காரர் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் பிரபல தங்கு விடுதிக்கு .

01.கணனி அனுபவமுள்ள காசாளர்
02.மேலைத்தேய, கீழைத்தேய உணவு தயாரிப்பதில் அனுபவமுள்ள சமையற்காரர் தேவை.

நேரில் சமுகந்தரவும்.
Blue Haven - புளு ஹெவன், 70, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 9958, 0776139898.

## விற்பனைக்கு

கைத்தொழிலுக்குத் தேவையான துணைக் கருவி, உராய்கருவி (DRILLER, GRINDER) தரமானவை (BLACK & DECKER, KEN) விற்பனைக்குண்டு.

தொடர்பு: நந்தலாலா இரும்பகம்,
(சி/559044) இல.29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## வேலையாள்கள் தேவை

சேவிஸ் வேலை தெரிந்தவர்கள், மெக்கானிக், சேவிஸ் பழகுப்வர்கள் தேவை. வேலை பழகுபவர்களுக்கும் சம்பளம் கொடுக்கப்படும். 22.06.2009 திங்கட்கிழமை காலை 8 - 10 மணி வரை.

T.P: 0212228076
சந்நிதி முருகன் வேக் சொப் அன் சேவிஸ்
(சி/559106) 241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## ஆள் தேவை

மில் அல்லது பலசரக்குக் கடையில் வேலை செய்ய விரும்புவோர் மற்றும் சீட்டு எழுதுநர் தேவை. கீழ்க் கண்ட முகவரிக்கு நேரில் வரவும் தங்குமிடவசதி, உணவு உண்டு.

சிறி கண்ணன் ஸ்ரோர்ஸ் 25, பலாலி றோட், திருநெல்வேலி.

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள், குறைந்தது 5அறைகள் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. இணைந்த குளியலறை, விசாலமான முற்றம் இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்பு: 0773865475. (86300)

### எந்திரவியல் பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் எந்திரவியல் தொழில் நுட்பக் கற்கை நெறிகள் யாவும் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

எனவே இக்கற்கை நெறிகளுக்கு தம்மைப் பதிவு செய்த மாணவர்கள் அனைவரையும் தவறாது வகுப்புக்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்பதாக கற்றல் சாதனங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (1)

## பரிசுத்த புதுமைமாதா இளைஞர் படைப்பாக்க இயக்கம்

மேற்படி மன்றத்தால் நடத்தப்பட்ட அறிவுத் தேடல் போட்டித் தொடர் 01 இல் பரிசு பெறுபவர்களின் விவரம்:

1ஆம் இடம்: செல்வி ஜெறின் அன்ரனி
2ஆம் இடம்: செல்வன் லக்ஸ்மன் றோபேட் ஜோயல்
3ஆம் இடம்: செல்வன் பலோமியற் பங்கிராஸ்

ஆறுதல் பரிசு பெறுவோர்:

1.மங்களம் ரதி
2.கொ.நிதர்சினி
3.கஸ்தூரி சந்திரசேகரம்
4.பி.பிரதீபன்
5.மரியதாஸ் அன்ரன்

மேற்படி போட்டித் தொடரின் பரிசளிப்பு நிகழ்வு 21.06.2009 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் பரிசுத்த புதுமைமாதா ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. எனவே பரிசில் பெறுபவர்கள் அன்றைய தினம் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(எமது கன்னி முயற்சிக்கு ஆதரவு நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்)

நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழு.

## புகைப்படப் பிடிப்பாளர் தேவை

யாழ்.மாவட்டத்தில் புகைப்படத் துறையில் முன்னோடியான நாங்கள் முதற்கட்டமாக மானிப்பாய், மல்லாகம், சுன்னாகம், உரும்பிராய், அச்சுவேலி, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில்கிளை நிறுவனங்களை ஆரம் பிக்கவுள்ளோம்.

இந்த நிறுவனங்களுக்கு
புகைப்படப்பிடிப்பாளர் (VDO & Photo), சிட்டை எழுதுனர் (Bill clerk) தேவை.

தொடர்பு:
மூர்த்தி டிஜிற்றல் கலர்லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### சுப்பையா சின்னத்தங்கம்



சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சின்னத்தங்கம் நேற்று (20.06.2009) சனிக் கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையாவின் அன்பு மனைவியும் பரிமளராசா, தர்மகுலசிங்கம், திருநாவுக்கரசு, புவிநாயகம், இராசகுலதேவி, புனிதவதி, மங்கையர்க்கரசி, செல்வறஞ்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இராசநாயகி மற்றும் மகேஸ்வரி, அந்தோனிமுத்து, மஞ்சுளா, காலஞ்சென்ற பிறிஸ்கப் மற்றும் லோகேந்திரம், இராசேந்திரம், வசந்தராசா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

தகவல்:
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### செல்வி கமலாம்பிகை வல்லிபுரம்



(ஆங்கில போதனாசிரியை)

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கமலாம்பிகை நேற்று முன்தினம் (19.06.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் (இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக்டர்) - செல்லம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வியும் யோகாம்பிகை (கனடா), சிவஞானம், ஜெதாம்பிகை, ஆனந்தசிவம் (கனடா), லலிதாம்பிகை (பிரான்ஸ்), ஞானாம்பிகை (பிரான்ஸ்), கங்காதரன், ஸ்ரீதரன் (சிரேஷ்ட உதவிப்பதிவாளர், வவுனியா வளாகம்), ராதா - மனோகரன் (கனடா) ஆகியோரது அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், சிவராமலிங்கம் மற்றும் அருளம்மா, இந்திராதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), நல்லநாதன் (பிரான்ஸ்), தவமணிதேவி (முன்னாள் எழுதுவினைஞர், யாழ்.பல்கலைக்கழகம்), மாலதி (கனடா) ஆகியோரது அன்பு மைத்துனியும் சிவப்பிரியன், லாவண்யா, அம்பிகா, பிரியதர்ஷன் ஆகியோரது அன்பு மாமியும் மோகனமுரளி, ஜனகன், ஜெகன்மோகன், மோகனசுதன் ஆகியோரது பெரிய தாயுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை இல.68, சட்டநாதர் வீதி, நல்லூர் என்ற முகவரியில் அமைந்துள்ள இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று செம்மணி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சட்டநாதர் வீதி, நல்லூர்.
T.P.No. 0777533596

தகவல்:
ஸ்ரீ தரன் (சகோதரன்).

## கூரியர் சேவை

இலங்கையின் சகல இடங்கள் மற்றும் உலகின் சகல நாடுகளுக்குமான கடிதங்கள், பொதிகள், CD மற்றும் ஆவணங்கள் போன்றன

✷ விரைவாக ✷ பாதுகாப்பாக ✷ குறைந்த கட்டணத்தில்

குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்

ARRUL GLOBAL EXPRESS இல. 01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். T.P: 021 2226113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானில் கொந்தளிப்பு



ஈரானின் சர்ச்சைக்குரிய ஜனாதிபதி தேர்தல் முடிவு வெளியான ஜூன் 12இலிருந்து எதிர்க்கட்சி வேட்பாளரான மிதவாதி மிர்ஹுசைன் மௌசவியின் ஆதரவாளர்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பொலிஸாருடன் மோதுகின்றனர்.



ஜனாதிபதி தேர்தலில் அஹமடி நிஜாட் 63 வீத வாக்குகளை பெற்றார். பல ஈரானியர்களுக்கு ஆச்சரியமளிக்கும் விடயமாக இது இருந்தது.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என அதிகளவுக்கு எதிர்பார்க்கப்பட்ட மௌசவிக்கு 34 வீதவாக்குகள் மாத்திரமே கிடைத்தன.

வாக்களிப்புக்கு சில நாள்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட கருத்து கணிப்புகள், மௌசவிக்கு இறுதி நேரத்தில் ஆதரவு பல மடங்காக அதிகரித்து வருவதைப் புலப்படுத்தின. இதன் காரணமாக இரண்டாவது சுற்று வாக்கெடுப்பு இடம்பெறலாம், அதில் மௌசவி வெல்லலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.

எனினும், மூன்று வார காலத்துக்கு முன்னர், மௌசவி பிரசாரத்தை ஆரம்பித்திராத காலப்பகுதியில், அஹமடி நிஜாட் முன்னிலையில் காணப்பட்டார்.

ஜனாதிபதி தேர்தலில் அஹமடி நிஜாட் வென்றார் என்ற அறிவிப்பை தொடர்ந்து நிலவும் குழப்பநிலையை 1979 இஸ்லாமிய புரட்சிக்கு பின்னர் காணப்பட்ட மோசமான நிலை என்கின்றனர் ஆய்வாளர்கள்.

டெஹ்ரானின் வட மற்றும் மத்திய பகுதிகள் உட்பட ஐந்து முக்கிய நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன. இஸ்லாமிய புரட்சிக் காலத்தில் போல இல்லாமல் இம்முறை மாணவர்களுடன் முதியவர்களும் வீதியில் இறங்கியுள்ளனர்.

வாக்கு மோசடி மற்றும் கிராமங்களில் அஹமடி நிஜாட்டுக்கு காணப்பட்ட ஆதரவு உட்பட பல விடயங்கள் அவரது வெற்றிக்கு காரணம் என்ற கருத்தும் நிலவுகிறது.

என்றாலும் இரண்டாம் சுற்று வாக்களிப்பு இடம்பெற்றிருந்தால் அஹமடி நிஜாட் தோற்றிருப்பார். ஏனைய மிதவாத வேட்பாளர்களின் ஆதரவு மௌசவிக்கு கிடைத்திருக்கும் என்ற உணர்வும் தென்படுகிறது.

மௌசவியின் ஆதரவாளர்கள் தாம் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கப் போவதாக தெரிவிக்கின்றனர். இதுவரை இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் 10இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மக்களின் எதிர்ப்பை தணிப்பதற்காக ஈரானின் அதிஉயர் அதிகார பேரவை வாக்குகளை மீண்டும் எண்ணுவதற்கு தயார் என அறிவித்துள்ளது.

எனினும் ஈரானின் ஆத்மீகத் தலைவர் ஆயத்துல்லா கமேனி தலைமை யிலான குழுவினர் நடைபெற்ற வாக்களிப்பை இரத்துச் செய்ய முடியாது என தெரிவித்துள்ளனர்.



தேர்தல் முடிவுகளை நியாயப்படுத்துவதற்கு தேவைப்பட்டால் ஈரானின் அதிகாரிகள் படை பலத்தை பயன்படுத்தவும் முயலலாம்.

மேற்குலகத்துடன் ஒப்பிடும் பேழது தங்களுக்கான சுதந்திரம் எவ்வளவு மட்டுப்படுத்தப் பட்டுள்ளது என்பதை ஈரானியர்களுக்கு இது உணர்த்துவதாக அமையலாம்.

அஹமடி நிஜாட்டிற்கு ஆதரவு வழங்குமாறு ஈரானின் ஆன்மீக தலைவர் ஆயத்துல்லா கமேனி பகிரங்கமாக விடுத்த வேண்டுகோளை மக்கள் நிராகரித்துள்ளதாலும் தொடரும் வன்முறைகள் இஸ்லாமிய புரட்சியின் சட்ட பூர்வ தன்மை குறித்து, அதற்கான மக்கள் ஆதரவு குறித்து கேள்வி எழுப்பி உள்ளதாலும் இந்த குழப்ப நிலையைத் தடுத்து நிறுத்த படைபலம் பயன்படுத்தப்படலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

84 வீதமான வாக்காளர்கள் வாக்களித்துள்ளமை, தான் மீண்டும் தெரிவு செய்யப்பட்டதன் நியாயபூர்வ தன்மையை வெளிப்படுத்துகின்றது என அஹமடி நிஜாட் கூறுகிறார்.

தேர்தல் முடிவுகளுக்கு எதிராக உத்தியோக பூர்வமாக எதிர்ப்பை மௌசவி வெளியிட்டுள்ளதுடன் இரண்டாம் கட்ட வாக்களிப்புக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் அஹமடி நிஜாட்டிற்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்துள்ள ஆன்மீக தலைவர் ஆயத்துல்லா கமேனி தலையிட்டால் மாத்திரமே இரண்டாம் கட்ட வாக்களிப்பு சாத்தியமாகலாம்.



மக்கள் ஆர்ப்பாட்டம் குறித்து ஈரானின் ஆன்மீக தலைவர் எவ்வளவு தூரம் கவலைகொண்டுள்ளர் என்பதை கமேனி எடுக்கும் முடிவே, புலப்படுத்தும்.

எனினும், அடுத்து வரும் தேர்தல்களில் மிதவாதிகள் (2012 நாடாளுமன்றத் தேர்தல்) வெல்லும் சூழ்நிலை உருவாவதை தவிர்ப்பதற்காக அவர் இதற்கு உடன்படமாட்டார்.

ஈரானின் பிரதமராக எட்டு வருட காலமாக பணியாற்றிய மௌசவி எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகிக்க சம்மதிப்பாரா என்பதே தற்போதைய ஆர்ப்பாட்டங்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும்.

காலஞ்சென்ற முன்னாள் ஆத்மீகத் தலைவர் ஆயத்துல்லா கொமேனியின் நெருங்கிய நண்பர் மௌசவி. மத தலைமையில் நம்பிக்கை கொண்டவர். இதன் காரணமாக அவர் இஸ்லாமிய புரட்சி பாதிக்கப்பட இடமளிக்கமாட்டார் என்ற கருத்தும் காணப்படுகின்றது.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்டங்களை ஈரானின் சீர்திருத்த வாதிகளுக்கும் கடும் போக்காளர்களுக்கும் இடையிலான பல வருட கால போட்டியில் முக்கிய திருப்பு முனையாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஈரானில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்துரிமை, சமூக சுதந்திரம் போன்ற பரந்துபட்ட விடயங்கள் குறித்து கருத்து தெரிவித்திருந்தாலும், அதிகளவுக்கு ஜனாதிபதி அஹமடி நிஜாட்டையே இலக்கு வைத்துள்ளனர்.

அஹமடி நிஜாட் தொடர்ந்தும் ஜனாதிபதியாக பதவியில் இருந்தாலும், தனது இரண்டாவது பதவிக்காலத்தில் மேலும் ஆர்ப்பாட்டங்களை எதிர்கொள்ளலாம். ★

- ஏ.ஆர் -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

நிறைகூடிய, தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**செம்மணிப்புரம்**
77/31, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,

(66379)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் குறைந்த விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

(66365)

## வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு

பருத்தித்துறை நகரப்பகுதியில் இயங்கிக் கொண்டிருக்கும் பான்சிக்கடை தளபாடங்களுடன் வாடகைக்கும் அலுமினியப் பிற்றிங் விற்பனைக்கும் உண்டு. தொடர்பு: 0774366704.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை செல்லத்துரை



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான வேலுப்பிள்ளை செல்லத்துரை (19.06.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலெட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை- அமராவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஸ்ரீபால சரஸ்வதி, ஸ்ரீபால தனலெட்சுமி, ஸ்ரீபால ஜெகதீஸ்வரி, ஸ்ரீபால சந்திரவதி, காலஞ்சென்ற ஸ்ரீபால சுரபாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகநாதன், கணேசரத்தினம், தேவநாதன், யோகபாலச்சந்திரன் ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், இளையதம்பி, அன்னலிங்கம், ஆசைத்தம்பி, பவளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் புவனேஸ்வரி, சுந்தரலிங்கம், மணிமேகலாதேவி ஆகியோரின் மைத்துனரும் பார்த்தீபன், தர்ஷிகா, ஞானதீபன், ஆதித்தன், ஜெயந்தினி,மயூரன், கஸ்தூரி, செந்தூரன், தேவகி, ஜானகி, பயிரவி, மகாலெட்சுமி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*192, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

**ப.தேவநாதன்** (மருமகன்),
கஜன் இருப்பகம், யாழ்ப்பாணம்.

(86384)

## பல்கலையில் இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் விளையாட்டுச் சபையும் கிரிக்கெட் குழுவும் இணைந்து நடத்தி வரும் 2009 ஆம் ஆண்டுக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று நடைபெறவிருக்கின்றது. காலை 8.30 மணிக்கு பாரம்பரிய விளக்கேற்றலுடன் ஆரம்பமாக விருக்கும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வர்த்தகத் துறைத் தலைவர் கே.கே.அருள்வேல் கலந்துகொள்வார்.

இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணியும் பற்றீஸியன்ஸ் அணியும் மோதுகின்றன.

(ப)

## விலைக் கேள்விகளுக்கான கோருதல்
## கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், யாழ்ப்பாணம்

1. சமூகசேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணத்தின் சார்பில் தவிசாளர், மாவட்ட பெறுகைக் குழு அவர்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்காக தகவுடைய மற்றும் தகைமை பெற்ற கேள்விதாரர்களிடமிருந்து மூடிக் குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகிறார்.
2. கேள்வியானது தேசிய போட்டிக் கேள்வி நடைமுறைப்படி நடத்தப்படும்.
3. ஒப்பந்த வழங்கலிற்குத் தகுதி பெறுவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலிடப்படாதவராகவும், நிர்மாண, பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகத்தில் கட்டட நிர்மாணத் துறையில் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்கான குறித்த பதிவை அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த வழங்கலிற்கான தகைமையைப் பெறுவதற்குத் தேவையான தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தின் பகுதி 4இலும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வித் தரவிலும் (பகுதி 5) கொடுக்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை **நிறைவேற்றுப் பொறியியலாளர், நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), கடற்கரை வீதி, குருநகர்,யாழ்ப்பாணம்(தொ.பேசி, தொலைநகல் இல.:0212222634)** இலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் விலைக்கேள்வி ஆவணங்களை மேற்கூறிய முகவரியில் காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 1000.00 ஐ பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தில் பணமாகச் செலுத்துவதன் மூலம் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), யாழ்ப்பாணத்தில் 22.06.2009ஆம் திகதியிலிருந்து 07.07.2009ஆம் திகதி வரை காலை 9 மணியிலிருந்து மாலை 15.30 மணி வரை ஆங்கில மொழியிலான பூரண தொகுதி கேள்வி ஆவணம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் இரண்டு பிரதிகளில் கீழ்வரும் மாவட்ட பெறுகைக்குழு முகவரியில் 09.07.2009ஆம் திகதியன்று 15.30 மணி அல்லது அதற்கு முன்னராக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்படல் வேண்டும். காலந்தாழ்த்தி சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகவே வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் திறக்கப்படும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா) | ஒப்பந்த காலம் | தேவையான ICTAD தரம் | விலைக் கேள்வி பிணைப் பொறுப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை தொகை | செல்லுபடியாகும் காலம் |
| JF/BD/GA/SS/01/2009 | ஆண்கள் விடுதி அமைத்தல், அரச முதியோர் இல்லம் கைதடி கட்டம் -II | 5,709,440.00 | 04 மாதங்கள் | M6/C7 | 57,100.00 | 22.10.2009 |

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம்.
கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
தொ.பே. இல.: 021 222 2632

க.கணேஷ்,
தவிசாளர், மாவட்ட பெறுகைக் குழு/
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பணம்.



## இலங்கை வங்கியுடன் உங்கள் தொழிலை ஆரம்பிக்கத் தயாராகுங்கள் !

## பயிற்சி பதவிநிலை உதவியாளர்

கீழ்வரும் தகைமைகளுடன், நீங்கள் ஒரு சாதனை படைக்க விரும்புகின்ற இளைஞராயின், இலங்கையின் மிகப்பெரிய வங்கியான இலங்கை வங்கியுடன் இணைந்து கொள்ள இதோ ஒரு வாய்ப்பு!

### தகைமைகள்

- க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் ஒரே தடவையில் தாய்மொழி (சிங்களம் / தமிழ்) கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கியதாக 5 பாடங்களில் திறமைச்சித்தி. அத்துடன் க.பொ.த (உயர் தர) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களிற் சித்தி
- விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது 24க்குக் கீழ்ப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(மேற்குறித்த தகைமைகளைக் கொண்டிராதவர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டாம் என ஆலோசனை வழங்கப்படுகின்றனர்.)

### ஏனைய விசேட தகைமைகள்

- நிறுவனத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான ஆக்கபூர்வமான மனோபாவமும், அர்ப்பணிப்புணர்வும் கொண்டிருத்தல்
- குழுவின் உறுப்பினராக இணைந்து பணிசெய்வதற்கேற்ற, திறமைகளைக் கொண்டிருத்தல்
- சிறந்த பயனளிக்கத்தக்க தொடர்பாடற் திறமைகள்
- அழுத்தங்கள் நிறைந்த சூழலிலும் உறுதியோடு பணியாற்றத்தக்க திறமை.
- இலங்கையின் எந்தப் பாகத்திலும் பணிசெய்யத்தக்க விருப்பம்

### தெரிவு நடைமுறை

எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை. மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றைத் தொடர்ந்து தெரிவு மேற்கொள்ளப்படும்.

### பயிற்சி

பயிற்சிக்காலம் இரண்டு ஆண்டுகளாகும். பயிற்சிக் காலத்தின் போது பயிற்சிக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

### வெகுமதி

பயிற்சிக் காலத்தின் நிறைவின் பின் வெற்றிபெறும் விண்ணப்பதாரிகள் வங்கியின் நிரந்தர பதவி நிலை உதவியாளர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதோடு கவர்ச்சிகரமான சம்பளப்பொதியுடன் பல்வேறு பயன்களையும், பிரகாசமான தொழில் சார் நன்மைகளையும் பெறுவார்.

இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பயன்படுத்தி விண்ணப்பத்தைப் பூரணப்படுத்திக் கொள்வதோடு பிறப்புச் சான்றிதழ் மற்றும் கல்விச் சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து (சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்க வேண்டாம்) 2009 ஜூலை 10ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'Trainee staff Assistant' எனக் குறித்தல் வேண்டும்.

### SPECIMEN APPLICATION FORM

1. Surname with initials: (in English Block Capitals) (Eg. SILVA A.B.)
2. Name indicated by initials (in English Block Capitals) :
3. Sex : Male - 0, Female - 1 : Enter Relevant Number
4. Address (Permanent) (in English Block Capitals) :

**Preferred Medium for Examination :**
Sinhala - 2 Tamil - 3 English - 4
Enter Relevant Number

**Preferred Centre for Examination :**
Colombo - 01 Kurunegala - 08
Galle - 02 Batticaloa - 09
Matara - 03 Vavuniya - 10
Anuradhapura- 04 Trincomalee - 11
Polonnaruwa - 05 Badulla - 12
Ampara - 06 Ratnapura - 13
Kandy - 07 Jaffna - 14
Enter Relevant Number

5. District and District No. :

| | | | | |
|---|---|---|---|---|
| Colombo - 01 | Gampaha - 02 | Kalutara - 03 | Matale - 04 | Kandy - 05 |
| Nuwara Eliya - 06 | Galle - 07 | Matara - 08 | Hambantota - 09 | Jaffna - 10 |
| Mannar - 11 | Mullativu - 12 | Vavuniya - 13 | Trincomalee - 14 | Batticaloa - 15 |
| Ampara - 16 | Puttalam - 17 | Kurunegala - 18 | Anuradhapura -19 | Polonnaruwa - 20 |
| Badulla - 21 | Monaragala - 22 | Kegalle - 23 | Ratnapura -24 | Killinochchi - 25 |

6. Contact No - Residence : Mobile :
7. Date of Birth - (Date/Month/Year) :
8. National Identity Card no. :
9. Civil Status : Married - 1, Single - 2 Enter Relevant Number :
10 Educational Qualifications : GCE (0 / L)

| School : | Index No. : | Year : |
|---|---|---|
| Subject | Results | |

G C E( A/L)

| School : | Index No. : | Year : |
|---|---|---|
| Subject | Results | |

11. Other Qualifications (Acadamic/Professional)

| Degree/Diploma/Other | Name of Institution | Results |
|---|---|---|

12. Extra Curricular Activities

13. Record of Employment, if any

| From | To | Institution | Designation |
|---|---|---|---|

14 Non- Related Referees:

| | (I) | (II) |
|---|---|---|
| Name | | |
| Address | | |
| Contact No. Office | | |
| Residence | | |

I certify that the information given in this application is true and correct.

Date Signature

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்


70
1939 - 2009

பிரதான முகாமையாளர்
(ஆட்சேர்ப்பு மற்றும் தொழில் அபிவிருத்தி)
இலங்கை வங்கி - மனிதவளப் பிரிவு
26ம் மாடி, தலைமையகக் கட்டிடம்
கொழும்பு - 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தசுவாமி கோயில்

## தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் – 21.06.2009



## 'பரம்பரைக் குருக்கள்மாரின் ஆசிச்செய்தி

இலங்கைத் தீவில் இந்துமதத்தின் பெருமைகள் சேர் யாழ்ப்பாணத்தில் இணுவையம்பதி எனும் கிராமத்தில் பிரசித்திபெற்ற பல ஆண்டு காலம் போற்றப்பட்டு பல ஆயிரம் மக்கள் பார்த்து மெய் சிலிர்க்கின்ற திருமஞ்சம் அமையப்பெற்ற பல அறிஞர்கள், கற்றோர்கள், கலைஞர்கள், சிவாச்சாரியார்கள் கண்ட இணுவில் கந்தசுவாமி கோயிலில் முருகனிற்கு முன்பிறந்த யானைமுகன் விநாயகப் பெருமானுக்கு புதிதாக தேர் (ரதம்) நிர்மாணிக்கப்பட்டு வெள்ளோட்டம் நடைபெற்றதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வாலயத்தின் அருகில் சிறுபராயம் முதல் வசித்து, பூசைகள் செய்து வந்ததன் பயனாக இப்பொழுது கந்தன் திருவருளுடனுன் எனது பெற்றோரின், வித்யாகுருவின் ஆசியுடனும் மகோற்சவ குருவாக இருக்கின்றவேளையில் இந்த ரத வெள்ளோட்டம் எனக்குமிக சந்தோசத்தைத் தருகின்றது.

இதற்கு காரணம் நான் பிரதான குருவாக இருந்து மகாகும்பாபிசேகம் செய்த அங்காள பரமேஸ்வரியின் திருவருள் என்று நான் நினைக்கின்றேன்.

பக்தி என்பது எமது இதயத்தில் உறைகின்றபோது இறைவன் எனும் காந்தத்தின் பால் எமது உணர்வுகள் இழுக்கப்பட்டு இவ்வாறு செயற்கரிய நல்ல தர்மகாரியங்களில் எமது மனம் ஈடுபடுகின்றது. இதனால் எமது சைவசமயத்தின் சிறப்பும் பெருமையும் நிலைக்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தேர் செய்ய முன்வந்த தர்மவான், பக்தர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல இணுவைக் கந்தன் அருள்கிடைக்க ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ ந.உருத்திரமூர்த்திக்குருக்கள் -ஆலய பிரதமகுரு,
சிவஸ்ரீ இ.ஸ்ரீஸ்கந்தராசாக் குருக்கள் - ஆலய பிரதமகுருவும் மகோற்சவகுருவும்.

## இணுவில் கந்தசுவாமி கோயில் வரலாற்றுச் சுருக்கம்

இணுவிலில் அணிசெய்யும் ஆலயங்களில் சரித்திரப் பிரசித்திபெற்று, பெரியகோயில் என்று சிறப்பிக்கப்படும் ஆலயம் ''இணுவில் கந்தசுவாமி'' ஆலயமாகும். கிட்டத்தட்ட நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு முருகன் அடியாரான அருணாசலம் அவர்கள் நித்திரையாக இருந்தபோது, முருகப்பெருமான் அவரின் கனவில் தோன்றி தான் காஞ்சியம்பதியிலிருந்து வருவதாகவும் தமக்கென இல்லிடமொன்று அமைத்துத் தருமாறும் கேட்டார். அடியவர் எங்கே அமைத்துத் தருவது என வினவியபோது, உங்கள் வெற்றிலைத் தோட்டத்தினுள் நொச்சித் தடியொன்று நாட்டப்பட்டிருப்பதாகவும் அந்த இடத்திலேயே அமைக்கலாமெனவும் ஆலோசனை கூறினார். கனவின் உண்மையினை அறிய விரும்பிய அடியவர் மறுநாள் காலை தோட்டத்தில் சென்று பார்த்தபோது வியப்படைந்தார். தனது தோட்டத்தில் இருந்த மாட்டுக் குடிலின் அருகே நொச்சித்தடி நடப்பட்டிருந்தது. அங்கு வேலினை வைத்து வணங்கினார். இம்மகிமையை அறிந்த ஊர்மக்களும், அயற்கிராமத்தவர்களும் வணங்கினார்கள். காலப்போக்கில் அடியார்கள் மிகுந்து வந்தமையால் பூசை வழிபாடுகளை அருணாசலம் தானே முன்னின்று நடத்தினார். அதன் பின்னர் அவர்தம் சந்ததியினரும் பரிபாலித்து வந்தனர்.

தொடர்ந்து செங்கல்லினால் கட்டப்பட்ட கோயில், 1840ஆம் ஆண்டு வெள்ளைக் கற்களால் கட்டப்பட்டது. படிப்படியாக கோயில் வளர்ச்சியடைந்து வரும் வேளையில் 1910ஆம் ஆண்டில் உலகப் பிரசித்திபெற்ற திருமஞ்சமானது இணுவையூர் தத்துவஞானியான பெரியசந்நியாசியார் (சுப்பிரமணிய சுவாமி) அவர்களின் கண்ணோட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. இக்கோயிலானது பொதுக்கோயிலாக மாற்றம் பெற்ற பின்னர் மூன்று தள இராஜகோபுரமானது ஐந்து தளமாகவும், இலண்டனிலிருந்து வருவிக்கப்பட்ட புதிய கண்டாமணியும், மணிமண்டபமும் நிறுவப்பட்டுள்ளது.

பெருந்திருவிழாவானது ஆனிமாத அமாவாசையினைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு 25 திருவிழாக்கள் சிறப்புடன் இடம்பெற்று வருகின்றது. இவ்வருடம் 29.05.2009 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று 21.06.2009 (ஞாயிற்றுக்கிழமை) தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. இவ்வாண்டு விநாயகப் பெருமானுக்கு புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு 19.06.2009 வெள்ளிக்கிழமையன்று வெள்ளோட்டவிழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தின் கீர்த்திக்குச் சான்றுபகரும் மற்றுமோர் அம்சம் புண்ணிய தீர்த்தமாகும். வடக்குப் பக்கத்தில் சாந்தியடி வயிரவர் சந்நிதியும், அதன் முன்பாகவுள்ள தீர்த்தக்கிணறும் பிரசித்தமானவை. அடியார்களைப் பிடித்த நோய்களைக் குணப்படுத்தி சாந்தி அளிக்கும் தன்மை இத்தீர்த்தத்திற்கு உண்டு. அடியார்களுக்கு ஏற்படும் அல்லல்களைக் களைந்து ஆறுதலளிக்கும் சாந்தியடி வயிரவப் பெருமானும், நொச்சியம்பதி முருகப்பெருமானும் இணுவையம்பதி மக்களின் கண்கண்ட தெய்வங்கள் என்பது மனம் கொள்ளத்தக்கன. தேர்த்திருவிழாவன்றும், மஞ்சத்திருவிழாவன்றும் ஆறுமுகப்பெருமான் (சண்முகப் பெருமான்) வீதியுலா வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இங்கு கோயில் கொண்டு உறைந்துள்ள முருகப்பெருமானை நொச்சியம்பதியான், காஞ்சியம்பதி யான், கல்யாணவேலவர் எனப் பல சிறப்புப் பெயர்கள் கூறி மக்கள் பக்தி வெளிப்பட வழிபடுவார்கள்.

அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக்குருக்கள் அவர்களின் ''மகோற்சவ விளக்கம்'' என்ற நூலிலிருந்து பெறப்பட்ட கருத்து:

''பசுபதியாக சிவபெருமான் சூரிய சந்திரர்கள் உருள்களாகவுசம், மற்றைச்சரம், அசரம் ஆகிய பொருள்கள் ஒவ்வொரு உறுப்புக்களாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும் அமைந்த தேரில் மேருவை வில்லாகவும், விட்டுவை அம்பாகவும், அக்கினியை அவ்வமைப்பின் கூர்வாயாகவும் கொண்டு எழுந்தருளிப் பிரம்மாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக் கொண்டு செலுத்தத் திரிபுரத்தசுரர்களைத் தமது திருப்புன்முறுவலால் எரித்தருளினார். திரிபுல சங்காரத்து உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் கெடுத்தற்காக இரதோற்சவம் நடத்தப்படுகின்றது.

''புரமடு நாட் சான்ற நிலத்தோர் பொருமணித்தேர்
சங்கத் தலைவருட்டினார்''

(திருவானைக்கா புராணம்)

''முருகப்பெருமான் திருவடி சரணம்''

செ.சோதிப்பெருமாள்
(ஜே.பி) தலைவர்,
தர்மகர்த்தாசபை.

அடியவர்களின் குறை தீர்க்கும்
இணுவைக் கந்தனே! தமிழரின்
குறை தீர்க்க விரைந்து வந்திடுவாய்

**தேர்த் திருவிழா
சிறப்புற வாழ்த்துவோர்**

றமணன் கட்டடப் பொருள்
விற்பனை நிலையம்
சகல விதமான கட்டடப்பொருள்கள் நியாய விலைக்கு
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்
525, 528, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 021 2229296.

ஜனா பாம்
பால், பால் உற்பத்திப் பொருள்கள், பசுநெய், கேக் வகைகள் ஓடருக்கு குறித்த காலத்தில் தரப்படும்.
லிான்டோ லேக் நிறுவனத்தின்
அனுசரணையுடன் கொதிக்க வைத்த பால்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.
இல.7, மத்திய சந்தை, மல்லாகம்.

கஜமுகன் மோட்டோஸ்
அன் ஹாட்வெயார்
கட்டடப்பொருள்கள்,
மோட்டார் வாகனப் பொருள்கள் விற்பனையாளர்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

கர்ப்பிணித் தாய்மார்க்கும் சிறார்களுக்கும் ஏற்ற
போசாக்கு நிறைந்த சத்துமா
வளரும் குழந்தைகளுக்குகேற்ப தாய்மார்களுக்கும்
வயோதிபர்களுக்கும் ஏற்ற சத்துணவு
ஜீவாகாரம்
அண்ணா தொழிலகம்
துரை வீதி, இணுவில்.

பழரசத் தொழிலகம்
ஜசுபி
தயாரிப்புகள்
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்.

பெஷல் ஐஸ்கிறீம் நோமல் ஐஸ்கிறீம், குளிர்பான வகைகள், வடை, றோள், சிற்றுண்டி வகைகள், பெஷல் பீடா, சைவக் கொத்து மற்றும் விசேட வைபவங்களுக்கான ஓடர்கள்
விசேடமாகச் செய்து தரப்படும்.
ராஜ் கிறீம் ஹவுஸ்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

சாந்தி புடைவை அகம்
157,158, நவீன சந்தை
(மின்சார நிலைய வீதி) யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
070-212748

பாடசாலை உபகரணங்கள் அப்பியாசக் கொப்பி வகைகள், அச்சுத்தாள் வகைகள்
மொத்த, சில்லறை வாணிபம்
அமுதா வர்த்தக நிலையம்
காங்கேசன்துறை வீதி,
(ஆஸ்பத்திரி முன்பாக), இணுவில்.

பலசரக்கு பொருள்கள், யாழ்.நகரின் தரமான அரிசி வகைகள், கேக் தயாரிக்கும் பொருள்கள் மற்றும் பலகார வகைக்கான பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள
ஸ்ரீ அம்மன் ரேடர்ஸ்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

சரஸ்வதி ரேடிங்
இல.19, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

செ.இராசரட்ணம்
நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாக உற்பத்தியாளர்
S.R.P பம்புகள்
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில், தாவடி.

வலிகாமத்தில் கணனிக் கல்விக்கு
தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
கணனியியல் கல்லூரி
கே.கே.எஸ்.வீதி, இணுவில். 222 7643
லது டிஜிற்றல் வீடியோ
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

சிவசம்பு களஞ்சியம்
இல.3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

நாதன் பிறதர்ஸ்
பல்பொருள் வாணிபம்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

ஆனந்தா
கட்டடப்பொருள் வாணிபம்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

கணேசன் சென்ரர்
உடுப்பு வகைகள், அழகுசாதனப்
பொருள்கள் விற்பனையாளர்கள்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
021 222 5708

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், தென்மராட்சியைச் சேர்ந்த, 30 வயதுடைய, பட்டதாரி ஆசிரியரான மணமகனுக்கு மணமகள் தேவை.

மே/பா.உதயன்,
விளம்பர இல:- 3910

(86156)


# நனைந்த கண்களுடன் ஒரு வருடம்



அவனியில்:
03.02.1930

அவனடியில்:
01.07.2008

## அமரர் கந்தையா சுப்பிரமணியம்

(பூராசா)

(ஓய்வு பெற்ற
நெசவு ஆசிரியர்)

திதி: சதுர்த்தசி

ஓடிப்போனது அந்த ஓராண்டு
உறங்கவில்லையே கண்கள் இன்னும்
தூண்டாமணிவிளக்காய் இருந்த நீங்கள்
மாண்டு போனது விதிதான் என்றால்
கூடிப்பிறந்த சுற்றமும் மனைவியும்
மக்கள் மருமக்கள் பேரர் எல்லோரும்
ஆற முடியாது அழுது புலம்பினாலும்,
ஆண்டவனடியில் பெறுவீர் சாந்தியென
ஆறிப்போகின்றோம்; சாந்தி! சாந்தி! ஓம் சாந்தி!

27, புலவனார் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


இதோ! ஓர் அரிய சந்தர்ப்பம்

WATERTEC PRINCE

உங்கள் வாழ்க்கைக்கு ஓர் ஸ்திரமான அடித்தளத்தை அமைத்துக் கொள்ள எண்ணுகின்றீர்களா? அதற்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம். புகழ்பெற்ற அடையாளம் உள்ள இலங்கையின் முதற்தர பொலிமர் நீர்க்குழாய் வகைகளும், துருப்பிடிக்காத உருக்கு சமையலறைத் தொட்டிகளும், குளியல் அறை சாதனங்களும், இலகு இயந்திரங்களும் சந்தைப்படுத்துபவர்களான சென். அந்தனீஸ் ஹார்ட்வெயார் (தனியார்) லிமிட்டெட்டிற்கு, யாழ். மாவட்டத்தில் சந்தைப்படுத்தல் துறைக்கு துடிப்பும், திறமையும் மிக்கவர்கள் கீழ் வரும் பதவிக்கு தேவைப்படுகிறார்கள்.

## விற்பனை மேம்படுத்தல் பிரதிநிதி

விண்ணப்பதாரி கீழ்வரும் தகமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- சிறந்த கல்வித் தகைமை
- சந்தைப்படுத்தல்/விற்பனைத் துறையில் கல்வித் தகைமை (மேலதிகம்)
- 25 வயதை அண்மித்தவராக
- விற்பனை/சந்தைப்படுத்தல் துறையில் அனுபவம் மிக்கவராக (மேலதிகம்)
- ஹாட்வெயார்/இலகு இயந்திர விற்பனையில் அனுபவம் மிக்கவராக (மேலதிகம்)
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவராக
- மேலதிக நேரம் பணிபுரியக் கூடியவராக
- இலங்கையின் எந்தப் பகுதிக்கும் பிரயாணம் செய்யக்கூடியவராக

சம்பளம் மற்றும் இதர சலுகைகள் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரர் தனது சுயவிபரங்களுடன் உறவினர் அல்லாத அத்தாட்சிப்படுத்தும் இருவரின் விபரங்களுடனும் தனது விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பத்தை அனுப்பவேண்டிய முகவரி,

The Manager HR & Administration,
St. Anthony's Hardware (Pvt) Ltd
516, Sri Sangaraja Mawatha, Colombo 10.
Tel: 2324261-5, 2337283-5 Fax: 2446554
E-mail: vacancy@stanthonys.lk



## வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் வர்த்தகத்துக்கு ஏற்ற இடம் தேவை

யாழ்.நகரில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் கிளை அலுவலகத்திற்கு குத்தகை அடிப்படையில் பின்வரும் வசதிகளுடன் கூடிய கட்டடம் தேவைப்படுகின்றது.

★ குறைந்தது 2500 சதுர அடி
★ வீதி முகப்பு குறைந்தது 30 அடியாவது இருத்தல் வேண்டும்
★ தனிப்பட்ட மீற்றருடன் 3 phase 60 Amp மின்சாரம் மற்றும் குழாய் நீர் விநியோகம்
★ ஜெனரேட்டர் பொருத்துவதற்குரிய இடவசதி
★ கழிவறை வசதிகள்
★ குறைந்தது 05 வாகனங்களுக்கான வாகனத் தரிப்பிட வசதி

மேலதிக விபரங்களுக்கு:
0772-441600




# ஷஷ்டியப்த பூர்த்தி விழா அழைப்பு

அன்புடையீர்:

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான விரோதி வருடம் ஆனித்திங்கள் 8 ஆம் நாள் (22.06.2009) திங்கட்கிழமை மிருகசீரிட நட்சத்திரத்தில் காலை 9.00 மணியளவில்

சிவஸ்ரீ. சொ. இரத்தினசபாபதிக் குருக்கள்
சம்பூர்ணவல்லி அம்மா தம்பதிகள்

அவர்களது ஷஷ்டியப்த பூர்த்தி விழாவினை மஞ்சவனப்பதி முருகன் தேவஸ்தான திருமண மண்டபத்தில் நடத்த திருவருள் கூடியுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் பந்துமித்ரர் சகிதம் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

முக்கிய குறிப்பு: இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும். நண்பகல் 12.00 மணிக்கு "சகஸ்ரநாம கதம்பம்" நூல் வெளியீடும் இடம்பெறும்.

தங்கள் பிரசன்னத்தைப் பிரியமுடன் விரும்பும்:

மகன்-
சிவப்பிரம்ம ஸ்ரீ. இ. விக்கினேஸ்வரக்குருக்கள், பிரதம குரு,
யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம், கொக்குவில்
மஞ்சவனப்பதி முருகன் தேவஸ்தானம், பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.


A LIFE - TIME CHANCE

# STUDY MEDICINE



**அந்தோனிப்பிள்ளை மரிய பிரான்சிஸ் றொஷான்** (முதலாம் வருடம்) கரவெட்டி, யாழ்ப்பாணம்

எனக்கு பல நாடுகளைச் சேர்ந்த பல நண்பர்கள் உள்ளதுடன் உள்நாட்டு நண்பர்களும் வெளிநாட்டு மாணவர்களுக்கு உதவியாக உள்ளனர். நான் இந்த நாட்டை எனது வீடாக நினைப்பதுடன் இங்கு சிறந்த பாதுகாப்பும் உள்ளது.



**பரதன் சுஜரூபன்** (முதலாம் வருடம்) யாழ்ப்பாணம்

2008 ஆம் ஆண்டின் நவம்பர் மாத கடைசிப் பகுதியிலேயே நான் சென்றேன். எமக்கு விசேட வகுப்புக்கள் நடத்தப்பட்டதால் ஆரம்பம் முதல் எந்தவொரு பாடத்தையும் நான் தவறவிடவில்லை. விரிவுரையாளர்கள் எமக்கு உதவியாக உள்ளனர். எனது அனுமதியை உடனடியாக பெறுவதற்கும் பெலாரஸ்ஸில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தந்த Patheக்கு எனது நன்றிகள்



**அந்தோனி அனுட்ராஜ்** (முதலாம் வருடம்) திருகோணமலை

நான் முதலில் ரஷ்யாவிலேயே எனது மருத்துவ கற்கையை ஆரம்பித்திருந்தாலும் என்னைப் போன்ற வெளிநாட்டவர்களுக்கு ரஷ்யா பாதுகாப்பற்ற நாடென்பதால் நான் அங்கிருந்து வெளியேறி Pathe யின் உதவியுடன் பெலாரஸ் VSMUவுக்கு அனுமதியை பெற்றேன் பாதுகாப்பான நாடொன்றில் கல்வி கற்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் மகிழ்ச்சி அடைவதுடன் Patheக்கு நன்றி கூறிக் கொள்கின்றேன்.



**குலசபாநாதன் துஷ்யந்தன்** (முதலாம் வருடம்) மட்டக்களப்பு

எமது பல்கலைகழக்கத்திலுள்ள விரிவுரையாளர்கள் மாணவர்களுடன் அன்பாகப் பழகுவதுடன் வெளிநாட்டு மாணவர்களுக்கு உதவியாகவும் உள்ளனர். ஏதாவது ஒரு பாடத்தில் விளக்கமின்மையாக இருந்தால் வழமையான விரிவுரையின் பின்னர் தங்கி நின்று விரிவுரையாளர்களை அணுகி சந்தேகங்களை தீர்த்துக் கொள்வேன்.



**ஸ்ரீஜனனி சந்திரலிங்கம்** (முதலாம் வருடம்) கொட்டாஞ்சேனை

எனது அம்மா பெலாரஸ்ஸிற்கு வருவதற்கு விரும்புகிறார். எனது தாய் ஒருவித தாமதமும் இன்றி விசாவை பெறுவதற்கு உதவிய Patheக்கு நன்றிகள்.

அனுமதிக்கான தொடர்பு:
Dr. தாரகன் பக்தசீலன் (077-3017883)
(தமிழ்)

MBBS / MD Degree's - உலக சுகாதார நிறுவனத்தாலும் இலங்கை, மாலைதீவு, அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் மருத்துவ சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

## பெலாரஸ் (கிழக்கு ஐரோப்பா)

**MD**
மருத்துவ கலாநிதி
VITEBSK STATE MEDICAL UNIVERSITY
6 year (English Medium)
Course Fees: USD 3800 Per year

## நேபாளம்

**MBBS**
Bachelor of Medicine / Bachelor of Surgery
Offered by KATHMANDU UNIVERSITY
4 1/2 yr + 1 yr Internship (English Medium)
Approx. Rs. 780,000 per semester (for 8 Semester)

## லித்துனியா (Schengen & E.U.)

**MD**
Doctor of Medicine
KAUNAS UNIVERSITY OF MEDICINE
6 year (English Medium)
Course Fees. 5500Euro per year

Colombo Ads - 077 244 24 25

PATHE ACADEMY
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
Overseas Student Placement Department
111-1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06.
Tel : 2586418
www.patheacademy.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலுக்கு நலம் தரும் பப்பாசிச் செய்கை கண்முன்னால் முற்றாகவே அழிந்துவிடும் ஆபத்து நெருங்குகிறது!



யாழ்ப்பாணக் குடாநாட்டில் உற்பத்தியாகும் பழ வகைகளுள் பப்பாசியும் ஒன்று. இது பொதுவாகவே எவருக்கும் விக்கனமில்லாத பழம். விரும்பி வாங்கி உணவாக்குவதைப் பொறுக்காத ஐந்தறிவுப் பூச்சியினம் பப்பாசியையே அழிக்க விரைந்தோடி வருகிறது. ஓங்கியுடிக்கும் வேகமான காற்று இவற்றுக்கு மேலும் உதவிக் கரம் நீட்டுவது போலவே இருக்கிறது. பப்பாசியிலும் புதுமைகளைக் கண்டு பிடித்து "ரெட்லேடி" என்னும் பெயர் கொண்டு பருமனில் பெரிதான பப்பாசிப் பழங்களெல்லாம் பேப்பரினால் சுற்றப்பட்டு விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டு அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருப்பது நன்றாக இருந்தாலும் நிறத்தால் அழகு என நினைப்பவர்களுக்கு சுவையில் அந்த அழகைக் காண முடிவதில்லை எனச் சுவைத்தவர்கள் கூறுவர். அதிலும் ஒரு கிலோ எறக்குறைய 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டால் வறிய மக்களுக்கு சுவைத்துப் பார்க்கவென இலவசமாக வெட்டிக் கொடுக்கப்படும் சிறிய துண்டைத் தவிர 'ரெட்லேடி'யை சுவைத்துப்பார்க்க வழியே இல்லை. அது விலையில் அவ்வளவு கிராக்கியாகி விட்டது. பணக்காரர்களின் பழமாகி விட்டது.

ஆனாலும் உள்ளூர் இனங்கள் இன்னமும் வறிய மக்களின் கைகளுக்கு எட்டும் கனியாக இருப்பது மனதுக்கு நிம்மதியைத் தருகிறது. எவர் கைகளுக்கு எட்டினாலென்ன எட்டாது விட்டாலென்ன, இனி பப்பாசி என்ற பழத்தை எவருக்குமே எட்டாக்கனியாக்க வேகமாகப் பரவி வருகின்றது பப்பாசியில் மாவுப் பூச்சி இனமொன்று.

'வெள்ளை நிறத்துடனொரு பூச்சி ஆங்கே மாவு போல படர்ந்தது கண்டீர்!'; ஆடாது, அசையாது ஆனால் பல்கிப் பெருகி முழு மரத்திலுமே செறிந்து விடும். சாறு உறுஞ்சுவது இதன் இயல்பு. இதன் அணங்கும் நிறைவுடலிகள் ஆணும் பெண்ணும் சாறு உறிஞ்சும் தன்மை கொண்டதால் மரத்திலுள்ள சத்து அனைத்தையும் கூட்டாகக் குடும்பமாக இருந்து உறுஞ்சி இறுதியில் மரத்தையே படவைத்துவிடும். பப்பாசியை இழக்க வைத்துவிடும்.

கண்டம் விட்டு கண்டம் தாவுவதில் பூச்சிகள் முதன்மையானவை. இங்கேயும் ஏவுகணைகள் போல இது போன்ற தாவுதல் அழிவுக்காகவேயாகும். பெரிதாக அசைவைக் காட்டமுடியாத இம் மாவுப் பூச்சிகளின் தாவரங்களுக் கிடையேயான பரம்பல் இவற்றுடன் ஒன்றி வாழும் சிவப்பு எறும்பினால் மேற்கொள்ளப்படுகின்றது. ஒன்று இன்னொன்றுக்கு அழிவு செய்ய உதவி.

**மாவுப் பூச்சியும் எறும்பும்**

மாவுப் பூச்சியை வகைப்படுத்தும் கெமிப்தீரா (Hemiptera) வருணத்தின் சிறப்பியல்பாகக் குத்தியுறிஞ்சும் வாயுறுப்பு அமைந்திருக்கிறது. இந்தக் குத்தியுறிஞ்சும் வாயுறுப்பினால் தாவரத்தைக் குத்தி உள்ளுள்ற தாவரச்சாற்றை இந்த வருணத்திலுள்ள பூச்சிகள் உறுஞ்சுவதால் தாவரத்தில் வாடல் நிலை ஏற்படும். மிகவும் அதிக எண்ணிக்கையான பூச்சிகள், அதுவும் இவற்றினது முட்டை தவிர்ந்த ஏனையவை குத்தியுறுஞ்சும் இயல்பைக் கொண்டிருப்பது இப் பூச்சிகளின், குறிப்பாக இந்த வருணத்தின் சிறப்பியல்பாக இருக்கின்றபோதும் அவை தாம் உறுஞ்சும் தாவரச் சாற்றினது 50வீதமானவற்றையே தமது நேரடி உணவுக்காகப் பயப்படுத்துகின்றன என்பன வியக்க வைக்கும் செய்தி. அதாவது உணவாகக் கொள்ளும் திறன் (Feeding Efficiency) 50 வீதமாக அறியப்பட்டுள்ளது.

மாவுப் பூச்சியினால் (Mealy Bug)

## நச்சு இரசாயன மூலம் பழுக்கவைக்கும் பழங்களால் நோய்களை நாமாகவே வலிந்து வரவழைக்கும் பரிதாபம்

விரைவாக இடம்பெயரமுடியாது. இவற்றினது அசைவு என்பது மிகவும் குறைவாகவே நடைபெறும். ஆதலால் இவ் வகைப் பூச்சிகளின் பரம்பலுக்குக் காற்று உதவியாயிருக்கும். அதேவேளையில் எறும்பினது ஒத்துதவும் செயற்பாடு மாவுப் பூச்சிகளுக்கு உறுதுணையாகவே இருக்கும். மாவுப் பூச்சியினால் உணவாக அகத்துறிஞ்சப்பட்ட 50 வீத தாவரச் சாறு தவிர்ந்த மீதி 50 வீத உணவும் தேன் சுரப்பாக மாற்றப்பட்டு உடலில் இருந்து வெளியேற்றப்படும். இந்தத் தேன் சுரப்பு (Honey Dew) எறும்பிற்கு உணவாகும். சுறுசுறுப்பிற்குப் பெயர் போன எறும்பு தனது சமயோசித புத்தியைப் பயன்படுத்தி இவ்வகைப் பூச்சிகளிலிருந்து தனது உணவைப் பெற்றுக் கொள்ளும் பாங்கைப் பாருங்கள். மாறாக எறும்பு மாவுப் பூச்சியின் அணங்கு மற்றும் முட்டைகளைக் காவிச் சென்று தாவரங்களின் வேறு இடங்களில் கொண்டு போய்ச் சேர்க்கும். ஒருவகையில் பூச்சியை இன்னொன்று காவிச் செல்வதைச் சமூகப் பொறுப் புணர்வு எனச் சித்திரிக்க முயன்றாலும், அதிலொரு சுயநலம் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். எறும்பு சமூக அந்தஸ்து உள்ள பூச்சியாயினும் மாவுப்பூச்சியைப் பரப்புவதிலும், அதற்கு வேறு உயிரினங்களால் பிரச்சினையேதும் வராது பாதுகாப்பாக இருப்பதும் முக்கிய அம்சங்களாக இனங்காணப்பட்டுள்ளது. இந்த வகையிலே மாவுப் பூச்சி - எறும்பு கூட்டு, மாவுப் பூச்சியின் விரைந்த பெருக்கத்திற்கு உதவுகிறது எனலாம். நல்ல இரு விசித்திரமான நண்பர்கள். ஒருவர் மற்றையவருக்குப் பாதுகாப்பாகவும், காவிச் செல்லும் கருவியாகவும் இருக்கும் போது மற்றையவர் அழிவு செய்து உணவைத் தானும் உண்டு தன் இனமும் பெருக்கி நண்பருக்கும் கொடுக்கிறார்.

**பப்பாசியில் விரைந்து பரவுவது ஏன்?**

இங்கே குறிப்பிடப்பட்ட 'பராகொக்கசு மார்ஜினேற்றசு' என்னும் குறிப்பிட்ட ஒருவகை மாவுப்பூச்சி பப்பாசித் தாவரத்தை முதன்மைப் பயிராகக் கொண்டு அதில் விரைந்து பெருக்கமடைகிறது. தென்னிலங்கையில் எவ்வாறு உட்புகுந்தது என அநுமானிக்க முடியவில்லையாயினும் கம்பஹா, கேகாலை, குருநாகல், பொலன்னறுவ, தம்புள்ள பகுதிகளில் விரைவாகப் பெருகி அங்குள்ளவர்களுக்கு அவர்தம் பப்பாசிச் செய்கைக்குத் தலையிடியாகவே இருக்கின்றது. இற்றைக்கு 14 ஆண்டுகளுக்கு முன்பாகக் கரிபியன் தீவுக்குள் புகுந்த இம் மாவுப் பூச்சி அங்கிருந்து கடந்த 14 ஆண்டுகளாகப் பல்கிப் பெருகி பல்வேறு நாடுகளில் பரவிக் கொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 25 நாடுகளில் இவ்விதம் பரவிக்கொண்டிருக்கிறது என அறிய முடிகின்றது. வேகமான காற்று வீசுதலும் மாவுப்பூச்சியின் தன்மையுமே விரைந்து பரவல் அடைவதற்கான பிரதான காரணங்களாகும். இதுவரை காலமும் பப்பாசித் தாவரம் மட்டுமே பழ மரங்களுக்குள் பெரிதாகப் பூச்சிநோய்த் தாக்கத்துக்கு உட்படாமல் இருந்ததால் இதற்கு எவரும் மருந்து விசிறு வதில்லை. ஆனால் இப்போது உட்புகுந்திருக்கும் இம்மாவுப் பூச்சி விரைந்து பெருகுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கும் மருந்தடிக்கும் நிலைமை வந்ததை என்னவென்பீர்?

**மாவுப் பூச்சியை முகாமைத்துவப்படுத்துவது எப்படி?**

இதுவரை அறிந்ததுவரையில் மாவுப் பூச்சிக்கான நேரடிக் கண் காணிப்பு முழுமை பெறவில்லை. பரவ ஆரம்பித்துவிட்டது. பரவிக் கொண்டிருக்கிறது. சரியான அவதானமில்லாதுவிடில் யாழ். குடாநாட்டுப் பப்பாசி மரமெல்லாம் மாவுப் பூச்சியால் துவம்சம் செய்யப்பட்டுவிடும்.



இவ்வகை சாறு உறுஞ்சும் மாவுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஊடு புகுந்து தாக்கும் (Systemic insecticides) பூச்சி நாசினிகளைப் பயன்படுத்த வேண்டும்.

இதேபோன்றதோர் மாவுப்பூச்சி இங்கே செவ்வரத்தையில், குரோட்டனில்....

யாழ்ப்பாணக் குடாநாட்டில் செவ்வரத்தை மற்றும் குரோட்டனில் தொற்றுதலாகி இவற்றை அழித்தொழிக்கும் பூச்சிப் பீடையாக இன்னொருவகை மாவுப்பூச்சி உருப்பெற்றிருக்கின்றதை அவதானித்திருப்பீர்கள். இவற்றைக் கட்டுப்படுத்த, மாவுப்பூச்சி தொற்று ஏற்பட்ட பாகங்களை வெட்டி அகற்றுவதும், அதற்கும் மண்ணெண்ணெய் விசிறுவதும் மேலும் வேப்பம் விதைச் சாறு விசிறுவதும் எனப் பலர் பரீட்சித்தபோதும் முழுமையாக இப்பூச்சிப் பீடையைக் கட்டுப்படுத்த முடியவில்லையென்பதே நிதர்சனம்.

வேறுவழியின்றித் தற்போதைக்கு அசேதனப் பூச்சிநாசினிகளை - முழுமையாக நம்பியிருக்க வேண்டியிருக்கின்றது. மாற்றுவழிமுறைகள் ஓரிரண்டு இருந்தும் மாவுப்பூச்சியின் பெருக்கத்தையோ, பரம்பலையோ முழுமையாகக் கட்டுப்படுத்தக்கூடியதாக இல்லை. இதன் காரணமாகவே 25 இற்கும் அதிகமான நாடுகளில் இந்நோய் பரவிக் கொண்டிருக்கின்றது.

உயிரியல் முறையில் இப் பூச்சிப் பீடையைக் கட்டுப்படுத்துவதற்கான சரியான வழிமுறை இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. [illegible] ஒரு சில நாடுக[illegible] இனங்காணப்பட்டுள்ள போதிலும் அவற்றை முழுமையான கட்டுப்பாட்டு முறைகளாக ஏனைய நாடுகளில் பயன்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் பல உள்ளன. இதற்கு அந்தந்த நாடுகளிலுள்ள சுவாத்தியமும் ஒரு காரணமாகும்.

**பப்பாசிக்கும் மருந்தடிப்பா?**

பழவகைகள் அதிலும் முக்கனிகள் எனப் பெருமை பேசிய பழங்களெல்லாம் இரசாயனக்கலவை பாவித்துப் பழுக்க வைப்பதனால் நச்சுப் பழங்களாகிவிட்டன. வாழைக்குலையும் மாம்பழமும் நிறத்தால் பழுத்ததாகக் காட்டும் நச்சு இரசாயனம் உள்ளே காயாக இருக்கும் சரித்திரம் கேளீர். பலாப்பழத்திற்கும் நச்சு இரசாயனம் பயன்படுத்திப் பழுக்கவைத்துப் பெருமை கொண்டவர்கள் எமது சந்தை விஞ்ஞானிகள். வாழைக்குலை எதுவாயினும் முழுவதுமாக ஒரேநேரத்தில் பழுக்கும் அதிசயம் இங்கு தான் நடைபெறுகின்றது. விசாரித்தால் சாம்பிராணிப் புகையில் இப்படிப் பழுக்கின்றதென்கிறார்கள். பிஞ்சிலே பழுக்க வைத்து எங்கள் பிஞ்சுகளின் வாயில் மண்ணை வாரியிறைக்கும் செயலிது. கொடிய நச்சுப் பதார்த்தமான 'கார்பைட்' இரசாயனம் பயன்படுத்திப் பழுக்கவைப்பதால் உண்பவர்களுக்குப் பெப்ரிக் அல்சர் (குடற்புண்) மற்றும் புற்றுநோய் வருவது உறுதி என மருத்துவர்கள் எச்சரித்தும் எங்களூர் விற்பனை முகவர்கள் இவ்வாறான இரசாயனங்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவது நெஞ்சை நெருடுகின்றது. விற்பனைத் தொழிலுக்காக உயிர்களுடன் விளையாடும் செயலிது.

ஊடு புகுந்து தாக்கும் திறனுடைய இமிடாகுளோர்பிறிட் (அட்மயர்) பைபுரோனில் (றீயேயன்ட்), டைமீதோயேற்று என்பவற்றை இப் பூச்சியைக் கட்டுப்படுத் தப் பயன்படுத்தலாம். ஆனால் பப்பாசிக்கு மருந்தடிக்காது முடிந்தளவிற்குப் பழங் களைப் பெற முயற்சிக்க வேண்டும். இதற்கென ஆய்வை முடுக்கிவிட வேண் டும். விவசாயிகளும் விளைநிலத்திலிருந்து ஆய்வினை மேற்கொள்ள முடியும்.

தேசத்தின் பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ள இம்மாவுப் பூச்சியைக் கட்டுப்படுத்த சூழலுக் கிசைவான கட்டுப்பாட்டு முறைகள் அவசியம் கண்டு பிடிக்கப்படவேண்டும். இம் மாவுப் பூச்சியின் பிரசன்னம் பப்பாசியில் இருந்தால் பூச்சியின் தாக்கம் பற்றி எமக்கு அறியத் தாருங்கள். நாமெல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் இப்படியொரு சமூக நிகழ்வை, நிகழ்த்திக் காட்டி தேசத்தை மேம்பாடு அடைய வைத்திட வழி பிறக்கும். ***



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதன் மூலம் அவர்களது உடல் உள நலிவுக்கு நாமே வழிவகுப்பது நியாயமா?

**சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பான சட்டவிதிகள் நடைமுறையில் இருந்தபோதிலும், நாட்டின் பொதுமக்கள் மத்தியில் அவை குறித்துப் போதுமான அளவு விழிப்புணர்வு இல்லை என்பது கவலைக்குரியதாகும். சமூகத்தில் இன்றைய சூழலில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படும் பின்னணி குறித்தும், அதனைத் தடுக்கும் வகையிலான அடிப்படைச் சட்ட ஏற்பாடுகள் குறித்தும் தெளிவுபடுத்துகிறது இக்கட்டுரை...**

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதலை இல்லாதொழிக்கும் நாளாக வருடம்தோறும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இந் நாளில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பாகப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் கட்டாய தேவையாகும்.

"சிறுவர்கள் எனப்படுபவர்கள் யார்"? என்பதில் பல்வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. தொழிற்சட்டத் தின் பிரகாரம் 14 வயதுக்குட்பட்ட வர்கள் சிறுவர்களாகக் கணிக்கப்படு கின்றனர். சிறுவர் பாதுகாப்பு அதி காரசபை, சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் போன்றவற்றால் 18 வயது வரையானவர்கள் சிறுவர்களாக கணிக்கப்படுகின்றனர்.

சிறுவர்கள் தமக்கே உரித்தான பண்புகளைக் கொண்டவர்களாகவும், கள்ளம் கபடமற்றவர்களாகவும், துடுக்குத்தனம் மிக்கவர்களாகவும், விளையாட்டைப் பெரிதும் விரும்பு பவர்களாகவும், அன்பை எதிர்பார்ப்பவர்களாக வும், பயம் இல்லாதவர்களாகவும் காணப்படுகின்றனர். உலகத்தின் பெறுமதிமிக்க சொத்தாகவும், தேசத்தின் உயிர் நாடியாகவும் காணப் படும் சிறுவர்கள் - தமக்கே உரித்தான உரிமைகளைக் கொண்டுள்ளனர்.

சிறுவர்களுக்கு இருக்கும் இவ் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். சிறுவர்கள் சம்பந்தமாக 40 இற்கு மேற்பட்ட உரிமைகள் கூறப்படு கின்றன. அவை உயிர் வாழ்வுக்கான உரிமை, பாதுகாப்பு, மேம்பாடு, பங்களிப்பு என்ற நான்கு பகுதிக்குள் வகுத்து நோக்கப்படுகிறது.

இன்றைய நிலையில் சிறுவர் உரிமைகள் மறுக்கப்பட்டு சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப் படுகிறார்கள். உடல் ரீதியாகத் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம், உளவியல் ரீதியான துஷ்பிரயோகம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், உடலுக்குள் விஷம் புகுத்துதல், உணவு, உடை, பராமரிப்பு வழங்காமை, உயிராபத்து நிலைக்குச் சிறுவர்களை உள்ளாக்கல், சிறுவர்களை ஆயுத மோதலுக்குட் படுத்துதல், போசாக்கினைப் புறக்கணித்தல் என்பன முக்கியமான துஷ்பிரயோகங்களாகக் கொள்ளப் படுகின்றன.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் என்பது இன்று உலகளா விய ரீதியிலும், இலங்கையிலும் மிகவும் முக்கியமான பிரச் சினையாகக் காணப் படுகின்றது. இதனால் சிறு வர்களை வேலைக்கு அமர்த்துதலைத் தடுப்பதற்குப் பல்வேறு நடவடிக் கைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின் றன. உலகளாவிய ரீதியில் சிறுவர் உழைப்புப் பின்வரும் தன்மையில் காணப்படுகிறது.

* முழுச் சனத்தொகையில் 5 மில்லியன் சிறுவர்கள் பாதுகாப்பற்றதும் உடல் நலத்திற்கு ஒவ்வாததுமான தொழில்களில் ஈடுபடுதல்.

* முழுச் சனத்தொகையில் 120 மில்லியன் சிறுவர்கள் பாடசாலைக் கல்வி பெறாதவர்களாக உள்ளனர்.

சிறுவர் தொழிலாளர் அதிகளவில் உள்ள கண்டமாக ஆசியா காணப்படு கின்றது. அதனையடுத்து ஆபிரிக்கா, இலத்தீன், அமெரிக்க நாடுகள் காணப் படுகின்றன. இலங்கையைப் பொறுத் தவரை நிறுவனப்படுத்தப்பட்ட துறைகளில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் மிகக் குறைந்த அளவே காணப்படுகின்றது. ஆனாலும் சிறுவர் கள் வீட்டு வேலைக்காரர்களாகவும் சிறு உணவுச்சாலைகள், விடுதிகள், வாகனங்கள் திருத்தும் நிலையங்கள், தெருவோர வியாபாரங்கள், சந்தை வியாபாரம் போன்ற துறைகளில் வேலைக்கமர்த்தப்படும் நிலை காணப்படுகிறது.

இலங்கைத் தொழில் வலு ஆய்வு ஆவணத்தின் பதிவுகளின்படி, இலங்கையில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல் தொடர்பான புள்ளிவிவரங்கள் வருமாறு:

| வருடம் | தொகை |
|---|---|
| 1992 | 22478 பேர் |
| 1994 | 33202 " |
| 2000 | 30105 " |
| 2001 | 23805 " |
| 2002 | 31427 " |

சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் செயற்பாடு உலகளாவிய ரீதியில் அதிகரித்துக் காணப்படுவதற்கு வறுமை, யுத்தங்களும் இடப் பெயர்வுகளும், அடிமை வியாபாரம், கடன்களை ஈடுசெய்தல், அநாதை களாக்குதல், வீட்டைவிட்டு ஓடிப் போதல், சமூகத்தின் பராமுகம், சிறு வர் உரிமைகள் தொடர்பான போதிய தெளிவின்மை, சிறுவர்களின் பாது காப்பற்ற நிலை, நோய் நொடிகளுக்கு உள்ளாகுதல், பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையே பாச உணர்வு அற்றுப் போதல் என்பவை காரணமாகின்றன.

தொழில் சட்டங்களும் சிறுவர் பாதுகாப்பும் என்பதன் அடிப்படை யில், பெண்கள், இளவயதினர், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பான சட்டம், கடை அலுவலக ஊழியர் சட்டம், தொழில்சாலைகள் கட்டளைச் சட்டம் போன்றவற்றில் சிறுவர் நலன்கள் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. இச் சட்ட ஏற்பாடுகளில் 1956 ஆம் ஆண்டின் 47 இலக்கப் பெண்கள் இளவயதினர் சிறுவர்களை வேலைக்கமர்த்தல் தொடர்பான சட்டம் முக்கியமானது. இதற்கமைய 14 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் வேலைக்கு அமர்த் தப்படுவது முற் றாகத்



தடை செய்யப்பட் டுள்ளது. ஆயினும் 2003 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க திருத்தச் சட்டத்தில் பின் வரும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் சிறு வர்களை வேலைக்கு அமர்த்தலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

* திணம் தோறும் பாடசாலை ஆரம்பமாவதற்குமுன்பாகவோ அல்லது பாடசாலை முடிந்ததன் பின்னரோ குடும்ப அங்கத்தவர்களால் மட்டும் செய்யப்படும் இலகு விவசாய அல்லது பூங்கா வேலைகளில் ஈடுபடுத்தல்.

* அரசாங்கத்தின் மேற்பார்வையின் கீழ் ஏதாவது ஒரு பயிற்சியை வழங் கும் நிறுவனம் ஒன்றில் வேலைக்கு அமர்த்துதல்.

தொழிற்சட்டங் களுக்கு அமைவாக 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இளம் பராயத்தினர் எனக் கருதப்படு கின்றனர். இவர்களை வேலைக்கு அமர்த்தும் போது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

**14 - 16 வயதிற்குட்பட்ட இளம் பராயத்தினர் வேலைக்கு அமர்த்தும் போது பின்பற்றப்பட வேண்டியவை.**

* 16 வயதுக்குட்பட்டவரை ஒரு நாளில் உணவு இடை வேளை ஒரு மணித்தியாலம் அடங்கலாக 9 மணித்தியாலங் களுக்கு மேல் வேலைக்கு வைத்திருக்கக் கூடாது.

* ஆறாவது நாள் 5 1/2 மணித் தியாலங்களுக்கு மேல் வேலைக்கு அமர்த்த முடியாது.

* ஏழாவது நாள் விடுமுறை நாளாக இருக்க வேண்டும்.

* வாரம் ஒன்றில் வேலை செய் யும் காலமானது உணவு உண் ணும் காலம் உட்பட 50 1/2 மணித் தியாலங்களுக்கு மேற்படல் ஆகாது.

**16-18 வயதிற்குட்பட்ட இளம் பராயத்தினர் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் வருமாறு:**

* வார நாள்களில் 9 மணித்தி யாலங்களுக்கு மேலதிகமாக ஒரு மணித்தியாலம் வேலைக்கு அமர்த்தலாம். எனினும் அது வாரத்தில் 5 மணித்தியாலத்திற்கு மேல் இருக்கக் கூடாது.

* வாரம் ஒன்றில் வேலை செய்யும் காலமானது உணவு இடைவேளை உட்பட 55 1/2 மணித்தியாலத்திற்கு மேற்படலாகாது.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது கண்டறியப்பட்டால் வேலை கொள்வோருக்கு எதிராக நீதி மன்றம் மூலம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும். இதற்காகப் பின்வரும் ஆவணங்கள் சேகரிக்கப் படும்.

***1.பாதிக்கப்பட்ட சிறுவனின் வாக்கு மூலம்.***

***2.வேலை பெற்றுக் கொண்ட தொழில் தருநர் வாக்கு மூலம்.***

***3.வயதினை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.***

***4.பெற்றோர் வாக்குமூலம்***

***5.காவல் துறையினர் வாக்குமூலம்.***

என்பன சேகரிக்கப்பட்டு நீதிமன் றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

**குற்றம் புரிந்தோருக்கான தண்டனை**

சிறுவர்களை வேலைக்கு அமர்த்து தல் நிரூபிக்கப்பட்டால் பின்வரும் தண்டனைகளை வேலைக்கு அமர்த்து வோர் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

* ரூபா 10,000 வரையிலான தண் டப்பணம்.

* ஒரு வருடம் வரையான சிறைத் தண்டனை.

* நீதிபதியின் தற்துணிவின் பிரகாரம் தீர்மானிக்கப்படும் நட்ட ஈட்டுத் தொகை சிறுவனுக்கு வழங்க வேண்டும்.

சிறுவர் ஊழியம் அல்லது சிறுவர் துஷ்பியோகம் தொடர்பான தகவல் களைப் பின்வரும் உத்தியோகத்தர் களிடம் தெரிவிக்க முடியும்.

* உதவித் தொழில் ஆணையாளர் / தொழில் உத்தியோகத்தர் - தொழில் திணைக்களம்.

* சிறுவர் நன்நடத்தை




உத்தியோகத்தர்- பிரதேச செயலகம்.

* சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் - பிரதேச செயலகம்

* காவல்துறையினர் (பெண்கள் சிறுவர் பிரிவு)

* சிறுவர் நலனில் அக்கறையுள்ள அமைப்புக்கள் (சிறுவர் பாதுகாப்பு, இலங்கை)

சிறுவர் பிராயத்தில் சிறுவர்களாக காலம் கழிப்பதற்கான உரிமைகளை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் சமூகத்திற்குத் திறன் மிக்க மனிதர்களை உருவாக்கிக் கொடுக்க முடியும். சிறுவர் பராயத்தில் சிறுவர் களுக்குக் கிடைக்க வேண்டிய உள, உடல்நலம், கல்வி, போசாக்கு, அன்பு போன்றவை கிடைக்கும் போது சமூகத்திற்குத் தேவையான, சமூகம் ஏற்றுக் கொள்ளக்கூடிய நன்நடத்தை உயர் மனப்பாங்கு, பாரம்பரியங்களைப் பேணல் போன்ற சிறந்த குணாம்சம் கொண்ட சிறுவர்களை உருவாக்கிட முடியும்.

***

க.கனகேஸ்வரன்,
யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக நார்ப் பொருள் உள்ள உணவை உட்கொள்ளுங்கள்; நோய்க்கான ஏதுநிலைகளைக் குறைத்து சுகவாழ்வு காணுங்கள்!

நாம் உண்பதற்காக வாழ்கிறோமா அல்லது வாழ்வதற்காக உண்கிறோமா?

இன்று பலரும் உணவை, சுகவாழ்வுக்கும், மகிழ்ச்சிக்கும், உயிர்ப்புக்கும் ஆதாரமாகப் பார்க்காமல் நோய்க்காரணியாகவே பார்க்கின்றனர். வைத்தியர்கள் உணவை அளந்து உள்ளெடுக்க வேண்டிய மருந்தாகப் பார்க்கின்றனர். நோயாளர் தமது சக குடும்பத்தவர் போல உண்பதற்கான, மன விருப்பையும் பசியையும் மீறமுடியாமல் வைத்தியரின் உத்தரவைப் புறக்கணிக்கின்றனர். பலர் தமது வேலையையும், மாணவர் பிரத்தியேகக் கல்வியையும் (tuition) முக்கியமாகக் கருதி உணவைப் புறக்கணிக்கின்றனர். மேலும் பலருக்கு உணவு என்பது வழக்கமான கரைச்சலாகவே உள்ளது.

### உணவு நோயாதல்

உணவினால் நோய்கள் உருவாகும் விதம் விஞ்ஞானரீதியாகத் தெளிவாக்கப்படவில்லை. இது புள்ளிவிவர அடிப்படையில் காணப்பட்ட தொடர்பாகவே உள்ளது. இதற்கான சில கருத்தியல் விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

உணவினால் புற்றுநோய் உருவாவதற்கு உணவு பதனிடலில் சேர்க்கப்படும் இரசாயணப்பதார்த்தங்கள் உள்ளெடுக்கப்பட்ட பின் புற்றுநோய்க் காரணிகளாக மாறுவது ஒரு காரணமாகும். ஒரு வகையான பங்கசு புற்றுநோயை உருவாக்கும் நச்சுப் பார்த்தத்தைச் சுரக்கின்றது. அத்தகைய பங்கசு (பூஞ்சணம்) தொற்றிய உணவுகளால் புற்றுநோய் ஏற்படுகின்றது. மேலும் நார்ப்பொருள் இல்லாத உணவு உண்பவரது குடலில் மிகச்சிறியளவு கழிவுகளே எஞ்சுவதால், குடல் மிக மெதுவாக அசைவதுடன் குடலினுள் மலம் நீண்டநேரம் தங்குகின்றது (மலச்சிக்கல்) குடலினுள் இயற்கையாகக் காணப்படும் பக்ரீரியாக்கள் பித்த அமிலங்களைச் சிதைக்கும்போது உருவாகும் சில பதார்த்தங்கள் குடல் புற்றுநோயை ஏற்படுத்த வல்லன.

### நாடிகளில் ஏற்படும் மாற்றத்தால்....

''அத்திரோஸ்கிளிரோசிஸ்'' எனப்படும்

**சுகவாழ்வுக்கான உணவு 01**

நாடிகளில் ஏற்படும் மாற்றம் குருதி வழங்கலைப் பாதிப்பதால் இருதயம், மூளை போன்ற பல உறுப்புக்களின் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படுத்துகின்றது. நாடிகளின் அகப்படையில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாக அப்படையில் கொழுப்புப் பொருள்கள் படிவதுடன் ஆரம்பிக்கும் இம் மாற்றம் மூன்று வகைகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது:

* *படியும் கொழுப்புப் பொருளால் குழாய்களின் உள் விட்டம் குறைவது,*
* *படிந்த கொழுப்புப் பொருளில் கல்சியம் சேர்ந்து இறுகி குழாயை விரிவடைய முடியாது செய்வது, மற்றும் கொழுப்புப் படிந்த இடங்களில் குழா யின் அகப்படை பாதிக்கப்பட்டு குருதி யுறதலுக் குக் காரணமாகி குழாயை முற்றாக மூடச் செய்தல்.*

மேற்படி மாற்றங்கள் ஏற்படும் உறுப்பு, மாற்றத்தின் அளவு என்பவற்றின் விளைவாக மாரடைப்பு, பாரிசவாதம், உயர் குருதியமுக்கம் போன்றவை ஏற்படுகின்றன. 'அத்திரோஸ்கிளிரோசிஸ்' ஏற்படுவதற்கான அடிப்படைக்காரணி குருதியில் புரதத்துடன் இணைந்து காணப்படும் கொழுப்பு (Lipoprotein) அளவு மாறுவதே. உயிரிரசாயனவியல் அடிப்படையில் இது குறை அடர்த்தி, இடை அடர்த்தி மற்றும் அதி அடர்த்தி (HDL, IDL,HDL) எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இப் பிரிவு எல்லாவற்றிலும் கொலஸ்ரோல் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. முதல் இருவகை அதிகரிப்பதும் மூன்றாவது வகை குறைவதும் 'அத்திரோஸ்கிளிரோசிஸ்' ஏற்படக் காரணமாக அறியப்பட்டுள்ளது.

இன்சுலின், கோட்டிசோல் (அழுத்த ஓமோன்), இன்னும்பல ஓமோன்களின் சுரப்புக்களிலும் செயற்பாட்டிலும் மாற்றத்துக்குள்ளாகும் அனுசேபத்தின் விளைவாகவும் மேற்படி நோய்நிலை ஏற்படலாம்.

இந்த ஓமோன்கள் குருதியில் குளுக்கோசு, கொழுப்புப் பொருள் போன்றவற்றையும் அவற்றை இழையங்கள் பயன்படுத்தும் தன்மையையும் மாற்றவல்லன. இந்த ஓமோன்களின் 24 மணிநேர மொத்த சுரப்பு மற்றும் சடுதியாக ஏற்படும் சுரப்பு மாற்றங்கள் வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்த வல்லன.

### நீண்டகால நோய்களுக்கு உணவுடனான தொடர்பு

யாழ். விஞ்ஞான சங்கத்தின்



சென்றவருட வருடாந்தக் கூட்ட தலைவருரையில் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் இவ்விடயத்தைத் தெளிவாக்கியிருந்தார். அவரது உரையின் முக்கிய குறிப்புக்கள் கீழே தரப்படுகின்றன:

**மருத்துவபீடாதிபதி பேராசிரியர் க.சிவபாலன்**

* நீண்டகால நோய்களுக்கு ஆளாகும் தன்மை 30 வீதம் பரம்பரைக் காரணிகளிலும், மிகுதி உணவு மற்றும் சூழல் என்பவற்றிலும் தங்கியுள்ளது.
* இந்த நோய்களின் ஏதுநிலை கருவறையிலேயே ஆரம்பமாகிவிடுகின்றது. இவற்றைத் தவிர்ப்பதற்கான முயற்சிகள் வாழ்வின் எல்லாப் பருவங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
* பிறப்பு, நிறை குறைவாயிருத்தல் உடல் உளக் குறைபாடுகளுடன் தொடர்புடையது.
* அதிக பிறப்பு நிறை அதிக உடற்பருமனுடனும் அது சார்ந்த நோய்களுடன் தொடர்புடையது.
* குருதிச் சுற்றோட்ட நோய்களுக்கு உணவின் சக்திப் பெறுமானத்தின் 10 வீதத்துக்கு மேலாக நிரம்பிய கொழுப்பு உட்கொள்வதுடன் தொடர்புள்ளது. நிரம்பாத கொழுப்புக்களை ஐதரசனேற்றி நிரம்பியதாக்கும்போது உருவாகும் கொழுப்புகள் (உதாரணமாக சில மாஜரின் களின் தயாரிப்பில்) அதிக ஆபத்தானவை. நிரம்பாத கொழுப்புக்கள் உடலில் நன்னிலைக்கு மிக அவசியமானவை. ஆனால் அதிக நிரம்பாத கொழுப்புக்களை உட்கொள்வதும் நல்லதல்ல.
* உணவில் நார்ப்பொருள் அதிகம் இருப்பது நோய்களுக்கான ஏதுநிலை யைக் குறைக்கிறது.

என்பது தொடர்பாக தெளிவான முடிவில்லாமல் விவாதம் தொடர்கின்றது. இது தொடர்பில் பல்வேறு ஆய்வாளரால் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட அளவீடுகள் முரண்பாடான விளைவுகளையே தந்துள்ளன. எலிகளிலும் மனிதரிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி உடற்பருமன் அதிகரிப்பது உள்ளெடுக்கும் மொத்த சக்திப் பெறுமானத்தில் மட்டுமே தங்கியுள்ளது. தினசரி எத் தனை பிரிவாக உட்கொள்வது என்பதில் இது தங்கியிருக்கவில்லை.

### சிறுவரிடையே அதிக உடற்பருமன்

நாலாயிரத்துக்கு அதிகமான ஜேர்மனிய பிள்ளைகளிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று தினசரி அதிக எண்ணிக்கையில் உணவுண்ணும் பிள்ளைகளிடையே அதிக உடற்பருமன் குறைவாக காணப்பட்டதாகக் கூறுகின்றது. எட்டாயிரத்துக்கு அதிக பிள்ளைகளை ஆய்வுசெய்த இன்னுமொரு ஆய்வின்படி அதிக உடற்பருமனுடைய சிறுவர்.

* அதிக நேரம் தொலைக் காட்சி பார்ப்பவர்களாக.
* குடும்பத்தவருடன் உண்பது குறைவாக (கூடுதலாக வெளியிடங்களில் உண்பவராக)
* வெளியே சென்று விளையாடுவதற்குப் பாதுகாப்பற்ற தெனப் பெற்றோர் கருதும் சுற்றாடலில் வசிப்பவராக இருந்துள்ளனர். வெளியிடங்களில் விளையாடும் அல்லது உடற் செயற்பாடுகளில் ஈடுபடும் சாத் தியமுள்ள சிறுவர்களிடையே உடற்பருமன் அதிகரிப்பதற்கான சாத்தியம் காணப்படவில்லை.

### உணவு எண்ணிக்கையும் குருதிக் குறிகாட்டிகளும்

தினசரி உணவை பல பாகங்களாக உண்பதால் குருதியில் குளுக்கோசு மற்றும் கொழுப்பு அளவுகளில் ஏற்படும் மாற்றங்களைச் சில ஆய்வாளர் ஆராய்ந்துள்ளனர். இத்தகைய ஆய்வுகளின் பெறுபேறுகள் பின்வருமாறு அமைந்தன:

* குருதியில் மொத்த கொலஸ்றோல் குறைவடைகிறது
* குறைஅடர்த்தி கொழுப்பு- புரதப் பொருள் (LDL) குறைவடைகிறது.

பட்டுக் காணப்பட்டது.

* போதியஉணவு கிடைக்காதவர் கிடைக்கும் உணவைக் காலையில் உண்பது கல்வி மேம்பாட்டைக் கொடுத்துள்ளது.
* காலை உணவு மாணவரிடையே உள்வாங்கும் திறன், பரீட்சைப் பெறுபேறுகள், பாடசாலை வரவு, ஞாபகசக்தி மற்றும் போசணை நிலை என்பவற்றில் மேம்பாட்டைக் காட்டியுள்ளது.

### மேற்படி மாற்றங்களுக்கு அளிக்கப்படக்கூடிய விளக்கங்கள்

உணவை அதிக எண்ணிக்கையில் பிரித்து உண்பவரது அனுசேபம் அதிகரித்து அதனால் சாதகமான நிலை உருவாவதாக சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆனால் இது பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டதற்கு மாறாக உள்ளது.

நீண்ட நேரம் உண்ணாதிருப்பவரது உடல் சக்திவழங்கலில் குறைவை உணர்ந்து ''பட்டினி'' நிலைக்கு மாறுவதால் உடலின் அகச்சுரப்புகளும் அனுசேபமும் சாதகமற்ற மாற்றங்களுக்குட்பட்டு பாதக விளைவுகள் ஏற்படலாமெனச் சிலர் கூறுகின்றனர்



இன்சுலின் சுரப்பில் ஏற்படும் மாற்றமும் தன் விளைவுகளும் இன்னுமொரு காரணமாக அமைகின்றன, ஒரு நாளுக்குரிய உணவை ஒரு அல்லது இரு தடவைகளில் உண்ணும்போது குருதியில் குளுக்கோஸ் அளவு மிகவும் அதிகரித்து அதனால் இன்சுலின் சுரப்பு மிக மிக அதிகரிப்பது அறியப்பட்டது. இதன் விளைவு இருவகையாகலாம். ஒன்று கொழுப்பு. இழையத்தில் அதிக கொழுப்பு உருவாகி

## அதிக உப்புச் சேர்த்த உணவு குருதி அமுக்கத்துக்கு வழிகோலும்

* இன்சுலின் குருதிமட்டம் குறைவடைகிறது.
* குளுக்கோசு குருதிமட்டம் குறைவடைகிறது.
* குருதியில் கொழுப்பு அமில மட்டம் குறைவடைகிறது.
* குருதியில் யூரிக் அமில மட்டம் குறைவடைகிறது. (இதயநோய்களிலிருந்து பாதுகாப்பு)
* பசி- திருப்தி நிலைமாறாது நிலையாயிருந்தது.

சேமிக்கப்பட்டு, கொழுப்புத்தன்மை அதிகரிக்கும். மறுபுறத்தில் அதிகரித்த இன்சுலின் செயற்பட்டால் குருதியில் குளுக்கோசின் அளவு ஒரு சில மணித்தியாலங்களில் வழமையைவிடக் குறைவடைந்து மீண்டும் பசியைத் தூண்ட, இனிப்புப் பண்டங்கள் அல்லது தேனீர் போன்றவற்றை உட்கொள்ள, மீண்டும் இன்சுலின் கூட, இவ்வாறு சுற்றிச் சுற்றி உண்ண, அளவுக்கு அதிகமாக உள்ளெடுக்கப்படும் சக்திப் பொருள்களால் பாதக விளைவுகள் ஏற்படுகின்றன.

தவிடு நீக்கிய அல்லது நார்ப் பொருளற்ற உணவுப்பண்டங்களை நன்கு பதப்படுத்தி, உதாரணமாக பாண், பணிஸ், பிஸ்கற், குக்கீஸ், கேக், சீனி அதிகமுள்ள பானங்கள், இனிப்புகள் போன்றவற்றை, உண்டதும் மிக விரைவாக சமிபாடடைந்து, அகத்துறிஞ்சப்பட்டு குருதியில் குளுக்கோசின் அளவு வேகமாக அதிகரிக்கும். அகத்துறிஞ்சல் அதே வேகத்தில் நிறைவடைய குருதியில் குளுக்கோஸ் அடிமட்டத்துக்குச் சடுதியாகக் குறையும். இந் நிலையில் சுரக்கப்படும் கோட்டிசோல், குளுக்கோன், அதிரிநலீன் போன்ற ஓமோன்களால் பாதக விளைவுகள் ஏற்படலாம். இவை கொழுப்பு இழையத்திலிருந்து கொழுப்பு அமிலங்களை வெளிப்படுத்த, அதனால் சலரோகத்துக்கான ஏது நிலை ஏற்படலாம். இத்தகைய வேக உணவுகளை உண்ண வேண்டிய நிலை இருந்தால் சிறிது சிறிதாகப் பல தடவைகளில் பிரித்து உண்பது பாதிப்பைக் குறைக்கும்.

மேலும் இந்த ஓமோன்களின் செயற்பாட்டினால் தசைகளிலிருந்து புரதம் அகற்றப்பட்டு, குளுக்கோசாக மாற்றப்படும். நிறை குறைப்பதற் காகக் குறைவாக உண்ப வரும் பல பிரி வுகளாக உண்பது உடற் கொழுப்பைக் குறைக்கும் அதேவேளை தசைகளைப் பாதுகாக்க உதவும்.

## உணவை ஓரிரு தட்டைவகள் சாப்பிடுவது நல்லதா? பல பாகங்களாகப் பிரித்து உண்பது நல்லதா?

* தினசரி 5 கிராமுக்குக் குறைவாக உப்பு உண்பது உயர் குருதியமுக்க ஏது நிலையைக் குறைக்கிறது.
* சலரோகம் அதிக கொழுப்பு உண்பதுடனும் குருதியில் குளுக்கோஸ் அளவை விரைந்து கூட்டும் உணவுகளுடனும் தொடர்புபட்டுள்ளது.
* புற்றுநோய் அற்ககோலுடனும் உணவை அதிகவெப்பநிலையில் (சூடாக) உண்பதுடனும் தொடர்பாயுள்ளது. அதிக நார்ப்பொருள், போலிக்கமிலம், கல்சியம் உட்கொள்வது புற்று நோயிலிருந்து பாதுகாப்பைத் தருகிறது.

### உணவு எண்ணிக்கையின் விளைவுகள்

இதுவரை கூறப்பட்டவை ஒட்டு மொத்த தினசரி உணவின் விளைவுகளே. உணவை ஓரிரு தடவைகளில் உண்டு முடிப்பது நல்லதா அல்லது பல சிறு பாகங்களாகப் பிரித்து உண்பது நல்லதா

மேற்படி அவதானிப்புகள் உணவை பல பாகங்களாக அடிக்கடி உண்பது ஆரோக்கியமானது என உணர்த்துகின்றன.

### காலை உணவைத் தவிர்த்தல்

காலை உணவைத் தவிர்ப்பவர்களில் ஏற்படும் மாற்றங்கள்பற்றிப் பல ஆய்வாளர் ஆராய்ந்துள்ளனர். இவ்வாராய்ச்சிகளின் முடிவுகள் பின்வருமாறு:

* காலை உணவைத் தவிர்ப்பவர்களின் குருதியில் கொலஸ்றோல் அதிகரித்து ஆரோக்கியமற்ற தன்மையைக் கொடுத்துள்ளது.
* உடல் நிறையைக் குறைப்பதற்காக உணவைக் குறைப்பவர் காலை உணவை வழமைபோல் உண்டு. மதியம் மற்றும் இரவில் குறைவாக உண்பது நல்ல பலனைத் தந்துள்ளது. குறைவான உணவை பல பாகங்களாக உண்பவரும் காலையில் கட்டாயமாக உண்பது சிறந்த பலனைத் தரும்.
* காலை உணவை உண்ணும் சிறுவர் மற்றும் கட்டிளம் பருவத்தினரின் போசாக்கு நிலை அதைத் தவிர்ப்பவரை விட மேம்


(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையுலகத் தம்பதிகளான விஜயகுமார் - மஞ்சுளா ஆகியோரின் மகள் ஸ்ரீதேவி. இவர் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி, காதல் வை- ஸ் என்னும் படத்தின்மூலம் கதாநாயகியாக உயர்ந்தவர். 'தித்திக்குதே', 'தேவதையைக் கண்டேன்' போன்ற தமிழ்ப் படங்களிலும் ஒரு சில தெலுங்குப் படங்களிலும் நடித்துப் பெயர் பெற்றவர். இவருக்கும் ஹைதராபாத்தைச் சேர்ந்த தொழில் அதிபரான ராகுல் என்பவருக்கும் ஜூன் 18 ஆம் திகதி சென்னையில் உள்ள ஸ்ரீவாரு வெங்கடாசலபதி மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. இதன்போது திரையுலகத்தைச் சேர்ந்த பல பிரமுகர்கள் நேரில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.★

# ஸ்ரீதேவிக்குத் திருமணம்





# குரு சிஷ்யன்


ரஜினி - பிரபு இணைந்து நடித்து மிகப் பெரிய வெற்றி பெற்ற படம் 'குரு சிஷ்யன்'. இப்போது இதே பெயரில் இன்னொரு படம் தயாராகவுள்ளது. இதனை ஷக்திசிதம்பரம் இயக்கவுள்ளார். இந்தப் படம் ஏற்கனவே வெளிவந்த குரு சிஷ்யன் திரைப்படத்தின் கதையை தழுவிச் சில நவீன மாற்றங்களுடன் தயாரிக்கப்படவுள்ளது. இதில் ரஜினி நடித்த வேடத்தில் சத்தியராஜும், பிரபு நடித்த வேடத்தில் சுந்தர்.சியும் நடிக்கவுள்ளனர். தற்போது படத்தின் திரைக்கதையைச் செம்மையாக்கும் பணியில் இயக்குநர் ஷக்திசிதம்பரம் ஈடுபட்டுள்ளார். ஏனைய நடிகர்களையும் தெரிவு செய்த பின்னர் மிக விரைவில் 'குரு சிஷ்யன்' படம் பற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பை அவர் வெளியிடுவார் என்று கூறப்படுகின்றது.★




திரைப்படத் துறையில் சம்பாதிக்கும் பணத்தைத் திரைப்படத் துறையிலேயே முதலீடு செய்யும் வழக்கம் பிரபலமான நடிகர்களிடம் உண்டு. அவர்களில் ஒரு சிலரே நடிப்புத் துறையைப்போல தயாரிப்புத் துறையிலும் ஜொலிக்க முடிந்தது. ஏராளமானோர், சம்பாதித்த பணம் அத்தனையும் இழந்ததுதான் கடந்தகால வரலாறு. இந்நிலையில் இத்தனை காலமும் நடிப்பின் பக்கம்

# மம்முட்டியின் புதிய நிறுவனம்

மட்டுமே கவனத்தைச் செலுத்திவந்த மலையாள சுப்பர் ஸ்ராரான மம்முட்டி இப்போது புதிதாகத் திரைப்படத் தயாரிப்பு நிறுவனம் ஒன்றை ஆரம்பித்துள்ளார். 'பிளே ஹவுஸ்' என்று பெயரிடப்பட்டுள்ள இந் நிறுவனம் திரைத்துறை மீது ஆர்வம் கொண்ட புதியவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று மம்முட்டி தெரிவித்துள்ளார்.★



'காதலில் விழுந்தேன்' என்ற வெற்றிப் படத்தின் ஜோடிகளான நகுல் - சுனைனா மீண்டும் இணைந்து நடித்துள்ள படம் 'மாசிலாமணி'.

குப்பத்தில் விட்டேத்தியாகத் திரிகின்ற நகுலுக்கு நடன ஆசிரியையான சுனைனா மீது காதல் ஏற்படுகின்றது. ஆனாலும் சுனைனா நகுலைச் சந்திக்கின்ற நேரங்களில் எல்லாம் சந்தர்ப்ப சூழ்நிலையால் அவர் கெட்டபெயர் வாங்கவேண்டி ஏற்படுகின்றது. இதனால் நகுலை சுனைனா வெறுக்கிறார். அடைந்தால் சுனைனாதான் என்ற வெறியுடன் நகுல் அலைய, செத்தாலும் நகுலின் மனைவியாக மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறார் சுனைனா. இறுதியில் இவர்களில் யார் வென்றார்கள் என்பதைச் சுவாரசியமாகச் சொல்கின்றது 'மாசிலாமணி' திரைப்படம். இதில் மாசி என்கிற அடியாளாகவும், மணி என்கிற நல்லபிள்ளையாகவும் மாறி மாறி இருவர்போல வேடமிட்டு கலகலப்பூட்டுகிறார் நகுல். அத்தோடு இரண்டு பாத்திரங்களுக்கும் இடையில் நடிப்பிலும் வேறுபாடு காட்டுகிறார். படத்தின் இன்னொரு பலமாக சந்தானம், கருணாஸ் ஆகியோரின் நகைச்சுவைகளைக் கூறலாம். கூடவே எம்.எஸ்.பாஸ்கர் ரஜினி, கமல் போல பாவனை செய்யும் காட்சிகளும் ரசிகர்களின் வயிற்றைப் புண்ணாக்குகின்றன. காதல் காட்சிகளில் அநாயசமாக நடித்து அத்தனை பேரின் பாராட்டுக்களையும் அள்ளிக் கொள்கிறார் சுனைனா. படத்தில் வருகின்ற எல்லாப் பாடல்களும் துள்ளலாக அமைந்து கேட்போரைக் கிறங்கடிக்க வைக்கின்றன. பின்னணி இசையிலும் டி.இமான் சிரத்தை காட்டியுள்ளது புலனாகின்றது.

மிகச் சாதாரணமான ஒரு கதையை தன்னுடைய வித்தியாசமான திரைக்கதையால் ரசிகர்களின் கவனத்தை ஈர்க்கின்ற படமாக 'மாசிலாமணி'யை இயக்கிய நெறியாளர் பாராட்டுக்குரியவர்.★

# திரைவிமர்சனம்

# மாசிலாமணி





# தொலைக்காட்சியில் விந்தியா

சங்கமம் படத்தில் தன்னுடைய நடன அசைவுகள் மூலம் தமிழ் ரசிகர்களைக் கவர்ந்தவர் நடிகை விந்தியா. சிறந்த நடிப்பாற்றல் இருந்தும் இவருக்குச் சரியான வாய்ப்புகள் அமையவில்லை. எனவே நீண்டகால காத்திருப்புக்குப் பின்னர் தொழில் அதிபர் ஒருவரைத் திருமணம் செய்துகொண்டார். ஆனால் இப்போது இவர்கள் இருவருக்கும் இடையே விரிசல் தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த விரிசலின் வெளிப்பாடாக மிக விரைவிலேயே விந்தியாவும் கணவரும் விவாகரத்துப் பெறவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. விவாகரத்தின் பின்னர் சினிமாவில் நடிக்க முடியாவிட்டாலும் தொலைக்காட்சித் தொடர்களில் நடிப்பதற்கு விந்தியா விரும்புகிறார். இதனால் சில தொலைக்காட்சித் தொடர்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு விந்தியா தூதுவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவாக் இல்லாததே தோல்விக்குக் காரணம்

விளையாட்டு அரங்குகளில்



இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் 'ருவென்ரி-20' உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பட்டம் வெல்லப்போது யார் என்ற விவாதம் ரசிகர்களிடம் தீவிரமாகியுள்ள நிலையில், நடப்பு சம்பியன் இந்தியா அரையிறுதிக்குக் கூட தகுதி பெறாமல் அப் போட்டியிலிருந்து வெளியேறியது ஏன் என்ற விவாதமும் முக்கியத்துவம் பெற்றுவருகிறது.

தென்னாபிரிக்காவில் நடந்த இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் தொடர்ந்து விளையாடியதால் ஏற்பட்ட களைப்பே தோல்விக்குக் காரணம் என இந்திய அணியின் பயிற்சியாளர் கேரி கிர்ஸ்டன் கருத்து தெரிவித்துள்ளார்.

ஆனால் காரணம் அதுவல்ல; வீரேந்திர சேவாக் விளையாடாமல் போனதே காரணம் என இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் செளரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

அவர் கூறியவை வருமாறு:

இந்திய அணி உலகக் கோப்பைப் போட்டியில் பெற்றுள்ள தோல்விக்கு கேரி கிர்ஸ்டன் கூறும் காரணத்தை நான் ஏற்பதாக இல்லை. அணியில் இடம் பிடித்திருந்த வீரர்களில் பெரும்பாலானோர் 22-23 வயது இளைஞர்கள். இப்போதுதான் சர்வதேச கிரிக்கெட்டில் அடியெடுத்து வைத்துள்ளனர். அவர்களுக்கு களைப்பு ஒரு காரணமாக இருக்க வாய்ப்பில்லை.

ஒருவேளை தோனி, யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங், சாகீர் கான் ஆகியோர் அவர் கூறும் காரணத்துக்கு வாய்ப்பாக இருந்திருக்கலாம் என்றாலும், அவர்கள் அனைவரும் நிரந்தரமாக டெஸ்ட் அணியில் இடம்பிடித்து விளையாடி வருபவர்கள். அவர்களுக்கும் களைப்பு பிரச்சினையாக இருந்திருக்குமா எனத் தெரியவில்லை.

என்னைப் பொறுத்தவரை டில்லியைச் சேர்ந்த வீரேந்திர சேவாக் விளையாடமுடியாமல் போனதே அணிக்கு துரதிருஷ்டம். அவரது ஆட்டம், நிச்சயம் அணியில் மாறுதலை ஏற்படுத்தியிருக்கும்.

சேவாக், சச்சின், கம்பீர் ஆகியோர் ஒருநாள் போட்டிகளில் முக்கியமான வீரர்கள். அவர்களில் சேவாக்கும், சச்சினும் இல்லாதபோது எப்படி வலுவான அணியாகப் பார்க்க முடியும்? என்றாலும் உண்மையிலேயே போட்டி என்றால் அது டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள்தான். 'ருவென்ரி-20' போட்டி அல்ல. அவற்றில் இந்தியா சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது என்றார் கங்குலி. ★★★★★

# 43 ஆண்டுகளின் பின் வட கொரியா உலகக் கிண்ணத்தில் விளையாடத் தகுதி



தென்னாபிரிக்காவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் விளையாட 43 ஆண்டுகளின் பின்னர் வட கொரியா தகுதிபெற்றுள்ளது. ரியாதில் நடந்த சவூதி அரேபியாவுடனான போட்டியை சமநிலையில் முடித்துக் கொண்டதை அடுத்தே ஆசிய கண்டத்தில் இருந்து வட கொரியா உலகக் கிண்ணத்தில் விளையாட வாய்ப்பு பெற்றது.

இதன்படி ஆசிய கண்டத்தில் இருந்து உலகக் கிண்ணத்திற்கு நேரடித் தகுதிபெறும் 4 அணிகளும் தேர்வுசெய்யப்பட்டுள்ளன. வட கொரியாவுடன் ஏற்கனவே தென் கொரியா, ஜப்பான், அவுஸ்திரேலிய அணிகள் ஆசிய கண்டத்தில் இருந்து தகுதிபெற்றுள்ளன.

வட கொரியா - சவூதி அரேபியா போட்டியில் வட கொரிய அணி ஆட்டத்தை சமநிலையில் முடித்துக்கொண்டால் உலகக் கிண்ணத்தில் விளையாட வாய்ப்பு கிட்டும் என்ற நிலை ஏற்பட்டது. இதில் கடைசி வினாடிவரை வட கொரிய அணி போட்டியை விட்டுக்கொடுக்காமல் போராடியது. தனது சொந்த மண்ணில் விளையாடும் சவூதி அரேபியா பலமுறை கோலடிக்க முயன்றாலும் வட கொரிய வீரர்கள் அதற்கு வாய்ப்பு கொடுக்கவில்லை.

இறுதியில் இரு அணிகளும் கோல் பெறாத நிலையில் போட்டி சமநிலையில் முடிந்தது. வட கொரிய அணி உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் விளையாட தகுதிபெற்றுள்ளது 43 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும். இதற்கு முன்னர் அந்த அணி 1966 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த உலகக் கிண்ண போட்டியில் கடைசியாக விளையாடியுள்ளது. அந்த போட்டியில் வடகொரிய அணி பலம்பொருந்திய இத்தாலியை வீழ்த்தி அதிர்ச்சி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆசியக் கண்டத்தில் இருந்து 5 ஆவது அணியாக உலகக் கிண்ண போட்டியில் விளையாட சவூதி அரேபியா அல்லது பஹ்ரெய்ன் அணிக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆசிய கண்ட உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியின் பிரிவு 1 இல் பஹ்ரெய்ன் அணியும் பிரிவு 2 இல் சவூதி அரேபியாவும் 3 ஆவது இடத்தை பிடித்துள்ளன.




TATA விடமிருந்து இப்பொழுது, புதிய லொறிகள் மற்றும் ட்ரக் வண்டித்தெரிவுகள். அட்சய இலாபம் பெருக்கிடும் TATA, உங்கள் வாழ்விலும் சௌபாக்யம் பெருக்கட்டும். இந்தியாவின் வர்த்தக வாகன தயாரிப்புகளில் முதலிடம் பெறும் TATA வை உங்களுக்கு கொண்டு தரும் DIMO, கடந்த 70 வருடங்களுக்கும் மேலாக தன்மீது மதிப்பும் நம்பிக்கையும் கொண்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு வர்த்தக துறையினர்க்கு நன்றி கூறிக்கொள்வதுடன், தனது அர்ப்பணிப்பு மிகுந்த சேவையை தொடர்வதில் திடசங்கட்பம் பூண்டுள்ளது.

• 24 மணிநேர வழித்துணையுடன், விற்பனைக்கு பிந்திய விரிவான சேவை.

*பரிசோதிக்கப்பட்ட நிலையில்

70 dimo

Diesel & Motor Engineering PLC.
65, ஜேதவன வீதி, கொழும்பு 14.
தொலைபேசி: 011 2449797

உடனடி தொடர்புகளுக்கு : அசோக்குமார் 0773 184586, நவாஸ் 0777 742616

www.sarva.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசீகரத் தோற்றத்திற்கு!

# சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், தங்கமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔஷதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகை தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் கருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் எரிச்சலை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.



சந்தனாலேப

யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தர்

**'சிவா நறுமணப் பூங்கா'**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).

MANUFACTURED BY: SANJEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

## VAN விற்பனைக்கு

TOYOTA TOWNACE HA.....

வெள்ளை நிறம்

தொடர்பு: 0772508452

## மல்லாகம் பழம் பதி

பிள்ளையார், திருமுருகன், கருமாரி தேவஸ்தானம். மேற்படி கூறப்பட்டுள்ள தேவஸ்தானத்திற்கு நேர பூசை செய்வதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட அர்ச்சகர் உடன் தேவை.

ஆதீன கர்த்தா

T.P NO ;060 221 2667



World Vision

Help us to keep them smiling....

சிறுவர்களே வறுமையினால் இலகுவாகப் பாதிக்கப்படுகின்றனர். வேள்ட் விஷன் அமைப்பிலுள்ள நாம், எவ்வித இன, மத வேறுபாடுகளுமின்றி வறிய மற்றும் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் தேவைகளைக் கவனிப்பதன் மூலம் வறுமையின் மோசமான தாக்கத்திலிருந்து அவர்களைப் பாதுகாப்பதில் ஆழ்ந்த அக்கறை செலுத்துகிறோம். தற்போது, இலங்கை முழுவதிலுமுள்ள 825க்கு மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 140,000க்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு நாம் உதவுகிறோம். கிராமிய சமூகத்தினர் கூட்டுச்சேர்ந்து தமது மூலவளங்களை ஒருங்கிணைத்துப் பயன்படுத்தி தமது வாழ்க்கை நிலையை மேம்படுத்திக்கொள்ள வழிகாட்டுவதன் மூலம் நாம் இந்த உதவியைச் செய்கிறோம்.

வேள்ட் விஷன் என்பது சர்வதேச, கிறிஸ்தவ மனிதநேய, நிவாரண மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையமாகும். அது உலகெங்கிலும் 100க்கு மேற்பட்ட நாடுகளில் பணியாற்றுகின்றது. நாம் "பங்காளித்துவ" அடிப்படையில் ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக மன்றத்தின் ஆலோசனை அந்தஸ்து II ஆம் பிரிவில் அங்கம் வகிக்கிறோம்.

## சிறுவர் பாதுகாப்பு இணைப்பாளர் - மனிதாபிமான அனர்த்த நிவாரண உதவிப்பிரிவு (HEA)

தொழில் விபரம்:

பிரதேசத்தில் சிறுவர்களின் நலனுக்காக வேள்ட் விஷன் மேற்கொள்ளும் திட்டங்களை ஒருங்கிணைத்தல், எளிதில் பாதிக்கப்படக்கூடிய சிறுவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், பிரதேச மட்டத்தில் வேர்ல்ட் விஷன் மேற்கொள்ளும் பணிகள் யாவும் ஏனைய அமைப்புக்களின் செயற்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதிப்படுத்துதல்

இணைப்பாளருக்கு உதவியாக சமூக உதவியாளர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்களின் அணியொன்று செயற்படும். இந்த அணியினர் சமூகத்திலுள்ள மக்களுடன் இணைந்து சிறுவர் நலன் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். எளிதில் பாதிப்பிற்கு இலக்காகக்கூடிய சிறுவர்கள் மற்றும் குடும்பங்களை இனங்காண்பதும் தொடர்ச்சியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைச் சிபாரிசு செய்வதும் அவர்களின் பொறுப்பாக இருக்கும்.

தேவைகள்:

- சிறுவர் பாதுகாப்பு, செஞ்சிலுவை, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான ஒழுங்குநெறிக் கோவை பற்றிய அறிவும் அவற்றின் அனுசரிப்பும்
- ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சமவாயம் (UNCRC) பற்றிய அறிவு
- பிரதேச மொழியில் (தமிழில்) வேலைசெய்யக்கூடிய அறிவு
- ஆங்கிலத்தில் (பேச்சு, எழுத்து) சிறந்த தொடர்பாடல் திறமை
- பயணம் செய்வதற்கான இயலுமையும் விருப்பமும்
- சிறுவர்களுக்காகவும் அவர்களுடனும் வேலைசெய்வதில் நல்ல ஆர்வம்
- பல்லின கலாசார ஒருங்கிசைவும் நெகிழ்தன்மையும் மனப்பக்குவமும்
- வலுவான மக்கள் தொடர்பாற்றல்
- கணனித் துறையில் MS Office, லோட்டஸ் நோட்ஸ் போன்ற பிரயோகங்களில் அறிவு
- அணி உருவாக்கச் சூழலில் பணியாற்றவும் பங்களிப்புச் செய்யவும் கொண்டுள்ள திறமை
- சிறுவர்களுக்காகவும் அவர்களுடனும் பணியாற்றிய அனுபவம்
- அணி சேர்ந்து பணியாற்றும் விருப்பார்வம்
- வேள்ட் விஷனின் சிறுவர் பாதுகாப்பு மற்றும் நடத்தை ஒப்பந்தங்களுக்கு அமைந்து நடக்கும் பண்பு

தொழில் அமைவிடம்: யாழ்ப்பாணம்

ஒவ்வொருவரினதும் தகைமை, திறமைக்குமேற்ப கவர்ச்சியான சம்பளப் பொதியை வேள்ட் விஷன் லங்கா வழங்குகின்றது. நீங்கள் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிருந்தால், இவ் விளம்பரம் பிரசுரமான ஏழு தினங்களுக்குள் உங்களது சுயவிபரக்கோவை மற்றும் உறவினர் அல்லாத மூன்று நடுவர்களின் பெயர்கள், முகவரிகள் உள்ளடங்கிய விண்ணப்பத்தை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்:

பணிப்பாளர் - மனித வளங்கள் அபிவிருத்தி,

**வேள்ட் விஷன் லங்கா**

1119/2/1, மருதானை வீதி, கொழும்பு 8.

ஈ-மெயில்: vacancies_wvlanka@wvi.org

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது ஈ-மெயிலின் விடயத் தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

விண்ணப்பதாரரின் நன்நடத்தை தொடர்பான பின்னணி மற்றும் குற்றவியல் பதிவேட்டு விபரங்கள் அனைத்தும் நன்கு பரிசோதிக்கப்படும் என்ற அடிப்படையிலேயே இந்த தொழிலுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வேள்ட் விஷன் சிறுவர்களின் பாதுகாப்பில் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது. ஆகவே, சிறுவர்களுடன் பணியாற்றுவதற்குப் பொருத்தம் இல்லாத பின்னணியைக் கொண்டவர்களை அது வேலைக்குச் சேர்த்துக்கொள்ளாது.

பூர்வாங்கமாகத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்படும்.

www.sarva.lk

# நிஷாப் புயலால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 21

கடந்த வருடம் ஏற்பட்ட 'நிஷா' புயல்க் காற்றினால் பாதிக்கப்பட்ட தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் 668 குடும்பங்களுக்கு 'போரூட்' நிறுவனத்தினால் உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக் கப்பட்டன. கைதடி கிழக்கு, சரசாலை வடக்கு, மீசாலை வடக்கு, தவசிகுளம், கெற்பேலி, குடமியன் மாசேரி, கரம்பைக்குறிச்சி, மந்துவில் மேற்கு ஆகிய கிராம அலுவலக பிரிவுகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கைக்கேற்ப தலா ஆயிரம், தலா இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 200 குடும்பங்களுக்கு இந்த நிறுவனத்தினரால் உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (203-207)

## WORK PERMIT

AUSTRALIA, CANADA, ITALY JAPAN

போன்ற நாடுகளுக்கு வேலையுடன் கூடிய பயண ஆலோசனைகளுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்

நீதன் 071 5361505

## வாழ்த்துகின்றோம்

இன்று (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை பொன் விழாக் காணும் நீர்வேலி கூட்டுறவுச் சங்கமும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் சிறப்பான பணியாற்றி உயர்ந்து நிற்கின்றன. இந்நாளில் முன்னாள் தலைவர் அமரர் வேதவல்லி கந்தையா, தற்போது செயலாற்றுபவரும் சமூக அபிவிருத்தி மன்றக் காப்பாளருமான

**திருமதி ருக்மணி ஆனந்த வேல்**

ஆகியோரின் பணியுடன் இச் சங்கம் நீடூழிவாழ வாழ்த்துகின்றோம்.

சமூக அபிவிருத்தி மன்ற
பணிப்பாளர், பணியாளர்,
அங்கத்தவர்.

## திருமந்திர முற்றோதல்

சுழிபுரம், ஜூன் 21

சண்டிலிப்பாய், ஆலங்குழாய் அகில இலங்கை சேக்கிழார் மன்றத்தின் ஏற்பாட்டில் திருமூல நாயனாரின் திருமந்திர முற்றோதல் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு சண்டிலிப்பாய், மகியம்பதி சிவன் கோயிலில் நடைபெறவுள்ளது.

## காணி விற்பனை

யாழ்ப்பாண நகரில் இருந்து 7 மைல் தூரத்தில், 20 நிமிட வேகத்தில், கைதடியில் கண்டி வீதிச் சந்திக்கு அண்மையில் அடுத்து அடுத்து உள்ள 3.12, 3.0, 3.0, 2.10 பரப்புள்ள நல்ல காணிகள் விற்பனைக்கு உள்ளன. கைதடியில் ஆயுர்வேத வைத்தியசாலை, சித்த வைத்தியப் பல்கலைக்கழகம், முதியோர் இல்லம், அரசாங்க டிஸ்பென்சரி ஆகியன A9 வீதியில் உள்ளன. A9 ரோட்டிற்குப் பின்னால் 200 யார் தூரத்தில், கோப்பாய் வீதியில் இக்காணிகள் உள்ளன.

தொலைபேசி - 2503127 (கொழும்பு)

## யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் (THE ROTARY CLUB OF JAFFNA) மனிதாபிமான வேண்டுகோள்

இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து அல்லலுறும் வன்னி மக்களுக்கு வழங்குவதற்காக யாழ்.றோட்டறிக் கழகம் பொது மக்களிடமிருந்து பால்மா வகைகள், பிஸ்கட் வகைகள், உடுதுணிகள், போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீர் மற்றும் தேவையான பொருள்களைச் சேகரித்து வருகின்றது. வழங்கவிரும்பும் பரோபகார உள்ளம் படைத்தோர் உங்கள் பொருள்களை உதயன் பணிமனை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 'கருமபீடத்'தில் தயவு செய்து ஒப்படைக்குமாறு வேண்டுகின்றோம்.

கொழும்பில் வதியும் எமது உறுப்பினர்களும், அன்பர்களும் பொருள்களை இல.32, முதலாம் மாடி Hampden Lane, வெள்ளவத்தையில் இருக்கும் 'Uthayan Online' அலுவலகத்தில் தயவுசெய்து ஒப்படைக்குமாறு வேண்டுகின்றோம்.

## பதவி வெற்றிடங்கள்

இலங்கையில் முதன் முதலாக தொலைபேசி கணிப்பீட்டு கருவிகளை அறிமுகம் செய்தவர்கள் என்ற பெருமைக்குரியவர்களான தம்பி டெல்கொம் தனியார் நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்கள் அனுபவமுள்ளவர்களிடமிருந்தும், பயிற்சியாளர்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

- சந்தைப்படுத்தல் முகாமையாளர் • சந்தைப்படுத்துனர்கள்
- தொழினுட்பவியலாளர்கள் (மின்னியல் / இலத்திரனியல்)
- லிகிதர்கள் / உதவிக்கணக்காளர்கள்

(Quick Books அறிவு மேலதிக தகமையாக கருதப்படும்)

- வரவேற்பாளர் • பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள்

தங்களது சுயவிபரக் கோவையினை உறவினர் அற்ற இருவரது சிபாரிசு கடிதங்களுடனும், தொலைபேசி தொடர்பிலக்கங்களுடனும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**தம்பி டெல்கொம் (தனியார்) நிறுவனம்**

தம்பி கட்டடம், 177, பழைய சோனகத்தெரு, கொழும்பு - 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் சரவணையூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கவிஞர் தில்லைச்சிவன். சிறுக்தைகளையும் படைத்தவர். தினகரன் பத்திரிகையில் இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன. இலக்கியத்தின் ஒரு பிரிவாகக் கொள்ளப்படும் நடைச் சித்திரங்கள் பலவற்றைத் தொடர்ச்சியாக மல்லிகை இதழில் எழுதி வந்தவர். கவிதைத்துறையில் நிறையவே பங்களிப்புச் செய்துள்ளார். 'மறுமலர்ச்சி', 'மல்லிகை' போன்ற சஞ்சிகைகளிலும், சுதந்திரன், ஈழகேசரி, தினகரன் போன்ற பத்திரிகைகளிலும் இவரது கவிதைகள் பல பிரசுரமாகியிருந்தன. 1930 - 40 துகளில் யாழ்ப்பாணப் பகுதியில் வழக்கிலிருந்த வேலைக் களைப்புத் தீர கதை சொல்லும் வழக்கத்தை அடியொற்றி எழுதப்பட்டவையே நடைச் சித்திரங்கள் ஆகும்.

கனவுக்கன்னி, தாய், பாப்பாப் பாட்டு ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டுள்ள தில்லைச்சிவன் ஆசிரியராகத் தொழில் பார்த்து ஓய்வு பெற்றவர். அமரராகி விட்டார்.

மூத்த எழுத்தாளர், கவிஞர், நடைச்சித்திரப் படைப்பாளி என்ற பரிமாணங்களை ஒருசேர வெளிப்படுத்திய தில்லைச்சிவனின் 'பாட்டனார் சொன்ன தோம்புக் கதை' நடைச் சித்திரம் இங்கு பிரசுரமாகின்றது.

# பாட்டனார் சொன்ன தோம்புக் கதை

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 103

இன்று, ஒன்று, இரண்டு, ஐந்து, பத்துச் சதக் குற்றிகள் மதிப்பிழந்து புழக்கத்தில் இல்லையென்றே சொல்லலாம். கால்ரூபா, அரைரூபா தரத்தில் உள்ள இருபத்தைந்து ஐம்பது சத நாணயங்களையே பிச்சைக்காரர்கள் கூட ஏற்காத நிலை வந்துள்ள போது சதக்குற்றிகளுக்காக கவலைப் படுவதென்ன?

சில முதலாளிகள் காசுக்கட்டுக்களை எண்ணும் பொழுது ஒன்றினை லாபம் என்றே ஒதுக்கி விடுகிறார்கள். பத்துரூபாக் கட்டில், முதற்பத்தும் நூறு ரூபாவானால் முதல் நூறும் ஆயிரங்களில் முதல் ஆயிர மும் லாபங்கள். அவரவர் தரத்திற்கேற்ப புழக்கத்தில் இல்லாமல் முடக்கப்படுகின்ற னவா என நினைத்ததுண்டு.

ஒரு நாற்பது, நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் செப்புலோகத்தினாலான, தடித்த ஒரு சதம், அரைச் சதம், காற்சதக் குற்றிகளும் அதன் மேல் வெண்பொன்னாலான ஐந்து, பத்து, இருபத்தைந்து, ஐம்பது சத நாணயங்களும், முழு ஒரு ரூபாக்குற்றிகளும் புளக்கத்தில் இருந்தன. ஒரு வல்லுவம் நிறையச் சில சில்லறைகள் போதும். அக்கால வழக்கில் எனது பாட்டனார் ஒன்றரைச் சதங்களை 'ஒரு துட்டு' என்றும், ஆறு சதங்களை 'ஒரு பணம்' என்றும் ஐம்பது சதக் குற்றியை 'சிலிங்' கென்றும் பத்து ரூபாவை 'ஒரு பவுண்' என்றும் கூறுவார். உண்மையில் அன்று ஒரு தங்கப்பவுண் பத்து ரூபா பெறுமதியானது என்றும் அறிந்திருந்தேன்.

எங்களுக்கிருக்கும் ஒரு காணியை இரண்டு இளசாலுக்குத் தனது முன்னோர் வாங்கியதாக எனது பாட்டனார் கூறினார். அந்த இளசாலின் பெறுமதியை இன்றைய ரூபாவில் சொல்ல, அவர் அறிந்திருக்க வில்லை. உலாந்தாக்காரர் என்ற ஒல்லாந்தர்கள், நிலங்களை அளந்து விற்று, இளசால் கணக்கில் பணத்தினைப் பெற்றுக் கொண்டு, நொத்தாரிசு மூலம் உறுதி முடித் துக் கொண்டுள்ளார்கள். இவ் உறுதிகளைத் தோம்பு என்று கூறுகிறார்கள். இவ்வாறே பழைய கதைகளைச் சொல்லும் போது தோம்புக் கதைகள் என்றும் சொல்வர். இவை டச்சுக் காலக் கதைகளாக இருக் குமோ என்னவோ, எனது பாட்டனார் சொன்ன, ஒரு புத்தியுள்ள கிழவனின் அந்திம காலம் பற் றிய கதை இது.

வயோதிபம் மிகக் கொடுமையானது. "இந்தக் கிழடுகளைக் கட்டிக் கொண்டு அழ யாரால் முடியும். நேர காலத்திற்கு போகா மல் கிடக்குதுகளே" என்று வருத்தப்பட் டுக் கொள்வாரும் உண்டு.

பாட்டனுக்கு கஞ்சி கொடுக்கும் சிரட்டையைக் காணாதுதேடிய போது, "உங்களுக்குக் கஞ்சிதர எனக்குத் தேவைப்படும்,அதனால் அச்சிரட்டையை, நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்" என மகன் சொன்னதை நினைப்பவர்களும் உண்டு.

பிள்ளைகளின் நினைப்பையும் நிலையையும் உணர்ந்து "கண் கெட்ட கடவுள் என்னைக் கொண்டு போறார் இல்லையே" என உறவோடிரங்கும் வயோதிபர்கள் பலர்.

இளமையோடு இருக்கும் பொழுதே இறந்து விட்டால் "ஐயோ நாம் என்ன செய்வோம்" என்றே அழும் மனைவி மக்கள் தாமும், வயது சென்று கிழடானபின், "ஏன் இன்னமும் கிடக்குது" என்று அலுத்துக் கொள்வார்கள்.

கைப்பொருள் சம்பாத்தியம் வைத்திருக்கும் வயோதிபப் பெற்றோரைப் பராமரிக்க, "நான் முந்தி நீ முந்தி" என்று முந்திக் கொண்டு சேவை செய்யப் பிள்ளைகள் வருவர். இன்றும் அன்றும் எமது சமுதாய நிலை இது. ஒன்று இரண்டு புறநடை இருக்கலாம்.

'அன்னையும் பிதாவும் பின்னடிக்கு இடைஞ்சல்' என்ற புதுமொழி பகிடியாகக் கூறப்பட்டாலும், சிந்தனைக்குரியதே. நாலைந்து பிள்ளைகளைப் பெற்று வளர்த்த தந்தை தாயாரைப் பார்ப்பது யார்? என்ற தகராறு குடும்ப உறவுகளையே பிரித்துப் போட்ட சமாச்சாரங்கள் பல.

இவற்றினைத் தெரிந்து கொண்ட அனுபவஸ்தர்களான சிலர், எய்ப்பினில் வைப்பாகப் பணச் சேமிப்புக்களைத் தமது கையிலேயே வைத்திருப்பர். அப்படி இல்லாத ஏழைக்கிழவர்கள் தமது அடிப்படைத் தேவைகளுக்கே அல்லற்படுவது உலக அனுபவம். இத்தகையவர்கள் தமது இறுதிக்காலத்தில் அனுபவித்த சோகங்களை அறிந்த எனது பாட்டனார் சொன்ன கதை வருகிறது.

ஒரு கிழவன் தனது ஐந்து பிள்ளைகளில், ஒருவரோடும் இன்றித் தானும் தன்பாடுமாய் ஒரு குடிலில் இருந்தார். உழைத்து வாழக் கூடிய தெம்பு இருக்கும் போது மற்றவர்களுக்கு இடைஞ்சல் தரக்கூடாது என்ற நோக்கமாகவும் இருக்கலாம்.

பனாட்டுப் பினைதல், கடகம் பெட்டி இழைத்தல், ஈர்வாணிக்கொடி, உறி என்பன பின்னுதல், சூத்துக் கண்ணி, கந்துவான், பாதக்கண்ணி நாற்கயிறு திரித்தல் போன்றன அவரின் தொழில்கள். இத் தொழில்களில் இவர் நிபுணரும் கூட. இத் தொழில்களாற் கிடைக்கும் பண்ட மாற்றுத் தானியங்களையும் சொற்பக் கட்டுக்களையும் கொண்டு தன் வாழ்க்கையை ஓட்டி வந்தார்.

இல்லாத பொல்லாத காலத்தில் காடும் கட லும் கை கொடுக்க வாழ்க்கை சுகமாக நடந்தது.

சிறிது காலத்தில் அவர் நோய் வாய்ப்பட்டுப் போனார். வயோதிப நோய். தொழில் செய்ய முடியவில்லை. வெளியில் சென்று வரவும் முடியாது. ஐந்து பிள்ளை கள் குடும்பங்களுடன் ஒரே வளாகத்தில் பக்கம் பக்கமாக இருந்தும், கிழவரைக் கவனிப்பதில்லை. ஏனோ தானோ என்று அலுத்துப் போன நிலையில் எப்போதாவது வருவார்கள், போவார்கள்.

ஒரு நாள் மூத்தமகன் வந்து எட்டிப் பார்த்தார். அவரைக் கண்டதும், மெல்லவே தனது படுக்கையில் இருந்து எழுந்திருந்த கிழவர், தலையணை போல் ஓலையால் இழைக்கப்பட்டிருந்த ஒன்றைத் தலையின் கீழிருந்து எடுத்து மடியில் வைத்துக் கொண்டார். கைகள் மெல்லவே தலையணை யில் தாளம் போட மகனைப் பார்த்துச் சொன்னார்.

"எனது நிலைமை சரியில்லை, இன்றோ நாளையோ, சில நாள்களோ, வாரங்களோ தெரியாது மகனே! எனது சா வீட்டை எளிய முறையில் நடத்திவிடுங்கள். பெற்று வளர்த்தது என் கடமை என்று அதை ஏதோ என் வசதிக்கேற்பச் செய்தேன். உங்கள் ஐந்து பேரையும் வளர்த்தெடுக்க நான் பட்ட பாட்டை உங்கள் ஆத்தாள் இருந்தால் சொல்வாள். அந்த லட்சுமி இந்தப் பாடுகளைக் காணாமலே கண்மூடிவிட்டாள். புண்ணியவதி....!" சிறிது மௌனத்தின் பின் கண்களில் நீரைத் துடைத்துக் கொண்டே, "இனி உங்கள் கடமை, ஊரார் நகைக்காமல் எல்லோரும் ஒற்றுமையாக நின்று சிக்கனமாக நடத்தி விடுங்கள்" என்று கூறினார்.

(14 ஆம் பக்கம் பார்க்க...)

## விருத்தி வாழ்க்கை

விருத்தி வாழ்க்கை எனக்கென்னமோ
விடுகாலி வாழ்க்கைதான்.
அதிகாலையில் ஆதரவாய் தட்டி எழுப்ப
அம்மாவோ அருகிலில்லை.
அப்பாவின் அன்பான கண்டிப்புக்கள் இப்போ
கைத்தொலை பேசியில் கூட இல்லை.
ஏன்? அன்றாடம் எனக்கு அட்வைஸ் கூறும்
என் ஆசானோ வெகுதொலைவில்.
இன்னாது செய்தால் இன்னாது விளையும்
இங்கு எனக்கு நானே வழிகாட்டி
நாளும் நண்பிகளுடன்
அடிக்கும் அரட்டையால்
நடுச்சாமத்தில் தூங்கச்செல்ல
"இன்று என்ன படித்தாய்"?
என் மனசு கேட்கும்.
நாளும் நாளும் இதையே செய்தால்
நான்காம் வருட இறுதியிலும்
இதுதான் கேள்வி.
"என்ன படித்தாய்"?
சத்தியமாய் ஒன்றும் படிக்கவில்லைத்தான்.
ஆனாலும்....
ஏதோ ஒன்று படித்தேன்.
"ஆயிரம் மனிதர்களையும்
அவர்களுக்குள் புதையுண்ட மனிதத்தையும்"

- ராதிகா.

## இயற்கையின் நியதி இது!

இருந்த படியே இருக்குமெல்லாமென
எண்ணி விடாதீர் பிள்ளைகளே
"பெருத்தன சிறுக்கும் சிறுத்தன பெருக்கும்"
பொய்யாத் தத்துவம் பிள்ளைகளே.

பிச்சை கேட்டுத் திரிபவன் ஒருநாள்
பெருங்கோடீஸ்வரன் ஆகிடலாம்
உச்சத்திலிருந்து உழைத்துக் குவிப்பவன்
ஊரிலும் பிச்சை ஏற்றிடலாம்.

ஆள்பவன் ஒரு நாள் அடிமையாகலாம்
அடிமை ஒரு நாள் ஆட்சி ஏறலாம்
பாழ் நிலங்களில் மாளிகை எழலாம்
மாளிகை நிலங்களில் மந்தை மேயலாம்

வெள்ளம் தங்கும் பள்ளம் ஒரு நாள்
பார்த் திருக்க மேடாகிடலாம்
வெள்ளம் ஓடி மேட்டினை ஒரு நாள்
வீழ்த்திப் பெருங்குழி காட்டிடலாம்

காடுகள் திருந்தி ஆங்கே சிறந்த
கழனிகள் கூடத் தோன்றிடலாம்
தேடிய கழனிகள் மீண்டும் விலங்குகள்
தமதாய்க் கொண்டு வாழ்ந்திடலாம்

மண்நிலம் ஆழியுள் மறைந்திட லாம்–சில
மண்நிலம் புதிதாய்த் தோன்றிடலாம்
கண்டங்கள் சேர்ந்தொன் றாகிடலாம் – சில
கண்டங்கள் பலவாய்ப் பிரிந்திடலாம்.

- செல்லையா குமாரசாமி

# இன்று இல்லாவிடினும் என்றென்றும் எங்களைக் காப்பது நாம் செய்யும் தர்மமே!

உண்மையே பேசு, நன்மையே பெறுவாய்
நீதியும் நேர்மையும் நிலை இன்பந் தனைநல்கும்
இறைவனை நம்பு, இயன்றநற் பணிசெய்
தர்மம் வெல்லும், அதர்மம் அழியும்.

நம் காதுகளில் அடிக்கடி ஒலித்துக் கொண்டிருக்கும் இத்தகைய அமுத மொழிகள், பாரத நாடெங்கும் புருடர்கள் காலத்துக்குக் காலம் வெளியிட்ட அனுபவங்கள், மக்களுக்கு வழங்கிய உபதேசங்கள் போன்றவற்றின் பிழிவாகத் திகழ்கின்றன.

ஆனால், இவற்றின் அடிப்படையிலேயே தம்முடைய வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர்களுட் பலர், சொல்லொணாத தொல்லைகள், துன்பங்கள், துயரங்கள், அச்சுறுத்தல்கள், ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் போன்றவற்றுக்கு ஆளாகி - அவமானப்பட்டு - கூனிக்குறுகி நிற்கும் அதே வேளையிற் பொய் சொல்பவர்கள், புறங்கூறுபவர்கள், அடிதடி, அக்கிரமம், கொலை, கொள்ளை முதலியவற்றைச் செய்வதைத் தம் 'தொழிலா'கக் கொண்ட சிலர் தம் பணத்தாலும் பதவியாலும் அவற்றைப் 'பக்குவமாய்' மறைத்துக் கொண்டு 'பெரிய மனிதர்'களாகப் பவனி வருவதையும், மாலை மரியாதையும், மதிப்பான வரவேற்பும் அவர்களுக்கு அளிக்கப்படுவதையும் பார்க்கும்போது, -

மேற்போந்த அமுத மொழிகளெல்லாம் அர்த்தமற்றவையா? ஆதாரமற்றவையா? அன்றாட வாழ்க்கைக்கு அவசியம் அற்றவையா? என்ற கேள்விகள் - அவற்றுடன் ஒட்டியுள்ள சந்தேகங்கள் - அவநம்பிக்கைகள் நெஞ்சைக் குடைவதும் - சிந்தனையைக் குழப்புவதும் - நிம்மதியை விரட்டுவதும், பலரையும் பாதிக்கும் 'பொது' அனுபவங்களாகப் படர்ந்துள்ளன.

மயக்கத்தை விரட்டி மனத் தெம்பை விருத்தி செய்வதற்கு, தடுமாற்றத்தை ஓட்டி, தன்னம்பிக்கையை ஊட்டுவதற்கு, மகாபாரதம் உணர்த்தும் மகத்தான உண்மை ஒன்றை மனதிற் பதியச் செய்வது இன்றியமையாததாகத் தோன்றுகின்றது.

பஞ்ச பாண்டவர்கள் தர்ம சீலர்கள், அன்பையும் அறத்தையும் தம் இரு கண்ணாய்க் கொண்டவர்கள். மறந்தும் பிறன் கேடுசூழாத மாண்புமிக்க மன்னர் குலக் கொழுந்துகள்; பெற்றோர்களுக்கும் பெரியோர்களுக்கும், கற்றோர்களுக்கும், கடவுளர்களுக்கும் பணிந்து நடப்பதை, "பயந்து" நடப்பதைத் தம் வாழ்வாகவே வரித்துக் கொண்டவர்கள். ஆனால், அவர்களுக்கு எதிரான நோக்கும் போக்கும் கொண்டவர்களாக இருந்தவர்கள் அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரர்களாகிய கௌரவர்கள் என்ற துரியோதனனாதியோர்.

பாண்டவர்களின் அறிவும் ஆற்றலும், கொள்கையும் நடத்தையும், பேரும் புகழும் துரியோதனனின் உள்ளத்திலே பொறாமைக்

[14 ஆம் பக்கம் பார்க்க...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டனார் சொன்ன...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மகன் மௌனமாகவே இருந்தார். தகப்பனின் நிலை கவலை கொடுத்தது. அவர் மடிமீதிருந்த தலையணையிலும் கருத்துச் சென்றது. கிழவன் கொஞ்சமாகச் சேர்த்து வைத்த சில்லறைகளாகத் தான் இருக்க வேண்டும் என்று நம்பினார். ஆனால் வாய் திறந்து அதைப் பற்றி விசாரிக்காது வெளியே சென்றார்.

சிறிது நேரஞ் செல்ல, மூத்தவனின் மனைவி உணவுப் பெட்டியுடன் கிழவனாரின் கொட்டிலுக்குள் நுழைந்தாள். இப்போது போல அக்காலத்தில் கடதாசிப் பைகள் கிடையாது. உணவுப் பெட்டியை கிழவனிடம் கொடுத்து விட்டுத் திரும்பியவள், தலையணை உமலையும் கடைக்கண்ணாற் கண்டு கொண்டே சென்றாள்.

இவர்கள் இப்படியாகத் தொடர்பு வைத்திருப்பதைக் கண்டு, ஏனைய மக்கள் மருமக்கள் தாமும் ஏதோ விசேடம் அறிபவர் போலப் போக வரத் தொடங்கினர். குசலம் விசாரித்தார்கள். எல்லோருக்கும் தனது அத்திம காலத்தை வெளிப்படுத்திக் கொண்ட கிழவனார், மடியிலிருக்கும் தலையணையில் தாளம் போட மறக்கவில்லை. கேள்விகளுக்கு கூறும் பதிலோடு பதிலாக, தலையணையில் தாளம் போட்ட படி, அதனுள் இருந்து ''கல் கல் என்று ஒலி எழ, அதற்கு ஒத்திசைவாக

கேட்டுக்க பொக்கணம், கேட்டுக் பொக்கணம்!
சோறும் வந்தது கேட்டுக்க பொக்கணம்,
கறியும் வந்தது கேட்டுக்க பொக்கணம்,
மீனும் வேணும் கேட்டுக்க பொக்கணம்,
மேலும் வேணும் கேட்டுக்க பொக்கணம்''

என்ற பாட்டும் வரும். மக்கள் மருமக்கள் , கிழவர் எங்களை வாயால் கேளாது, பொக்கணத்திடம் அன்போடு கேட்கிறார். பொக்கணத்துள் ஏதோ பெருஞ் சங்கதி இருக்குது போல என்று நினைத்துக் கொண்டார்கள். கிழவர் பொக்கணத்திடம் கேட்பதனை பிள்ளைகள் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் பொக்கணத்தையும் ஒரு கண் பார்த்துவிட்டுத் தான் செல்வார்கள். இவற்றை அவதானித்த கிழவருக்கு உள்ளூர மகிழ்ச்சி. பொக்கணத்தைப் பற்றிய நம்பிக்கை வலுத்த வேளையில் அதன் பாதுகாப்புப் பற்றிய கவலையும் வலுத்தது.அது களவு போக முடியவே முடியாது. ஐயிரண்டு பத்துப் பேர் ஒருவர் அறியாமல் ஒருவர் அதற்குக் காவல். இவர்களை மிஞ்சி எவன் வரப்போகிறான்? என்ற நினைவுடன் இருந்த கிழவர், ஒரு நாள் திடீரென மண்டையைப் போட்டுவிட்டார்.

செய்தி கேட்டு ஒருவர் பின் ஒருவராக ஓடிவந்து பிள்ளைகள், நிலைமையைப் புரிந்து கொண்டு முதலில் பார்த்தது தலையணையைத்தான். ஒருவரும் அதனைத் தட்டிப் பார்க்காது விடவில்லை. அதன் திண்மையும் 'கல்' என்ற ஒலியும் எல்லோர் உள்ளத்திலும் கிளு கிளுப்பை ஏற்படுத்தியது. முதல் வேலையாக தலையணையை ஒரு பாயால் சுற்றி மறைத்துக் கட்டி, வீட்டு முகட்டுக் கூரையில் தொங்க விட்டார்கள். இதன் பின்னரே இறந்து போன கிழவனைத் துடைத்து ஒரு பாயில் வளர்த்தி, ஊர் உறவிற்கு அறிவிக்கவும் செலவைப் பற்றிச் சிந்திக்கவும் தொடங்கினார்கள்.

சாவீட்டு நிகழ்வுகளை முதல் மகன் ஒழுங்கு படுத்தினார். தந்தையார் தனக்குச் சொன்ன புத்திமதிகளை இம்மியும் பிசகாது அவர் சொற்படி நிறைவேற்றுவேன் என்று விடாப்பிடியாய் நின்றதால் சாவீட்டுச் செலவு ஒரு நூறினைத் தாண்டவில்லை.

இந்தச் செலவினைக் கேட்கும் போது இன்றைய சாவீட்டை ஒப்பிட்டால் மண்ணாங்கட்டிக்கும் மலைக்கும் உள்ள உயரம். இரண்டும் சாவீடுகள் தான். இறந்த உயிர்கள் திரும்பப் பிறக்காமல் விடப்போவதில்லை.தமது பெற்றோரை உயர் பதவிகளில் பணத்தினால் இருத்தலாம் என நினைக்கின்றார்களோ இல்லையோ, தமது பெருமையைக் காட்டச் செய்யும் செலவினையும், குறைத்துக் கொண்டால் வசதியற்றோருக்கு உதவாவிடினும் வழி காட்டுதலாக அமையுமே என்ற ஆதங்கத்தோடு தொடர்ந்து கதையைக் கேட்டேன்.

ஒரு சாப்பறையும், தம்பட்டமும் முழங்க ஆள்பேர்கள் சேர்ந்து விட்டார்கள். தடி வெட்டுபவன் தடி வெட்ட, பாடை கட்டுபவன் பாடை கட்ட, கட்டாடி பாடையைச் சுற்றிச் சேலை கட்டி முடிஞ்சுது. நாவிதன் பன்னாங்கு பின்னியாச்சு, நாலு மூலைக்கு நாலு வாழைக்குட்டிகளைக் கட்ட வேண்டியது தான். பாடை தயாராச்சு.

அடுத்தென்ன? கட்டை தறிச்சு வண்டியில் சுடுகாடு நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. வீட்டில் பிரேதத்தை அரப்பெண்ணை வைத்து முழுக்காட்டிப், புத்தாடை புனைந்து, திருநீறு பூசி, சந்தனம், குங்குமம் திலகமிட்டு, ஒரு மரக்கட்டிலில் தெற்கே தலை வைத்து வளர்த்தியாச்சு. நாலு தேவாரம் தெரிந்தோர் தேவாரம் பாட கற்பூர தீபப் புகையில் சாம்பிராணிப் புகையும் சந்தன வாசமும் பரிமளிக்க வாய்க்கரிசியிட்டு வழியனுப்பு வோர் கட்டி ஒப்பாரி வைக்க பிரேதம் பவனியாக சுடுகாடு சென்றடையும்.

பிரேதத்தைக் கட்டையில் வைத்து, எழும்பி நிமிராதவாறு பாரமான நெஞ்சாங்கட்டையைப் பொருத்தி, குடம் உடைத்துக் கொள்ளி வைத்தவர் திரும்பிப் பார்க்காமல் வீடு வந்து சேரவேண்டியது தான் . சாவீடு முடிந்தது.

அடுத்த மூன்றாம் நாள் காடாத்து. நாவிதர் பிரதான பாத்திரம் வகிக்க மூன்று நான்கு பேரோடு காரியம் சரி. அடுத்துள்ள எட்டுச் சிலவு. ஏழுக்கும் ஆறுக்கும் ஐந்துக்குங் கூட நடத்தலாம். நடத்தும் தினத்தை குறிப்பிட்டு உற்றார் உறவினருக்குத் தெரிவித்து விட்டு வந்து பந்தலில் இரண்டு மூன்று கடகங்களை வைப்பர். வீடுகளால் அரிசி, காய்பிஞ்சு, தேங்காய், வெற்றிலை, பாக்கு என்பனவும் குறைந்தது ஆளுக்கு ஒரு பணம் (ஆறு சதம்) வீதம் காசும் வந்து சேரும்.

அரிசி தந்த ஒவ்வொரு வீட்டினருக்கும் அன்று சாப்பாடு இறந்தவர் விரும்பி உண்ட உணவுகள் அனைத்தும் படையல் இட்டு குடிப்பறையன், குடிமை வண்ணான், குடிமை நாவிதன் என்பவருக்கு கொடுப்பதுடன் அன்று தான் சாவீட்டு வரவு செலவுகளைப் பார்த்து முடிப்பது வழமை.

இவ்வாறே எல்லாவற்றையும் நிறைவேற்றிய பின், சகோதரர் அனைவரும் சேர்ந்திருந்த சபையில், முகட்டில் தொங்கிய தலையணை அவிழ்க்கப் பட்டது. எல்லா விழிகளும் பொட்டணத்தை உற்றுப் பார்த்துக் கொண்டு நிற்க பொட்டணம் ஒரு சத்தகத்தால் கீறிக் கொட்டப்பட்டது. எல்லோர் மனதிலும் தோன்றி எழுந்த ஆவலின் பிரதி பலிப்பாகக் கல கல வென்று கொட்டிய சிப்பி சோகிக் குவியலைக் கண்டு ''அட அண்ண வெறுஞ் சிற்பியடா'' என்று எல்லோரும் அலுத்துக் கொண்ட போதிலும், கிழவரின் தந்திரத்தை எண்ணி தம்முள் வெட்கமும் கொண்டனர்.'' என்றார்.

இந்தக் கதையைக் கேட்டதும், ''பாட்டா நீங்கள் ஏமாற்ற மாட்டீர்கள் அல்லவா'' என்று கேட்டுச் சிரித்த போது, எனது தாயார், அவர் தான் ஒவ்வொரு காணியாய் விற்றுக் கொண்டு வாராரே'' என்றார். எப்படிக் கவலை என்று பாருங்களேன்.******

(நன்றி: அந்தக்காலக் கதைகள்)

## இன்று இல்லாவிடினும்....

[13 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

கடலைப் பொங்கி எழச் செய்தன. சகுனியுடன் சேர்ந்து அவன் செய்த சதித்திட்டம் காரணமாக, பாண்டவர்கள் நாட்டை இழந்தனர்; வீட்டை இழந்தனர். காட்டிற்குச் சென்று கடின வாழ்க்கை வாழ்வதற்கும் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையிலும், அவர்கள் தர்மத்தினின்றும் தவறில்லை. நீதியைவிட்டு நீங்கவில்லை; துக்கத்தால் துவழவில்லை; துயரத்தாற் சோரவில்லை.

அதேவேளையில் -

நல்வழியில் நடப்பவர்கள் நாளாவிதக் கஷ்டங்களுக்கு உட்பட்டே தீருவர்; அத்துடன், காலங் கடந்தாயினும் அவற்றிலிருந்து விடுபட்டும் தீருவர் என்ற உலக இயற்கையை - உயர்ந்த ஓர் உண்மையை - தங்களின் வாழ்க்கையை உதாரணமாகக் காட்டி உலகினர்க்கு விளக்குவதற்காகவே ''விதி''க் கடவுள் அல்லல்களுக்கும், அவலங்களுக்கும் தங்களை ஆளாக்கினான், என, தம் பரிதாப நிலைக்குச் சரியான சமாதானம் கூறி நிமிர்ந்து நின்றனர், வெற்றிமாலை சூடி இறுதியில் நிம்மதியும் கொண்டனர்.

இது சம்பந்தமாக, அகராதியின் உதவியில்லாமலே அனைவரும் விளங்கிக் கொள்ளும் வகையிலே பாரதி பாடிய

''தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்'' என்னுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகங் கற்கும்
வழிதேடி விதியிந்தச்செய்கை செய்தான்.
கருமத்தை மேன்மேலுங் காண்போம், இன்று
கண்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்,
தனு உண்டு, காண்டீவம் அதன் பேர் என்றான்.

என்ற பாடலை உள்ளத்திற் பதிப்போம், தர்மம் வெல்லும்.★

(நன்றி: இந்துசாதனம் - ஆசிரிய தலையங்கம்)

## சொற்சிலம்பம் - போட்டி இல: 66

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | 9 | | |
| 10 | | ■ | 11 | | | | ■ |
| 12 | | 13 | | ■ | | ■ | 14 |
| | ■ | 15 | | 16 | ■ | 17 | |
| ■ | 18 | | ■ | 19 | 20 | ■ | |
| 21 | | | | ■ | 22 | 23 | |
| 24 | | | ■ | 25 | | | |

அனுப்புபவர் பெயர்:.................................

விலாசம்:.................................

.................................

கையொப்பம்:.................................

### மேலிருந்து கீழ்

1. பஞ்ச பாண்டவர்களில் ஒருவன்.
2. கட்டுப்படுத்தும் சொல்.
3. இது வயிற்றைப் பிறாண்டும்.
4. இராமன் இவனையும் சகோதரன் ஆக்கிக் கொண்டான்.
5. சிறுநீர்.
6. ஓர் அசைச்சொல்.
9. இது ஒரு.குரங்கு. அலைபாயும்.
11. இன்று அல்ல.
13. கூறுதல்.
14. ஆட்சியில் இருப்பவரின் கடிவாளம் இதுதான்.
16. நீர்த்தேக்கம்.
18. தோட்டத்தில் பயிர்களுக்கு நீர் பாய்ச்ச அமைக்கப்படுவது.
20. இறத்தல்.
21. நல்ல.
23. மார்புக் கூட்டின் ஒரு பகுதி.

### இடமிருந்து வலம்

1. ஒரே அளவு பங்கீட்டில் கேட்பது.
5. எந் நேரமும்.
7. பார்வைக்குத் தெரிவது.
8. தாமரை.
10. கண்டுபிடிக்க இதைச் செய்.
11. சோறு/ஒரு பறவையும் கூட.
12. வம்பு தும்பு செய்பவன்.
15. ஒரு வாசனைத் திரவியம்.
17. அரைவாசி.
18. நோக்கு.
19. வேற்று நாடுகளுக்குச் செல்லமுன் பெறவேண்டிய அனுமதி.
21. இது சுகம் தரும்.
22. விலக்கும் சொல்.
24. விடை.
25. அனைத்தும்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 66**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 01.07.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 66 இற்கான விடைகள் 05.07.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ,மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 64இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்
(1)சகவாசம் (5)சாவி (7)தாவரம் (8)மதில் (9)சம்பாசனை (11)பாகு (12)திரு (13)தான் (14)திண்ணை (15)வசவு (17)அம்மி (19)பலசாலி (21)பாரம் (23)கும்மி (24)உடும்பு

மேலிருந்து கீழ்
(1)சதா (2)கவச குண்டலம் (3)வாரம் (4)சம்பாதி (5)சாதி (6)வில்லன் (8)மனை (10)சருவம் (11)பாதி (13)தாவு (16)சமிபாடு (17)அலி (18)செம்பு (19)பகு (20)சாமி (22)ரம்

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 64 இற்கான சரியானவிடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு
த.சிவநேசம்,
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.

2 ஆம் பரிசு
ப.அக்ஷயன்,
கண்ணன் ஆலய வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

3 ஆம் பரிசு
திருமதி க.நடராஜன்,
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) ம.நிரோஷனா,
பழனி இல்லம், பச்சு வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(2) திருமதி ப.செல்லத்துரை,
புலோலி மேற்கு, புலோலி.

(3) வ.சிவப்பிரகாசம்,
இல:99, ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

(4) ந.சிவசீலன்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(5) ஜே.ரி.சொபிக்கா,
இல:26/3, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவை



சின்னச் சின்னப் பாவை
சிறந்த நல்ல பாவை
அழகு நிறைந்த மேனி
கண்ணைக் கவரும் தோற்றம்

கண்கள் மின்னும் பாவை
கூந்தல் கொண்ட பாவை
கைகள், கால்கள் அசைக்கும்
எனக்குப் பிடித்த பாவை!

நி.லக்ஷைனா
தரம்-2 A
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.

## பாட்டி நல்ல பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி
பல்லு இல்லாப் பாட்டி
கட்டு உடலும் வற்றி
ஒட்டிப்போன பாட்டி!

தலைமயிரும் வெள்ளை
தமிழ்ப்பேச்சும் கொச்சை
ஏழும் மூன்றும் கூட்டி
கணக்குச் சொல்வார் பாட்டி!

பாக்கும் சிறிசா வெட்டிச்
சுண்ணாம்புமே சேர்த்து
பொக்கை வாய்க்குள் வைத்துச்
சப்பும் எங்கள் பாட்டி!

காதும் சிறிது கேளா
கண்ணும் நன்கு தெரியா
கோதும் கேசமும் கொஞ்சம்
கோபம் இல்லாப்பாட்டி!

சேவல் கூவும் முன்னம்
எழுந்து விடும் பாட்டி
காவல் எமக்குச் செய்யும்
கருணை உள்ள பாட்டி!

சி.டர்ந்நா தரம் –7A
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -20

1. சர்வதேச 'ருவென்ரி - 20' போட்டிகளில் ஒரு இன்னிங்ஸில் ஐந்து விக்கெட்டுக்களைமுதன்முறையாக வீழ்த்திய வீரர் யார்? எந்தநாட்டவர்?
2. தலைகீழாகத்தொங்கியபடிபந்துகளை எறிந்துபிடிப்பதில் சாதனைபடைத்தவர் யார்?
3. விண்வெளிக்குப் பயணம் செய்த முதலாவது பெண்மணியின் பெயர் என்ன?
4. யாழ்ப்பாணதேசவழமைச்சட்டத்தை உருவாக்கிய குழுவுக்கு தலைமை தாங்கியவர் யார்?
5. மெதடிஸ்ததிருச்சபையைத்தோற்றுவித்தவர் யார்?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 01.07.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா? -18
சரியான விடைகள்

(1) இங்கிலாந்தில்.
(2) எட்மண்ட் ஹிலாரி, டென்சிங்.
(3) அமெரிக்காவின் பிலடெல்பியாவிலுள்ள இராட்சத கழுதைச் சிலை.
(4) மு.க.ஸ்டாலின்.
(5) அமரசிறி தொடங்கொட.

### பரிசுபெறுவோர்

01. ச.ஜனனி, தரம் - 9 C, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.
02. பா.பாருகன், தரம் - 9, யா/கொக்குவில் இராமகிருஸ்ண வித்தி.
03. கு.ஆர்த்திகா, தரம் - 8 B, யா/இராமநாதன் கல்லூரி.
04. ஞா.கனிஷ்டஸ், தரம் - 8 E, யா/புனித பத்திரிசியார் கல்லூரி.
05. த.சாம்நிரோஷன், தரம் - 10, யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி.
06. தே.நளினா, தரம் - 9 reds, யா/உடுவில் மகளிர் கல்லூரி.

## கெடுவான் கேடு நினைப்பான்

ஓர் ஊரில் கந்தன் என்பவன் இருந்தான். அடுத்தவர்கள் நன்றாக இருந்தால் அவனுக்குப் பிடிக்காது. அவர்கள் அழிந்துபோக வேண்டும் என்று நினைப்பான். ஒருநாள் கந்தன் வியாபாரத்துக்கு வெளியூருக்குப் போனான். அரிசி மூடையைத் தலையில் சுமந்து கொண்டு சென்றான்.

இப்போதுபோல நல்ல வெயில் காலம். கந்தனுக்குத் தாகம் எடுத்தது. ஓர் ஊர் வழியே போனபோது குடிக்க ஏதாவது கிடைக்குமா என்று பார்த்தான். ஓர் திண்ணையில் நீர்மோர், வைத்திருந்தார்கள். அதில் நீர் மோர் எடுத்துக் குடிக்கப் போனான்.


சட்டென்று ஒரு நினைவு வந்தது. 'புண்ணியம் தேடுவதற்கு அல்லவா இந்தத் தர்மம் செய்கிறார்கள்? நான் நீர் மோர் குடித்தால், இந்த வீட்டுக்காரனுக்குப் புண்ணியம் சேர்ந்து விடுமே!' என்று எண்ணினான். எனவே, நீர் மோரைக் குடிக்கவில்லை. தாகத்துடன் மேலே நடந்தான். தாகம் அதிகமாயிற்று. 'எங்காவது குளம் இருந்தால் தண்ணீர் குடித்துக் கொள்ளலாம்' என்று தொடர்ந்து நடந்தான். ஆனால் ஊரில் இருந்த குளத்தில் தண்ணீர் இல்லை. ஊரைத் தாண்டியதும் ஒரு பாலைவனம் வந்தது.

கந்தன் நடந்து கொண்டேயிருந்தான். வெயில் நெருப்பாகக் கொதித்தது. தாகத்தில் அவனது நாக்கு வரண்டது. எங்காவது தண்ணீர் கிடைக்குமா என்று தேடி அலைந்தான். மயங்கி விழுந்தான். ''தண்ணீர்....... தண்ணீர்'' என்று தவித்துக்கொண்டே கந்தன் செத்துப் போனான்.

''கெடுவான் கேடு நினைப்பான்''

ச.அனோஜா, தரம் -8B,
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## மாணவர் தூரிகை



E.அரிநயா, தரம் -3.



ப.கோபிநாத், தரம் -4 C, யா/புனித ஜோன்.பொஸ்கோ வித்தி.



வி.அபிராமி, தரம் - 1, யா/தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை.



சி.கலைமதி, தரம் - 6, யா/பொலிகண்டி இ.த.க.பாடசாலை.




ஞா.விவேந்தன், தரம் - 8A, J.C.H.C



வை.கலைநாதனி, தரம் - 2, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.




இ.சஜீகரன், தரம் -7A, சென்.ஜோன்.கல்லூரி.



ச.அபர்ணன், தரம் -4, யா/இந்து ஆரம்பப் பாடசாலை.




## சூரியனைப் பற்றி அறிந்து கொள்வோம்



- ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்கள் எல்லாமே மிகப்பெரிய நட்சத்திரமான சூரியனை மையமாகக் கொண்டுள்ளன. அத்துடன் சூரியன் கோள்களைத் தன்னிடம் கவருகின்ற ஈர்ப்புச் சக்தியையும் கொண்டுள்ளது.

கோள வடிவினதான சூரியன், தனது அச்சில் சுழல்கின்றது.
சூரியனை மையமாகக் கொண்டே ஞாயிற்றுத்தொகுதி நிலைத்திருக்கிறது.
புவியிலிருந்து 149.65 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் சூரியன் அமைந்துள்ளது.
சூரியனது விட்டம் 1.4 மில்லியன் கிலோ மீற்றர் ஆகும்.
சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை 6000 °C ஆகும்.
சூரியனின் உட்பகுதியிலுள்ள ஐதரசன் வாயு ஹீலியமாக மாறுவதனால் சூரிய வெளிச்சம் உண்டாகிறது.
புவியில் ஏற்படும் வேறுபட்ட காலநிலை மாற்றங்களிலும் உயிரினங்களின் தோற்றங்களிலும் மனித நடவடிக்கைகளிலும் சூரியன் செல்வாக்குச் செலுத்துகின்றது.

சி.வைகுந்தன், தரம் -8G, யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.

இளவரசர்கள் உயிர்பெற்றதோடு இன்னொரு ஆச்சரியமும் மணிமொழிக்குக் காத்திருந்தது. குகையில் நிறுத்தப்பட்டிருந்த ஏனைய சிலைகளும் இளவரசர்கள் போலவே உயிர்பெறத் தொடங்கின. அவ்வாறு உயிர் பெற்ற சிலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாட்டு இளவரசர்களாய் தோற்றமளித்தனர். அவர்கள் அனைவரும் நன்றியோடு மணிமொழியை நோக்கினர். ''நீங்கள் கூட மனிதர்கள் தானா? எதற்காக இப்படிச் சிலையாக மாறினீர்கள்?'' என்று அவர்களை நோக்கி மணிமொழி வினவினாள். அவளுடைய கேள்விக்கு உயிர்பெற்ற இளவரசர்களில் ஒருவன் பதில்கூற முன்வந்தான். ''இளவரசியே நாங்களும் உம்மைப்போன்று அரச வம்சத்தைச் சேர்ந்த வாரிசுகள்தான். எப்போதும் இளமையோடு இருக்கும் சிரஞ்சீவி மந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மந்திரக் கிழவி ஆயிரத்தியொரு அரசிளம் குமாரர்களைப் பலி கொடுக்கவேண்டும். அதற்காகவே எம்மை இங்கே அடைத்து வைத்திருந்தாள். அவளிடம் இருந்து தப்புவதற்காக உங்களைப்போல் நாங்களும் சுரங்கவழியில் இறங்கினோம். ஆனால் சிலையின் கேள்விக்குப் பதில் சொல்லமுடியாது நாங்களும் சிலைகளாகிப் போனோம். இன்று நீர் சரியான பதிலைச் சொன்னதால் நாங்களும் மீண்டும் மனிதர்களாகும் பேறு பெற்றோம்'' என்று அந்த அரசிளங் குமாரன் மணிமொழிக்கு நடந்தவற்றை எடுத்துரைத்தான்.

அப்போது இவர்களிடம் கேள்வியைத் தொடுத்துச் சிலைகளாக்கிய - கண்களில் ஒளிவீசும் கற்கள் கொண்ட - காவல் சிலை தன் கைகளை ஒருமுறை காற்றில் அசைத்தது. அடுத்த கணமே அதன் கைகளில் ஆயிரம் சூரியன் பிரகாசத்தை ஒத்த வாள் ஒன்று தோன்றியது. அந்த வாளால் உயிர்பெற்ற அரசிளம் குமாரர்கள் அத்தனை பேரையும் அந்தக் காவல் சிலை கொல்லப் போகிறதோ என்று எண்ணி மணிமொழி கலவரம் அடைந்தாள்.

[தொடரும்]




## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி அதிபர்/ஆசிரியர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா.ம.கவை வேரறுக்க தி.மு.க வியூகம்!

தேர்தலில் தி.மு.க வென்றது அக்கட்சியினருக்கு ஏகப்பட்ட குஷியை தந்துள்ளது. தி.மு.க - காங்கிரஸ் அணி தோற்கும் எனக் கூறப்பட்ட பல ஊகங்களை மீறி தி.மு.க தானும் வென்று காங்கிரஸையும் ஓரளவு வெற்றிக்கு இட்டுச் சென்றது. தி.மு.க இன்றேல் காங்கிரஸுக்கு இந்த 8 இடங்கள் கூட கிடைத்திருக்க மாட்டாது என்பது நிச்சயம். ஆனால், வடக்கே கணிசமாக காங்கிரஸ் வென்றதால் இம்முறை



ஆட்சி அமைக்க தோழமைக் கட்சிகளின் ஆதரவு பெரிதாக தேவையில்லை என்ற நிலை உள்ளது. இதனால் தி.மு.க கேட்ட அமைச்சுகள் கிடைக்கவில்லை. அத்துடன் தி.மு.க கோரிக்கை வைத்தும் தமிழகத்தில் காங்கிரஸ் தயவில் தி.மு.க ஆள்வதால் அங்கு காங்கிரஸுக்கு அமைச்சுப் பதவி கொடுக்கவேண்டும் என தமிழக காங்கிரஸார் பழைய பல்லவியைப் பாடத்தொடங்கிவிட்டனர். இது தி.மு.கவுக்கு எரிச்சல் தரும் விஷயமாகும். தமிழக சட்டசபையில் தி.மு.கவுக்கு 95 ஆசனங்களே உள்ளன. காங்கிரஸ் தயவில்லாது ஆளவேண்டுமாயின் இன்னும் 22 இடங்கள் தேவை. இதை மெதுமெதுவாக பெற்றுக்கொள்ளும் சூழ்ச்சித்திட்டம் தி.மு.கவுக்குள் தயாராகி வருகிறது. லோக்சபா தேர்தலுக்கு முன் ம.தி.மு.கவிலிருந்து கண்ணப்பனும் கம்பம் ராமகிருஷ்ணனும் விலகினர். இதனால் இவர்களின் சட்ட மன்ற உறுப்பினர் பதவி காலியானது. இந்த இருவரும் தி.மு.கவில் சேர்ந்துகொண்டனர். இவர்களின் தொகுதிகளில் இதனால் இடைத்தேர்தல் நடக்கவுள்ளது. இதில் தி.மு.கவே போட்டியிட்டு வென்றால் தி.மு.கவின் சட்டமன்ற உறுப்பினர்களின் பலம் 97 ஆக உயரும். இது தவிர தற்போது மூக்குடைபட்டுப் போயுள்ள பா.ம.கவின் 18 சட்ட மன்ற உறுப்பினர்களில் குறைந்தது 8 பேரையாவது தி.மு.கவுக்கு இழுக்கவும் வியூகம் வகுக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு நடந்தால் தி.மு.கவின் சட்ட மன்ற உறுப்பினர் பலம் 105 ஆகும். இன்னும் 12 இடங்களே தேவைப்படும். விடுதலை சிறுத்தைகளின் உறுப்பினர்கள் இருவரின் ஆதரவும் உள்ளது. ஆக காங்கிரஸ் இன்றி 107 பேர் தி.மு.கவிடம் இருப்பர். இது தவிர ம.தி.மு.கவையும் கூண்டோடு காலி செய்ய சூழ்ச்சிகள் தி.மு.க தரப்பில் தயாராகி வருகின்றன.

ம.தி.மு.க கடந்த சட்ட சபைத் தேர்தலில் 6 இடங்களில் வென்றது. திருமங்கலம் உறுப்பினர் பின்னர் காலமானார். இதனால் நடந்த இடைத்தேர்தலில் தி.மு.க வென்றது. ஐந்தாக குறைந்த ம.தி.மு.கவின் பலம் கண்ணப்பனின் கட்சி தாவலால் மேலும் இரண்டு குறைந்து இப்போது மூன்றாக உள்ளது. இந்த மூவரையும் தி.மு.கவுக்கு இழுக்க முயற்சிகள் நடந்துவருகின்றன. அதில் தி.மு.க வென்றால் மேலும் 3 உறுப்பினர்கள் கிடைப்பார்கள். காங்கிரஸுடன் உறவை முறித்தால் கம்யூனிஸ்ட்களின் ஆதரவும் கிடைக்கும். இதனால் 16 உறுப்பினர்களின் (கம்யூனிஸ்ட்) எண்ணிக்கையும் சேர்ந்து பெரும்பான்மையை எட்டி விடலாம். இவ்வாறு செய்வதன் மூலம் தமிழக காங்கிரஸ் கோரும் அமைச்சுப்பதவிகளை கொடுக்காமல் தப்பிவிடலாம்.

பா.ம.கவை வேரறுப்பது என்பது கலைஞரின் நிகழ்ச்சி நிரலில் முதலிடத்தில் உள்ளது. தோழனாக இருந்து எதிரியாக மாறிய பா.ம.கவுக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்பதில் கட்சித் தொண்டர்களும் குறியாக உள்ளனர். நடந்துமுடிந்த லோக்சபா தேர்தலில் பா.ம.க போட்டியிட்ட 7 தொகுதிகளிலும் அவர்களை தோற்கடிக்கும்படி கலைஞர் உத்தரவிட்டிருந்தார். முக்கியமாக தி.மு.கவை காட்டமாக விமர்சித்துவந்த பா.ம.க தலைவரான காடுவெட்டி குருவை வீழ்த்தியே ஆகவேண்டுமென தி.மு.க தரப்பு கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்டது. அவரது திருவண்ணாமலை தொகுதியில் தி.மு.க தரப்பில் வன்னியரான ஜெகத்ரட்சகன் களமிறக்கப்பட்டார். இதுபோல கடலூரில் பா.ம.கவை வீழ்த்தி காங்கிரஸ் வேட்பாளர் வெல்லவேண்டும் என்பதற்காக தி.மு.கவினர் உயிரைக் கொடுத்து உழைத்தனர். சிதம்பரத்திலும் பா.ம.கவை ஒழித்து திருமாவளவன் வெல்ல தி.மு.கவின் பங்களிப்பே பெரிதும் உதவியது. ஆக லோக்சபா தேர்தலில் தி.மு.க தான் வென்றபோது கிடைத்த குஷியிலும் பார்க்க பா.ம.க தோற்றதையே பெரிய வெற்றியாக கொண்டாடியது. தனக்கு மூக்குப்போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனப்பிழை வரவேண்டும் என்பதே நிலைப்பாடாக இருந்தது. ஆனால், தனக்கு வெற்றி பரமவைரிக்கு படுதோல்வி என்ற முடிவு வந்தது தி.மு.க தரப்புக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாகும். பணத்தையும் சாராயத்தையும் வாரி இறைத்துப் பெற்ற வெற்றி என்றாலும் வெற்றி வெற்றிதானே! மேலும் பா.ம.க தோற்றதால் ஜெயலலிதா கடுப்பில் உள்ளார். தேர்தல் முடிவுகளின் பின் வைகோ, கம்யூனிஸ்ட் என சகல கட்சித் தலைவர்களையும் சந்தித்துள்ள அம்மா டாக்டர் ராமதாஸை மட்டும் இன்னும் சந்திக்கவேயில்லை. அ.தி.மு.க போட்டியிட்ட சில தொகுதிகளில் பா.ம.கவினர் சரியாக உதவி செய்யவில்லை என அம்மா கோபமடைந்துள்ளார். உதாரணமாக, ஆரணி தொகுதியில் காங்கிரஸின் முன்னாள் தலைவர் கிருஷ்ணசாமி அ.தி.மு.கவை தோற்கடித்தார். இவர் ராமதாஸின் சம்பந்தி (அன்புமணியின் மாமனார்) என்பதால் பா.ம.கவினர் இவர் வெல்ல மறைமுகமாக உதவி செய்தனர் என கருதப்படுகிறது. இதுபோல பல இடங்களில் பா.ம.க தனது காலை வாரிவிட்டதே தோல்விக்கு பிரதான காரணம் என அம்மா தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளார். எனவே, வரும் இடைத்தேர்தல்களில் பா.ம.கவுக்கு இடம் கிடையாது என்பது தெளிவு. இரு தொகுதிகளிலுமே ம.தி.மு.க தான் வென்றிருந்தது என்றாலும் அம்மா இடைத்தேர்தலில் ம.தி.மு.கவுக்கு இடம் தருவாரா என்பதும் கேள்வியே. ஏனெனில், இவ்வாறு திருமங்கலத்தில் ம.தி.மு.க வேட்பாளர் இறந்து இடைத்தேர்தல் வந்தது ம.தி.மு.கவை ஒதுக்கிவிட்டு கூட்டணி சார்பாக அ.தி.மு.கவே போட்டியிட்டது. தோல்வியே கிட்டியது வேறு கதை. மேலும் லோக்சபா தேர்தலுக்கு முன் பா.ம.கவுக்கு ராஜ்யசபா எம்.பி பதவி தருவதாக அம்மா ஒப்பந்தம் செய்திருந்தார். இப்போது பா.ம.க படுதோல்வி கண்டதால் அதையும் அம்மா கொடுக்காமல் விடலாம் என்று தெரிகிறது. ஆக, ராமதாஸின் கட்சி கவலைக்கிடமான நிலையிலேயே உள்ளது. ம.தி.மு.கவின் நிலையும் கிட்டத்தட்ட இதுதான். ஆனால், ஒரு வேறுபாடு; ம.தி.மு.கவின் இன்றைய நிலைக்கு வைகோ கொள்கையை விடாது அரசியல் செய்ததே காரணம். ஆனால், பா.ம.க கொள்கையை விட்டு அரசியல் செய்ததே அக்கட்சியின் பின்னடைவுக்குக் காரணம். சூட்சுமமான அரசியலே சிறந்தது என்பது இதிலிருந்து இவர்கள் கற்கவேண்டிய பாடம். பா.ம.கவின் இன்றைய வங்குரோத்து நிலை தி.மு.கவுக்கு வாசியாக அமைந்துள்ளது. இதனைப் பயன்படுத்தி பா.ம.கவின் சட்டமன்ற உறுப்பினர்களை உடைக்கும் திட்டம் இதையொட்டியே தயாராகி வருகிறது. பா.ம.கவின் வீழ்ச்சிக்காக காத்திருந்த பல வன்னி அமைப்புகளும் தி.மு.கவுக்குப் பின்னால் அணிவகுக்கத் தொடங்கியுள்ளன. சோதனை காலத்தைத் தாண்டி கட்சியை தூக்கி நிமிர்த்த ராமதாஸால் முடியுமா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

பா.ம.க., ம.தி.மு.க என்பவற்றின் நிலை இதுவென்றால் அ.தி.மு.கவின் நிலை இதைவிட சிக்கலாக உள்ளது. ஏற்கனவே வெற்றி உற்சாகத்தில் தி.மு.கவினர் இடைத்தேர்தல் வேலைகளை தொடங்கிவிட்டனர். தேர்தல் காலத்தில் பணப்பட்டுவாடா செய்வது சட்டவிரோதம் என்பதால் லோக்சபா தேர்தலில் அவ்வாறு செய்தது சிக்கலாக மாறக்கூடிய ஏதுநிலை இருந்தது. அதனால் இப்போதே இடைத்தேர்தல் அறிவிப்பு வெளியானதுமே பணப்பட்டுவாடா தொடங்கிவிட்டதாக கூறப்படுகிறது. அ.தி.மு.கவோ தேர்தலில் விழுந்த பலமான அடியின் அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளவில்லை. அதற்கிடையில் இடைத்தேர்தல் சோதனை வேறுவந்து தொலைத்திருக்கிறது. தமிழகத்தில் இடைத்தேர்தல் என்றால் அ.தி.மு.கவோ, தி.மு.கவோ எக்கட்சி ஆட்சியிலுள்ளதோ அதுவெல்வதே எழுதப்படாத நியதி. ஆட்சி இயந்திரத்தின் முழுச் செல்வாக்கும் ஓர் இடத்தில் குவித்தால் வெற்றி வராமல் எங்கு போகும்? திருமங்கலத்தில் தி.மு.க பெற்ற வெற்றி இதையே பறை சாற்றியது. ஜெயலலிதா ம.தி.மு.கவை போட்டியிட அனுமதிப்பாரா அல்லது தன் கட்சியையே நிறுத்துவாரா என்பது தெளிவாகவில்லை. எப்படியும் தோல்விதானே என்ற மனநிலை அவரிடம் இருந்துகூட வெளிப்பட்டுள்ளது. தோல்வி பற்றி ஆராய்ந்த ஒரு கூட்டத்தில் கட்சியினர் கடுமையாக உழைக்கவில்லை என்று அம்மா குறைபட்டுக் கொண்டார். ஆனால், கட்சியை கிடுக்கிப்பிடிக்குள் வைத்திருக்கும் சசிகலா குடும்பம் பற்றி அவர் வாயே திறக்கவில்லை. கட்சியின் 5 மண்டலப் பொறுப்பாளர்களும் சசிகலாவின் உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வேட்பாளர் தேர்வில் இவர்கள் வைத்ததே சட்டமாக இருந்தது. பாதித் தோல்விக்கு இதுவே காரணமென கட்சியினர் புலம்புகின்றனர்.

விஜயகாந்த் கட்சியை பொறுத்தவரை எந்தத் தொகுதியிலும் வெல்லாதபோதும் 2006 சட்ட சபைத்தேர்தலுடன் ஒப்பிட கட்சியின்



வாக்கு வங்கி 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்ந்துள்ளது. 5 தொகுதிகளில் கட்சி 2 இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளை பெற்றது. குறைந்தது 12 தொகுதிகளில் அவர் அ.தி.மு.க அணியின் வெற்றியை தோல்வியாக மாற்றினார். மேலும் 3 தொகுதிகளில் தி.மு.க அணியின் வெற்றியைக் கூட அவர் பாதித்தார். விருதுநகரில் வைகோ தோற்க தே.மு.தி.க பெற்ற 12 சதவீத வாக்குகளும் ஒரு காரணமே. இயலாக்கட்டத்தில் அம்மா விஜயகாந்திடம் சரணடை யலாம் என்றும் கூறப்படுகிறது. அவருடன் இணைந்தாலாவது தி.மு.கவின் வெற்றிபயணத்துக்கு சிறு தடை போடலாம். இல்லாவிடின் இன்னும் சில காலம் அம்மா தோல்விகளையே தொடர்ந்து சந்திக்க நேரும்.★

- எஸ்.சுரேந்திரஜித் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வருடங்கள் 20 தாண்டியும் அகதிகளாகவே அலைந்து திரிகின்ற வலி.வடக்கு மக்களின் ஏக்கங்கள்!!

யாழ்ப்பாணத்தின் பொன்கொழிக்கும் பூமியாக விளங்கியது வலி.வடக்குப் பகுதியாகும். இப்பிரதேசம் இயற்கையாகவே வளம் மிகுந்தது. செந்நிறமான மண்ணும், பசுமைப் போர்வை போன்ற மரங்களும், எந்நேரமும் அலைசுமக்கும் கடலும் வலி.வடக்குப்பகுதியை அழகுபடுத்தி நின்றன. வெற்றிலையும், வெங்காயமும், இராசவெள்ளிக்கிழங்கும், கறுத்தக் கொழும்பான் மாம்பழமும், புகையிலையும், குலைகுலையாய் காய்த்துத் தொங்கும் திராட்சைப் பழங்களும் வலி.வடக்கின் தனித்துவமான பண்டங்களாக பிற பிரதேசங்களில் மாறியிருந்தன. அத்தோடு யாழ்ப்பாணத்துக்கு தொழில்வாய்ப்பை அதிகளவில் ஏற்படுத்தித் தந்த காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையும் வலி.வடக்கில்தான் அமைந்திருந்தது.

இங்கு வாழ்ந்தவர்களில் 60 வீதமானோர் விவசாயிகள். ஏனையோரிலும் 20 வீதமானோர் பகுதிநேரமாக விவசாயத்தில் ஈடுபட்டு வந்தனர். வலி.வடக்கில்-செம்பாட்டு மண்ணில்-எதைப்போட்டாலும் செழித்து வளருவதால் பணம் காய்க்கும் தொழிலாக விவசாயம் விளங்கியது. அத்தோடு கூடிவாழும் பண்பு வலி.வடக்கு மக்களிடம் மிகுந்திருந்தது.

மயிலிட்டி தொடக்கம் மாதகல் வரையிலான கடற்பரப்பில் வகைதொகையின்றி மீன்களும், இறால்களும், நண்டுகளும், கணவாய்களும், சிங்க இறால்களும் போன்ற கடல் உணவுகள் பிடிக்கப்பட்டன. இலங்கை மக்களின் மொத்தக் கடலுணவுத் தேவையில் 30 வீதமான கடல் உணவினை வலி.வடக்கு கடற்றொழிலாளர்கள் பூர்த்தி செய்தனர். வலி.வடக்குக் கடற்பகுதியில் பிடிக்கப்பட்ட மீன்களை ஏற்றிய லொறிகள் மாலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு அடுத்தநாள் விடியற்காலை கொழும்பு மீன்சந்தையை அடைவதுண்டு. நிலவளம், கடல்வளம் என்று எல்லாவகையிலும் தன்னிறைவு பெற்றதாக வலி.வடக்குப் பிரதேசம் விளங்கியது. ஆயினும் எல்லாமே திருஷ்டிபட்டதுபோல கலைந்து போயிற்று. போரின் ஊழித்தாண்டவத்தில் வலி.வடக்குப் பிரதேச மக்கள் 1989 ஆம் ஆண்டு தமது பரம்பரை நிலங்களை இழந்து வெளியேறி அகதிகளாக அலையும் வாழ்வுக்குள் தள்ளப்பட்டனர். இருபது வருடங்கள் உருண்டோடிய பின்னரும் தமது சொந்த நிலங்களில் குடியேற முடியாதவர்களாய் இன்னமும் இவர்கள் அகதிமுகாம்களிலும், வாடகை வீடுகளிலும் தங்கியிருந்து ஏக்கப் பெருமூச்சு விடுகின்றனர். இப்படி இருபது வருடங்களாக அகதிவாழ்வில் உழல்கின்ற வலி.வடக்கு மக்கள் சிலரின் ஏக்கங்களையும் சொந்த நிலத்துக்கு மீண்டும் செல்ல வேண்டும் என்ற அவர்களின் ஆசைகளையும் இங்கே வாசித்துப் பாருங்கள்.

**20 வருடங்களின் இடம்பெயர் வாழ்வும் இடையறா இன்னலும் 1**



## சு.பரமநாதன்

(சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுப் பிரதிநிதி)

வலி.வடக்குப் பகுதி 58.65 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட பரந்த பிரதேசமாகும். அந்த மண்ணில் வீசுகின்ற காற்றுக்கூட இதமாகத் தான் இருக்கும். எனக்கு பூங்கன்றுகள் மீது இயல்பாகவே ஆர்வம் அதிகம். அதனால் எனது வீட்டைச் சுற்றிலும் விதவிதமான பூஞ்செடிகளை நட்டு வைத்திருந்தேன். பூந்தோட்டத்தின் நடுவே பொட்டு வைத்ததுபோல எனது வீடு அமைந்திருந்ததால் ஊரவர் எல்லோரும் 'பூவீடு' என்றுதான் எங்களது வீட்டை அடையாளப்படுத்துவார்கள். அத்தோடு வீட்டுத்தோட்டமும் நான் செய்வதுண்டு. ஆனால் பூவீடும் நாம் வாழ்ந்த வாழ்வும் இப்போது வெறும் கனவாகி விட்டது. முன்னரெல்லாம் - வலி.வடக்கில் வசித்தபோது - குறை என்பதே இல்லாதவனாகத்தான் நான் இருந்தேன்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலும், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயமும் வரலாற்றுப் பிரசித்தி பெற்றவை. இவ்விரண்டு ஆலயங்களும் எமது வலி.வடக்குப் பிரதேசத்தில் அமைந்திருந்ததால் எங்களுக்கு ஒருவித மகிழ்வு கலந்த பெருமை இருந்தது. சிவராத்திரி, ஆடி அமாவாசை போன்ற விசேட தினங்களில் கீரிமலையை கண்கொண்டு பார்க்கமுடியாது. எங்கும் ஒரே சனக்கூட்டமாக இருக்கும். இலங்கையின் பலபாகங்களில் இருந்தும் வழிபாடு செய்யவும் பிதிர் கடன்களை நிறைவேற்றவும் கீரிமலைக்கு ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வருவார்கள். அதேபோல மாவிட்டபுரம் கோயிலும் திருவிழாக்காலங்களில் சனக்கூட்டத்தால் நிரம்பி வழியும்.


இன்றைக்கு அந்த ஆலயங்கள் எல்லாமே அநாதைகளாய் மாறிவிட்டன. விசேடதினங்களில் மட்டுமே கீரிமலைக்கும், மாவிட்டபுரத்திற்கும் மக்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். அதுவும் பலத்த சோதனைகளைக் கடந்தே ஆலயங்களை வழிபட வேண்டிய நிலையும் தோன்றியுள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து போர் காரணமாக முன்னைய காலங்களில் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தத்தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறியபோதும், வலி.வடக்கு மக்களுக்கு மட்டும் மீளக்குடியேறுதல் என்பது இன்னமும் எட்டாக்கனியான விடயமாகவே உள்ளது. 45 கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்ட வலி.வடக்குப் பகுதியில் தற்போது 12 கிராமசேவகர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுதவிர 5 கிராமசேவகர் பிரிவுகளில் மட்டுப்படுத்தப்பட்ட [illegible] மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். ஆனால் இன்னமும் [illegible] 28 கிராமசேவகர் பிரிவுகளில் வசித்த மக்கள் அகதிகளாகத்தான் உள்ளனர்.

வலி.வடக்கு மக்களுக்கு என குடாநாட்டில் 77 நலன்புரி நிலையங்கள் உள்ளன. அங்கும் சரியான வசதிகள் இல்லை. அரசு தருகின்ற நிவாரணத்தை நம்பியே இவர்களின் வாழ்க்கை ஓடுகின்றது. ஆயினும் எமக்கு நிவாரணங்கள் தேவையில்லை. எமது சொந்த இடத்தில் எம்மை வாழ அனுமதித்தாலே போதும். அதன்பின்னர் நாமே எமது வாழ்க்கையைப் பார்த்துக் கொள்வோம். ஏனெனில் அத்துணை தூரம் எமது பிரதேசம் பொருளாதார வளம்மிக்கது.

நாடோடிகள்போல நாம் அலைவதை எண்ணி தினமும் கவலைப்பட்டே வருகிறேன். எமது சொந்த நிலத்தை விட்டு இடம்பெயர்ந்ததில் இருந்து இதுவரை 9 வீடுகள் மாறிவிட்டேன். 5 இலட்சம் வரை இந்த வீடுகளின் வாடகைக்காகச் செலவளித்துள்ளேன். சொந்த வீடு இருந்தும், சொந்த நிலமிருந்தும் வாடகை வீட்டில் நான் வசித்து வருகிறேன். இது யார் குற்றம்? எனவே யுத்தம் முடிவடைந்து விட்டதாக சொல்லப்படும் நிலையில் எமக்கு எமது நிலங்களில் வாழும் வாய்ப்பினை அரசு ஏற்படுத்தித் தரவேண்டும்.

## கதிரன் ரஞ்சன்

(வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்)



நாங்கள் பரம்பரை பரம்பரையாக மயிலிட்டியில் கடற்றொழில் செய்து வந்தோம். 1990 ஆம் ஆண்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எல்லாவற்றையும் இழந்த நிலையில் மல்லாகம் நீதிவான் அகதிமுகாமில் தங்கினோம். இப்போது என்னுடைய கண்பார்வையை நான் இழந்துவிட்டேன். என்னுடைய மனைவியும் மிதிவெடியில் சிக்கி தன்னுடைய கால்களில் ஒன்றை பறிகொடுத்து விட்டார். அவருடைய கண்பார்வையும் பாதிக்கப்பட்டே உள்ளது. அரசு தரும் நிவாரணத்தையும் எமது உறவினர்கள் செய்யும் உதவியின் மூலமுமே எமது வாழ்க்கையை 'போக்காட்டி' வருகிறோம். பிறரின் கைகளை நம்பி வாழும் வாழ்க்கையை எண்ணுகையில் வேதனையாகத்தான் உள்ளது. நாங்கள் மயிலிட்டியில் இருந்தபோது எந்தக்குறையும் இல்லாமல் வாழ்ந்தோம். எப்போதும் பணம் கையில் புரண்டபடியே இருக்கும். கடலும் மீன்களை அள்ளித்தந்தபடியே இருக்கும். மயிலிட்டிக் கடல் மீன் மற்றைய கடல்மீன்களை விடவும் சுவை மிகுந்தது என்றொரு கருத்து எல்லோரிடமும் இருந்து வந்தது. அதனால் எமது பகுதியில் பிடிக்கப்படும் மீன்களுக்கு மிகுந்த கிராக்கி நிலவியது. அப்படி உயர்ந்த வாழ்வை அனுபவித்த எங்களுக்கு இப்போது அகதிமுகாம் வாழ்வே எஞ்சியுள்ளது. கடற்றொழில் செய்துவந்த நான் இப்போது வயிற்றுப் பிழைப்புக்காக தச்சு வேலைக்குப் போய் வருகிறேன். ஆயினும் தச்சு வேலையும் சீராகக் கிடைப்பதில்லை. யாராவது வேலை இருந்தால் மட்டுமே அழைத்துப் போவார்கள். என்னுடைய கண்ணும் பாதிக்கப்பட்டுள்ளதால் தச்சுவேலை செய்வதும் மிகுந்த சிரமமாகவே உள்ளது. இதனால் எனது ஐந்து பிள்ளைகளில் இப்போது கடைசி மகன் எங்களுடன்தான் தங்கியுள்ளார். அவரும் நோயாளியாகவே இருக்கின்றார்.

நேர்காணலும் படங்களும்: ஔண்யன், நேசன்

இத்தகைய அவலநிலையில் நாமிருக்க குடாநாட்டு மீனவர்களுக்கான சகல கட்டுப்பாடுகளும் நீக்கப்படுவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்நிலையில் எம்மை எமது சொந்த இடத்தில் இருப்பதற்கு அனுமதித்து முன்போல மயிலிட்டியில் மீன்பிடிக்க வசதி செய்து தந்தால் நாங்கள் சுயமாக உழைத்து முன்புபோல மகிழ்வான வாழ்வை மீண்டும் அடைய முடியும்.

# யாழ்ப்பாணத்தின் 'பொன் கொழிக்கும் பூமி' இன்று யாருமற்ற வனாந்தரமாக மாறியுள்ளது



## திருமதி ஜெயசீலன் மேனகா

(வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்)

எனக்கு இப்போது 32 வயது. என்னுடைய பன்னிரண்டாவது வயதில் எங்களுடைய ஊரை விட்டு இடம்பெயர வேண்டி வந்துவிட்டது. இடம் பெயர்வதற்கு முன்னர் சிறப்பான முறையில் கல்வி பயின்று வந்தேன். இடம்பெயர்வின் பின்னான அகதிவாழ்வு என்னுடைய கல்வியைத் தொடர முடியாதபடி செய்துவிட்டது. இப்போது திருமணமாகி மூன்று பிள்ளைகளுடன் அகதிமுகாமில் வசித்து வருகிறேன்.

பொதுவாக எல்லோருக்குமே தமது சொந்த ஊரில் வசிக்க வேண்டும் என்ற எண்ணம் வருவது இயல்புதான். நான் சிறுவயதிலேயே எனது ஊரைப்பிரிந்தாலும் என்னுடைய சொந்த இடத்துக்குச் சென்று எம்முடைய வீட்டை எம்முடைய நிலத்தைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அத்தோடு நாங்கள் அகதிகளல்ல. [illegible] சொந்தமாக வீடுவளவு எல்லாம் உண்டு என்று என்னுடைய பிள்ளைகளுக்கும் காட்டுவதற்கு விரும்புகிறேன். ஆனால் அந்த விருப்பம் எப்போது நிறைவேறும் என்பதுதான் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் முருகேசு சிவபாலன்



தோற்றம்: 11.05.1955
மறைவு: 13.06.2007
திதி: ஆனிமாத திரயோதசி (21.06.2009)

ஆண்டு இரண்டானாலும்
ஆறாது எம் துயர், நெஞ்சத்து
நீங்காதுன் நினைவுகள்!

உன் நினைவுகளுடன்...
பெற்றோர்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார்.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (86374)

# மரண அறிவித்தல்

## அப்புத்துரை முருகையா



ஏழாலை மத்தி, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை முருகையா 18.06.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் பத்மநாதன் (ஏழாலை), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), மோகனா (கனடா), ஜெகதீஸ்வரன் (சின்னப்பன் - நீர்வேலி), ரூபதீஸ்வரன் (கனடா), சுரேஸ்வரன் (கனடா), காஞ்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் றஜீலா (ஏழாலை), சுமித்திரா (பிரான்ஸ்), கமலநாதன் (கனடா), ஜெயமதி (நீர்வேலி), அனுசிதா (கனடா), கிஜிதா (கனடா), கிசாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் கிசானி, கஸ்மினி (ஏழாலை), அனித்தா, அக்சிகா, அபிநயா (பிரான்ஸ்), தர்சன், சர்மினி (கனடா), கனுஜன், கனுசிகா, கானுஜா (நீர்வேலி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மத்தி,
ஏழாலை. (86392)

தகவல்:
குடும்பத்தினர்.

## தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 21

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியர்களை நாளை திங்கட்கிழமை அல்லது மறுநாள் செவ்வாய்க்கிழமை சம்பளப்பட்டியலில் கையொப்பமிடுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்துள்ளார். (203)

## விபத்தில் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன்21

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் கச்சாயில் இடம் பெற்றது.

வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்ட வேளையில் இவ் விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ். சிவகுமார் (வயது 20) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (203- 207)

## விவசாயிகளுக்கு ஓய்வூதியஅரி ரிப்பு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்21

2009 வரவு - செலவுத் திட்டத்தில் ஏற்கனவே முன்மொழியப்பட்ட விவசாயிகள் ஓய்வூதிய அதிகரிப்பு வழங்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் உதவிசெயலாளர் அன்ரன் பெரேரா விவசாய ஓய்வூதிய சபை தலைவருக்கு இந்த விடயம் தொடர்பாக எழுதிய கடிதத்தை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் அடிப்படை ஓய்வூதியம் ஆகக்குறைந்தது 3 ஆயிரம் ரூபாவாக இருக்கவேண்டும் என்று யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளன தலைவர் க.முதலியார் ஜனாதிபதிக்கு எழுதிய அவசர கடிதத்தை தொடர்ந்தே அடிப்படை ஓய்வூதியம் ஆகக்குறைந்த அளவாக 3 ஆயிரம் வழங்குவதற்கு 2009 வரவு - செலவு திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts up to 03.07.2009.

### FACULTY OF AGRICULTURE

**Assistant Lecturer (on contract)/Demonstrator (on contract) in**

Agronomy/Agricultural Biology/ Agricultural Chemistry/ Animal Science/ Agricultral Economics/ Agricultural Engineering

Candidates awaiting the results of the final degree examination may also apply for the post of Demonstrator on contract basis.

### SPORTS SCIENCE UNIT

Visiting Lecturer/ Visiting Instructor in the following sports fields Gymnastic/Netball

| Post | Salary | Post | Rate of Payment |
|---|---|---|---|
| Assistant Lecturer | Rs.25,145/- p.m. (fixed) | Visiting Lecturer | Rs.300/- per hour |
| Demonstrator | Rs.20,755/- p.m. (fixed) | Visiting Instructor | Rs.150/- per hour |

Application forms and other details may be obtained from the office the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, SriLanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by posts are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with **a self- addressed stamped envelope** 23x10 c.m. in size.

Applicants from the University System /Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Instituitions. Applications received after the closing date will be rejected without intimation. Only those applicants who possess the qualications and experience for consideration will be called for an interview.

**REGISTRAR.**
2009.06.19 (C/5599103)





றிச்சார்ட் அப்பியாசப் புத்தகங்கள் - 500க்கும் மேற்பட்ட டிசைன்களில்!
டிஸ்னி றிச்சார்ட் அப்பியாசப் புத்தகங்கள் - 400க்கும் மேற்பட்ட டிசைன்களில்!
றிச்சார்ட் வரைதல் புத்தகங்கள் - 200க்கும் மேற்பட்ட டிசைன்களில்!
றிச்சார்ட் CR புத்தகங்கள் - 500க்கும் மேற்பட்ட டிசைன்களில்!
றிச்சார்ட் விஞ்ஞானக் கொப்பிகள்
தமிழ் பிரதி எழுத்துக் கொப்பிகள்
றிச்சார்ட் பென்சில்கள், அழிறப்பர்கள், ரிப்பெக்ஸ், நிறப் பென்சில்கள்,
உலகத் தரம் வாய்ந்த வர்ணக் கட்டிகள் (சோக்குகள்)
இறக்குமதி செய்யப்பட்ட ஆங்கிலப் பாடப் புத்தகங்கள்

Richard
Quality Stationery

றிச்சாட் டிரேடிங் கம்பனி (பிறைவேற்) லிமிற்றெட்
இல.64, பெரக்கும்பா வீதி, குருநாகல்.
தொ.பே.இல.: 037 - 2222547, 33298-9
037 4690701 richard123@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## முதன்மை பெறவேண்டிய மற்றிரண்டும்.....

குடாநாட்டின் கடற்பிரதேசத்தில் தொழில் செய்வதற்கு காலத்துக்குக்காலம் விதிக்கப்பட்டு வந்த தடைகள் யாவும் நேற்றோடு நீக்கப்பட்டு விட்டன. குன்றிப்போயிருந்த குடாநாட்டு மீனவர்களின் ஜீவனோபாயம் மீண்டும் துளிர்ப்பதற்கும், இப்பிரதேசத்தின் கடல்வளம் அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உயிர்ப்பூட்டவும் அரசாங்கம் வகை செய்திருக்கிறது. இந்தப் பிரதேசத்தின் ஒட்டு மொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு வலுச்சேர்க்கக்கூடிய ஓர் அத்தியாயம் திறக்கப்பட்டிருக்கிறது.

இதேபோன்று, தெற்கிலிருந்து அத்தியாவசிய மற்றும் பாவனைப் பொருள்களை ஏ-9 பாதையூடாகக் கொண்டுவரவும், குடாநாட்டின் உற்பத்திகளை இங்கிருந்து அங்கே எடுத்துச் செல்லவும் வாகனப் போக்குவரத்தும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று குடாநாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்திசெய்யவும், இப்பிரதேசத்தின் உட்கட்டுமானப் பணிகளைத் தூக்கிநிறுத்தவும் தான் துரிதமாகச் செயற்படப் போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. குடாநாட்டு மக்களுக்கு மட்டுமன்றி வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களுக்குமான மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கென, விசேட செயலணிக் குழுவை நிறுவியுள்ளார் ஜனாதிபதி.

வடமாகாணத்தின் அபிவிருத்தியிலும், மக்களின் வாழ்க்கை நிலையிலும் முறையே வளர்ச்சியும் முன்னேற்றமும் தேவை. அவற்றை முன்னுரிமை கொடுத்து செயற்படுத்துவதற்கு அரசு முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. தமிழ் மக்கள் மீது அரசு இந்தளவு கரிசனையைக் காட்டுவது பாராட்டப்பட வேண்டியதே.

எனினும் -

அரசாங்கத்தின் இப்போதைய துரிதசெயற்பாடும் குடாநாட்டு மக்கள் மீதான அக்கறையும் வவுனியா முகாம்களில் உள்ள தமது இரத்த உறவுகளின் நிலையால் உண்டாகியுள்ள சோகத்தையும் மன விரக்தியையும் போக்கிவிடாது. அவர்களை முகாம்களிலிருந்து விடுவித்துச் சொந்த இடங்களில் விரைந்து வாழ வைப்பதிலும் இயல்பு நிலையை உருவாக்குவதிலும் மனிதாபிமானத்துடன் கூடிய வேகம்தேவை.

குடாநாட்டில் வாழும் அவர்தம் இரத்தத்தின் இரத்தங்கள், குடும்ப உறவுகள் மனதுக்குள் அழுது கொண்டிருக்கும் சோகத்தை நீக்குவதற்கு வன்னிமக்கள்படும் இன்னல்களைப் போக்கி, அர்த்தமுள்ள புதுவாழ்வு வழங்குவதற்கு அரசு இதய சுத்தியுடனும் நேர்மையுடனும் உகந்த நடவடிக்கைகளை உடன் மேற்கொள்வதும் முதன்மை பெறவேண்டிய ஒன்றாகும்.

இன்னொரு புறத்தில் -

தமிழ் மக்கள் தங்களுக்குரிய சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான, தாமும் இந்நாட்டு மக்கள் என்று மனம் நிறைந்து சமபிரஜைகளாக வாழ்கிறோம் என்ற உணர்வை, திருப்தி நிலையை எட்டிக் கொள்வதற்கான நம்பிக்கை தரும் ஏற்பாடுகளைக் காணோம். அதற்கு வழங்கப்படவேண்டிய முன்னுரிமையை முடக்கிவிட்டு, ஒதுக்கிவிட்டு அரசாங்கம் வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் என்ற துரித செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் சஞ்சலத்தையும், சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது.

வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கை நிலையை, பொருளாதார மீட்சியை துடிதுடிப்புடன் செய்வது போன்று, அரசியல் தீர்வு முயற்சியிலும் தீவிரமாக, வேகமாகச் செயற்படுவதற்கான சமிக்ஞை எதனையும் காணோம் என்ற ஏக்கம் தமிழர் மனங்களை வாட்டுகிறது.

அந்தத் திசையில் அசமந்தமாக இருந்து கொண்டு, காலத்தைக் கடத்திக்கொண்டு, வடக்கு மக்களின் வாழ்வாதாரங்களைப் பெருக்கவும், உட்கட்டுமான வளர்ச்சிக்கு உயிரூட்டவும் செயற்படுவது நிரை ஒழுங்குமாறி, முதன்மைபெற வேண்டியதை ஒளித்துக்கொண்டு காலம் கடத்தும் உத்தியோ என்று தமிழ் மக்களை சந்தேகம் கொள்ள வைப்பது தவிர்க்க முடியாததே; இயல்பே.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய, அவர்களும் பூரண சுதந்திரமுள்ள மனிதர்களாக வாழ்வதற்கு வகை செய்யும் தீர்வு ஒன்றை முன்வைக்க ஏன் அரசு மனதார முனையக்கூடாது?

வரலாற்றுக் காலந்தொட்டு தங்கள் மண்ணில் வாழ்ந்துவரும் பூர்வீகத்தைக் கொண்டுள்ள தமிழ் மக்கள், தங்களைத் தாங்களே ஆள்பவர்களாகவும் தாமும் இந்நாட்டுப் பிரஜைகள் என்று உணர்பவர்களாகவும் ஒன்றுபட்டு வாழ்வதற்கு வழிசெய்யக்கூடிய அரசியல் முறைமைகள் - சுயநிர்ணயம் சார்ந்த முறைகளை - தாராள மனதுடன் செயற்படுத்துவது குறித்து அரசு சிந்திக்கக்கூடாதா?

# போர் நிறைவடைந்து விட்டதாக அரசு தெரிவித்துள்ளபோதும் இடம்பெயர்ந்த மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவில்லை

## ஐ.நா.மனிதாபிமான இணைப்பாளர் ஜோன் ஹோம்ஸ் தெரிவிப்பு

ஜெனீவா, ஜூன் 21

போரினால் இடம்பெயர்ந்த மக்களை இயல்பு வாழ்க்கைக்கு அனுமதிப்பதன் மூலமே வடக்கு - கிழக்கில் உள்ள பதற்றத்தைத் தணிக்க முடியும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானவிவகாரங்களுக்கானஇணைப்பாளர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மே மாதம் போர் நிறைவடைந்து விட்டதாக சிறிலங்கா அரசு தெரிவித்திருந்த போதும் போரினால் இடம்பெயர்ந்த 2 லட்சத்து 80 ஆயிரம் மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவில்லை. அவர்களை இயல்பு வாழ்க்கைக்கு அனுமதிப்பதன் மூலமே வடக்கு - கிழக்கில் உள்ள பதற்றத்தைத் தணிக்க முடியும்.

உதவிப்பொருள்களைக் கொண்டு செல்லும் வாகனங்களை அரசு முகாமுக்குள் அனுமதிக்கின்றது. ஆனால் முகாம்களுக்கு செல்லும் முழு சுதந்திரமும் எமக்கு வழங்கப்பட வேண்டும்.

அங்கு இடநெருக்கடி, குடிதண்ணீர் பற்றாக்குறை போன்ற பல நெருக்கடிகள் உள்ளன. பருவமழை தொடங்கினால் அங்கு தொற்று நோய்கள் அதிகரிக்கலாம். முகாம்களின் தரம் கவலை தருகின்றது. அங்குள்ள மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவ தில்லை.

இது தொடர்பாக ஐ.நா.வின் அதிகாரிகள் சிறிலங்கா அரசுடன் மிகவும் காத்திரமான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர் - என்றார் அவர்.

(50)

### செட்டிகுளம் நலன்புரி முகாமில் வசித்துவரும்

## 10 வயதுச் சிறுமியின் உடலிலிருந்து துப்பாக்கிக் குண்டு அகற்றப்பட்டது

செட்டிகுளம் நலன்புரி முகாம் தற்காலிக மருத்துவமனையில் பணியாற்றும் இந்திய மருத்துவர்கள், அங்கு தங்கியுள்ள சிறுமி ரிகானா வின் (வயது 10) உடலில் பாய்ந்திருந்த துப்பாக்கி குண்டை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றியுள்ளனர்.

இச்சிறுமி கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக உடலில் பாய்ந்திருந்த குண்டுடன் பெரும் அவதிப்பட்டு வந்தார். போர் ஏற்படுத்தும் வேதனைக்கும், வலிக்கும் இது ஒரு சிறிய உதாரணம்தான் என்று அங்கு மீட்புப் பணி மேற்கொண்டு வருபவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறுமிக்கு மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை குறித்து இந்திய மருத்துவர் வசந்த் ஹரிக்குமார் கூறியதாவது:

சிறுமியின் முதுகெலும்புக்கும் மார்புக்கும் இடைப்பட்ட பகுதியில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்திருந்தது. செட்டிகுளத்தில் இந்திய மருத்துவக் குழு சார்பில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக மருத்துவமனையில் அவருக்கு அறுவை சிகிச்சை செய்து குண்டு அகற்றப்பட்டது. தற்போது ரிகானா நலமுடன் இருக்கிறார். இவரைப் போல உடலில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்திருந்த பலருக்கு அறுவைச் சிகிச்சை மூலம் குண்டுகள் அகற்றப்பட்டுள்ளன. மேலும் பலருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இதுவரை சுமார் 3,500 பேருக்கு சிகிச்சை அளித்துள்ளோம். தற்போது எங்கள் மருத்துவமனை மூலம் தினந்தோறும் 600 பேருக்கு மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது - என்றார்.

இலங்கையில் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர் சிறுமி ரிகானா. கடந்த மே 15ஆம் திகதி அப்பகுதியில் இருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்ற போது அவரது உடலில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது என்று அவரது தாயார் தெரிவித்துள்ளார்.

(50)

## வவுனியா சிவன்கோயில் முதியோர் இல்லத்தில் ஒரு மாதத்தில் மட்டும் 25 பேர் மரணம்

கொழும்பு, ஜூன் 21

இடம் பெயர்ந்து வந்து வவுனியா செட்டிகுளம் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங்களைச் சேர்ந்த முதியவர்களில் 157 பேர் வவுனியா கோவில்குளம் சிவன் கோயில் முதியோர் இல்லத்தில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும், ஒரு மாத காலத்தில் இவர்களில் 25 பேர் மரணமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் 2 பேர் மேலதிக சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய 130 பேரில் 76 பேர் ஆண்கள் என்றும் 54 பேர் பெண்கள் என்றும் கோவில்குளம் சிவன்கோயில் அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். இவர்களில் 29 பேர் படுத்த படுக்கையாக இருப்பதாகவும், இவர்கள் தொண்டர்கள் மற்றும் பணியாளர்களின் மூலம் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தினால் இடம் ஒதுக்கித் தரப்பட்டுள்ள சமளங்குளம் பாடசாலை கட்டிடத்திலேயே இந்த முதியோர் இல்லம் தற்போது தற்காலிகமாக இயங்கி வருகின்றது. வவுனியா எல்லப்பர் மருதங்குளத்தில் கோயிலுக்குச் சொந்தமான காணியில் சகல வசதிகளுடனும் கூடியதாகப் புதிய முதியோர் இல்லம் அமைக்கப்பட்டு வருவதாக சிவன் கோயில் அறங்காவலர் சபையின் செயலாளர் ஆறுமுகம் நவரட்ணராஜா தெரிவித்துள்ளார். (50)

## குறிகாட்டுவான் - நயினை 'பாதை' சேவை; விரைவில் ஆரம்பிக்கக் கோரிக்கை

குறிகாட்டுவான் - நயினாதீவுக்கிடையில் 'பாதை' சேவையை விரைவில் ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இந்தச் சேவையை துரிதமாக்க யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த வழித்தடத்தில் தற்சமயம் தனியாருக்குச் சொந்தமான படகுகள் சேவையில் உள்ளன எனினும் பொதுமக்கள் இந்த வழித்தடத்தில் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்வதாக ஏற்கனவே கூறப்பட்டு வந்தது.

முன்னதாகவே பாதைச் சேவையை நடத்த முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டன.

அது நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் மீண்டும் இந்தச் சேவையை ஆரம்பிக்க வேண்டும் என நயினாதீவு மக்கள் கோருகின்றனர்.

மூதூரில் உள்ள பாதைகளில் ஒன்றை விரைவில் இங்கு தருவித்து சேவையை ஆரம்பிக்குமாறும் குறிப்பாக நயினை அம்பாள் ஆலய உற்சவம் முடிவடை வதற்கு முன்னதாக பாதைச் சேவையை ஆரம்பிக்கக் கூடியதாக வேலணை பிர தேச செயலர் மு.நந்தகோபாலன் யாழ். அரச அதிபரின் உதவியை நாட வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய திருவிழா தொடர்பாக யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. (203-111)

### சமய சந்நிதிகளில்

அச்சுவேலி தெற்கு, நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும்.

நாளை திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழா இடம்பெறும். (204-11)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 21

கோப்பாய் தெற்கு தனிப்பனை வீரபத்திரர் ஆலய வருடாந்த பெருந் திருவிழா நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 27ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் மறுநாள் 28 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 29 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

### நாளை

| | |
|---|---|
| ஆனி 08 | 22.06.2009 திங்கட்கிழமை |
| திதி: | அமாவாசை பி.இ.02.14வரை |
| நட்சத்திரம்: | மிருகசீரிடம் பி.இ.12.59 வரை |
| அமாவாசை விரதம் | |
| சுபநேரம்: | 11.54 - 01.24 |
| ராகுகாலம்: | 07.24 - 08.54 |

## ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது இந்துக்கோயில்கள் எதுவும் இருக்கவில்லை

1658ஆம் ஆண்டு ஜூன் 22, 23 ஆம் திகதிகளில் போர்த்துக்கீசரின் ஆட்சியின் கீழ் இருந்த யாழ்ப்பாணம் ஒல்லாந்தரிடம் வீழ்ச்சியுற்றது.

1617ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் 1658ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தனர். 1658ஆம் ஆண்டு ஜூன் 22ஆம் திகதி ஒல்லாந்தர் போத்துக்கேயரிடமிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். மூன்று மாத முற்றுகையின் பின் போர்த்துக்கேயரின் பலம் வாய்ந்த கோட்டையாகக் கருதப்பட்ட யாழ்ப்பாணம் (யாழ்ப்பாணக் கோட்டை உட்பட) ஒல்லாந்தரிடம் வீழ்ச்சியுற்றது.

### போர்த்துக்கேயர் அனைத்தையும் இடித்துத் தள்ளியிருந்தனர்

யாழ்ப்பாணத்திலிருந்த போர்த்துக்கீசர் அனைவரும் ஒல்லாந்தரிடம் சரணடைந்தனர்.

புதுமை மாதா தேவாலயமுன்றலில் (Our Lady Miracle) பப்டிஸ்ட் (Baptist) பாதிரியார் பிலிப் பால்டியஸ் தலைமையில் வெற்றி விழாவும் நன்றி செலுத்தும் ஆராதனையும் இடம்பெற்றது.

### இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே....!

நாற்பது தொடக்கம் ஐம்பது வரையிலான கத்தோலிக்க குருமார், யேசு சபையினர், டொமினிக்கன் சபையினர், பிரான்சிஸ்கன் சபையினர் அனைவரும் ஒல்லாந்தரிடம் சரணடைந்தனர்.

வலிகாமத்திலிருந்த பதின்நான்கு தேவாலயங்களும், தென்மராட்சியிலிருந்த ஐந்து தேவாலயங்களும், பச்சிலைப்பள்ளியிலிருந்த மூன்று தேவாலயங்களும், தீவுப்பகுதியிலிருந்த தேவாலயங்களும், யாழ்ப்பாணக் கோட்டையினுள்ளிருந்த சிலுவை வடிவிலான தேவாலயமும் ஒல்லாந்தர் வசமாகின.

ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது யாழ்ப்பாணத்தில் இந்து ஆலயங்களெதுவும் இருக்கவில்லை. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் செய்த முதற் காரியம் யாழ்ப்பாணத்திலிருந்த இந்து ஆலயங்களனைத்தையும் இடித்துத்தள்ளியதுதான். தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள இந்து ஆலயங்கள் அனைத்தும் ஒல்லாந்தர் காலத்தின் பிற்பகுதியிலும் (1790இன் பின்னர்) அதற்குப் பின்னரும் கட்டப்பட்டவையே.

தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைகள் நீக்கப்பட்டதன் பின்னர் குடாக்கடலில் இரவு நேரத் தொழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

குடாநாட்டின் கடற்பிரதேசத்தில் மீன் பிடித்தடைகள் நேற்று முதல் நீக்கப்பட்ட தாக அறிவிக்கப்பட்டதையடுத்து குடாக் கடலில் நேற்று இரவு நேர மீன் பிடித்தொழில் இடம் பெற்றது.

நேற்று அதிகாலை 4 மணி முதல் இந்தத் தடைகள் நீக்கப்பட்டதாக படையினர் அறிவித்ததை அடுத்து குருநகர் பகுதி மீன வர்கள் அதிகாலை கடலுக்குச் சென்று மாலை திரும்பினார்கள்.

மீண்டும் நேற்று மாலை 6 மணிக்கு புறப்பட்ட மீனவர்கள் இன்று காலை கரை திரும்புவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நேற்று இரவு நேர தொழிலுக்கு மீனவர்கள் சென்றுள்ளனர்.

வடமராட்சியில்

அதே வேளை:-

வடமராட்சியைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று வழமை போன்று பகல் நேரத்தில் கட்டு மரத் தில் தொழிலுக்குச் சென்றனர்.

அவர்களிடம் ஆழ்கடல் தொழிலுக்கான படகு, வெளியிணைப்பு இயந்திரங்கள், கடற்றொழில் உபகரணங்கள் தயார் நிலை யில் இல்லாத காரணத்தால் நேற்று தொழி லுக்குச் செல்லவில்லை என்று தெரிவிக் கப்பட்டது.

தமது படகுகள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்களை சீராக்கும் பணியில் அவர் கள் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

பெரும்பாலும் நாளை முதல் அவர்கள் ஆழ்கடல் தொழிலில் ஈடுபடுவர் என எதிர் பார்க்கப்படுகின்றது. (அ-1-236)

# இடம்பெயர்ந்தோர் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசுவதற்கு கூட்டமைப்பினர் விருப்பம்

யாழ்பாணம், ஜூன் 21

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து வவுனியாவில் முகாம்களில் தங்கி யுள்ள மக்கள் தொடர்பாகவும் அவர்களின் மீள் குடியமர்வு சம்பந்தமாகவும் ஜனாதிப தியுடன் பேச்சு நடத்துவதற்கு விரும்பம் கொண்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு அறிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து கூட்டமைப்பின் தலைவர் இராசம்பந்தன் நாடு திரும்பிய பின்னர் இது தொடர்பாக ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்புவதென்றும் அது தொடர்பாக சந்தித்துப் பேச வேண்டிய தேவை ஏற்பட்டால் அவரைச் சந்தித்துப் பேசத் தயாராக இருப்பதாகவும் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இப்போது உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான பணிகள் முன்னெடுக்கப்படு வதால், எதிர்வரும் 26ஆம் திகதிக்குப் பின் னர் கூடி இது தொடர்பான முடிவு எடுக் கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்தியா சென்றிருந்த இரா.சம்பந்தன் நேற்றுக் கொழும்பு திரும்பியுள்ளார். (அ-1)

## வணங்காமண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகத்துக்கு அப்பால் தரித்து நிற்கிறது.

அந்த உதவிப் பொருள்கள் வன்னி அகதிகளுக்குக் கிடைக்க இந்திய மத்திய அரசு தலையிட்டு உதவ வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி முன்னர் கேட்டிருந்தார்.

அது தொடர்பான கடிதத்தை மாநில அமைச்சர் பொன்முடி நேற்று வெளியுறவு அமைச்சரிடம் கையளித்திருந்தார்.

இதேவேளை -

மத்திய அரசின் அனுமதி கிடைக்காததால், நிவாரணக் கப்பல் சென்னைத் துறை முகத் திற்குள் நுழைய முடியவில்லை. சென்னைத் துறைமுகத்திலிருந்து 18 கடல் மைல்களுக்கு அப்பால் தரித்து நிற்கிறது நிவாரணக் கப்பல். இன்னும் சர்வதேச எல்லையில் தான் நிற்கிறது. மத்திய அரசின் அனுமதிக்காக காத்திருக் கிறது. சென்னை துறைமுகத்திற்குள் வர வில்லை. எனினும் ஏதேனும் உதவிகள் கேட் டால் செய்து கொடுக்க துறைமுகம் தயாரா கவே உள்ளது என்று சென்னைத் துறைமுக அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

**இரு பணியாளர்களுக்கு சுகயீனம்**

நிவாரண உதவிப் பொருள்கள் ஏற்றிக் கொண்டு வந்த 'கப்டன் அலி' கப்பலின் பணியாளர்கள் இருவர் நோய்வாய்ப்பட் டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மனித அமைப்பின் நிறைவேற்றுப் பணிப் பாளரான அக்கினி சுப்பிரமணியம் இது குறித் துத் தெரிவிக்கையில், இந்தக் கப்பலில் உள்ள 13 ஊழியர்களில் ஐஸ் லாந்து, சிரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த இருவர் சுகயீனமுற்றுள்ள தாகவும் அவர்கள் சென்னை ஊடாக தமது நாடுகளுக்குச் செல்லவிரும்புவதாகக் கூறினார். இந்தக் கப்பலில் தற்போது குடி தண்ணீருக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டார். கப்பலில் உள்ளோருக்கு உடனடி உதவிகள் கிடைக்காவிடில் மற் றும் ஊழியர்களும் நோய்வாய்ப்படும் சாத் தியம் உண்டு எனவும் தெரிவித்தார்.

லண்டனை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் வன்னி வணங்காமண் அலுவ லக இணைப்பாளர் அர்ஜுன் எதிர்வீரசிங் கம் தெரிவிக்கையில், தமது கப்பலிலுள்ள நிவாரணப் பொருள்களைச் சென்னைத் துறை முகத்தில் இறக்குவதற்கான அனுதிக்காக காத்திருப்பதாக குறிப்பிட்டார்.

'கப்டன் அலி' (வணங்காமண்) கப் பல் 884 மெற்றிக் தொன் உணவு, மருந்து மற் றும் நிவாரணப் பொருள்களுடன் கடந்த ஏப்ரல் மாதம் லண்டனில் உள்ள 'இப்விச்' துறைமுகத்திலிருந்து புறப்பட்டது-

பிரான்ஸை சென்ற டைந்து அங்கிருந் தும் உதவிப் பொருள் களைஏற்றிக்கொண்டு மே மாதம் 7ஆம் திகதி 'பொஸ் சூர் - மேந்' துறைமுகத்தி லிருந்து புறப்பட்டு -

கொழும்புத் துறைமுகத்துக்கு அப்பால் சர்வதேச கடல் எல்லைக்குள் பாணந்துறைக் கட லில் ஜூன் மாதம் 4 ஆம் திகதி தொடக் கம் 8 ஆம் திகதி வரை காத்திருந்து இலங்கைஅரசு அனு மதி மறுத்ததால் இப் போது சென்னைத் துறைமுகத்துக்கு அப்பால் சர்வதே சக் கடலில் வந்து தரித்து நிற்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழ்.மாநகர ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை யாழ்ப்பாணம் வந்து வேட்பு மனுத் தாக்கல் செய்ய விருப்பதாக தேர்தல் ஆணை யாளருக்கு அறிவித்துள்ளார்.

யாழ்.தேர்தல் திணைக்கள தெரிவத் தாட்சி அதிகாரியிடம் வேட்புமனுக்களை தாம் தாக்கல் செய்யவிருப்பதாகவும் -

அதன் பின்னர் மக்கள் தலைவர்கள், சமயத்தலைவர்கள், அரச தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து அப் பிரதேசத்தின் நடைமுறை நிலைமைகள் குறித்து கலந்து ரையாடவிருப்பதாகவும் - டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

நாளை மறுதினம் வவுனியாவுக்கு சென்று வவுனியா நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களின் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்ய உள்ளதாக டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா ''உதயனுக்குத்'' தெரி வித்தார். (அ-1)

## ஏ-9 வீதியினூடாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புப் படையினரின் வழித்துணை யுடன் இடம்பெறவுள்ளது.

பொதுமக்கள் வாகன அணியில் எத்தனை பேர் பயணம் செய்யலாம். எந்த வகையில் பயணத்தை மேற்கொள்ள பதிவுகளை மேற்கொள்ளலாம் என்ற விவரங்கள் வெளி யாகவில்லை. விரைவில் அவை உத்தியோக பூர்வமாக வெளியிடப்படும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி யாழ். நூலகத்தில் நடந்த வடக்கின் மீள் குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்குமான செயலணியின் விசேட கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராசா, படை யினரின் வழித்துணையுடன் பொதுமக்க ளின் வாகன அணி செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அதற்குப் பதில் அளித்த செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ இதற்கான நட வடிக்கைகளை எடுப்பதாக உறுதி அளித் திருந்தார். (அ-1)

## ஐ.நா. அதிகாரிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தடுத்துவைக்கப்பட்டுள்ள அந்த ஊழி யர்கள் மீது எவ்விதமான குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படவில்லை. எதற்காக அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்பது தொடர்பில் எங்களிடம் விவரம் இல்லை என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-1)

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைத்தொடர்பு சீராக்கும் குழுவின் தலைவர் பிரியந்த காரியவாசம் இத் தகவல் களை வெளியிட்டுள்ளார்.

வடபிராந்தியத்துக்கான தொலைபேசிச் சேவையை சீராக மேற்கொள்ள வசதியாக இந்தக் கோபுரம், ரூபவாஹனி கூட்டுத்தா பனத்தின் கோபுரம் அமைந்திருந்த கொக் காவில் பகுதியில் அமைக்கப்படும்.

இந்தக் கோபுரத்தின் மூலம் தொலை பேசி வசதிகளை ஏற்படுத்துவதுடன் தொலைக் காட்சிச் சேவை பரிமாற்றத் துக்கும் பயன் படுத்தப்படும்.

இந்தக் கோபுரத்துடன் கிளிநொச்சி, மன்னார்,பளை ஆகிய இடங்களில் சிறிய தொலைத் தொடர்புக் கோபுரங்கள் அமைக் கப்படும் - என்றார். (1)

## குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இரவு ஊரடங்கு நேரத்தை எப்போதி ருந்து குறைப்பது என்பது குறித்து இராணு வத்தினர் முடிவு செய்து அறிவிக்கவுள்ளனர்.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி, யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், வலி காமம் பிராந்திய படை அதிகாரி, யாழ். அரச அதிபர் ஆகியோர் நேற்றைய கலந்துரை யாடலில் பங்குபற்றினர்.

ஸ்ரான்லி வீதி, யாழ். பொலிஸ் நிலை யத்துக்கு முன்பாக உள்ள மணிக்கூட்டுக் கோபுர வீதி, ஊர்காவற்றுறை பொலிஸ் நிலை யத்துக்கு முன்பாக உள்ள வீதி உட்பட சில முக்கிய வீதிகளை பொதுமக்களின் பாவ னைக்காகத் திறப்பதென கலந்துரையாட லில் முடிவு செய்யப்பட்டது.

ஊரடங்குச் சட்டத்தை முற்றாக அகற் வது தொடர்பில் இணக்கப்பாடு காணப் பட்ட போதிலும் நிலவக் கூடிய சமூகச்சீர் கேடுகளை கருத்தில் கொண்டு விழிப்புக்கு ழுக்கள் பரவலாக உருவாக்கப்படுதல் மற் றும் தமிழ்ப் பொலிஸாரை காவல்துறை யில் இணைத்துக் கொள்ளல் போன்ற சிவில் நிர்வாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் வரை தற்போதைக்கு இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை ஊரடங்குச் சட் டத்தை அமுல் படுத் துவதெனத் தீர் மானிக்கப்பட்டது.

யாழ்மாவட்டத்துக் குள் இடம்பெயர்ந் துள்ள மக்களை மீள்குடியேற்றம் செய்வது தொடர் பில் திட்ட வரை பொன்று உருவாக் கப்பட்டுநடவடிக்கை மேற்கொள்ளப்படுமெ னத் தீர்மானிக்கப் பட்டது.

**அசௌகரியங்கள், தாமதங்கள் நீக்கப்படும்**

இராணுவ வாக னத் தொடரணி போக்குவரத்தின் போது மக்கள் முகங் கொடுக்க நேரிடு கின்ற அசௌகரி யங்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யப் படுமெனவும், பிற மாவட்டங்களுக்கு செல்வோருக்கான பாதுகாப்பு அனுமதி கிடைப்பதில் ஏற் படுகின்ற தாம தங்கள் அகற்றப் படும் என் றும், பல வீதிகளில் காணப் படுகின்ற வீதிச் சோத னைச் சாவடிகளை படிப்படியாக அகற் றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு மென வும் கலந்துரையாடலின் போது தீர்மானிக் கப்பட்டது.

பருத்தித்துறை - வரணி ஊடான கொடி காமம் வீதி மக்கள் பாவனைக்காகத் திறக்கப் படுவது குறித்து ஆராய்வதாகத் தீர்மா னிக்கப்பட்டது.

யாழ்.பாரவூர்தி உரிமையாளர்களது ஏ-9 பாதையிலான போக்குவரத்து தொடர்பி லும் ஆராயப்பட்டது. இவ்விடயம் தொடர் பில் மேலதிக நடவடிக்கைக்காக அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா "ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதென்று தீர்மானிக்கப் பட்டது. அத்துடன் ஏ-9 பாதையில் வரையறுக் கப்பட்ட பயணிகள் பஸ்சேவையை விரை வில் ஆரம்பிப்பது தொடர்பிலும் கலந்துரை யாடப்பட்டது.

யுத்தம் காரணமாக யாழ்.குடாநாட்டிற்கு கொண்டு வர தடைசெய்யப்பட் டுள்ள பொருள்களின் தடையை நீக்குவது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சுடன் தாம் கலந்துரையாடுவதாக அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

மேற்கண்ட தகவல்கள் சமூக சேவை கள் அமைச்சு யாழ். அலுவலகத்தினர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளன. (அ)


உள்நாட்டு வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

FedEx Express

(யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்)

வாடிக்கையாளரின் நலன்கருதி

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.

கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

MMBL Money Master

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

SALE

Singer machine (தையல் இயந்திரம்) Italian model

Contect: R.Pathmanathan

No. 74, clock tower Road, Jaffna.

T.P. No:- 021 222 9234

தேவை

வலுவற்றோருக்கான மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் உடன் தேவை.

தொடர்பு: 060 221 2688 அல்லது 021 226 3352

MRF முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் டயர்கள்

சாதாரண டயரை விட மும்மடங்கு தூரம் பயணிக்கக் கூடியது




RG இரத்தின கோபால்

இல. 65, 63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 2226185/9231


## மரண அறிவித்தல்கள்

### தர்மராசா புஸ்பராணி

ஊர்காவற்றுறை,கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மராசா புஸ்பராணி நேற்று (20.06.2009) சனிக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணியளவில் கலைமணி வீதி, கட் டைப்பிராயில் நடைபெற்று பூதவுடல் கல்வாரி சுவிசேஷ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமணிவீதி, கட்டைப்பிராய்.
தொ.பே:- 0779122897, 0771224014.

தகவல்:
பு.இந்திராணி(சகோதரி)
இ.புஸ்பலதா (பெறாமகள்)

### செல்வி இராசலட்சுமி கந்தப்பிள்ளை

சாயுடை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இராசலட்சுமி கந்தப்பிள்ளை நேற்று (20.06.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org